Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

දිනමුරසු වාරමලර්

மே. 15-21, 1994 ரூபா 8/50

வாரமலர்
தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 50

வலுவூட்டும் தூக்கம்

"நீ படுக்கும்போது பயப்படாதிருப்பாய்; நீ படுத்துக்கொள்ளும்போது உன் நித்திரை இன்பமாயிருக்கும்." நீதி-3:24

இதை வாசிப்பவர் ஒருவேளை சிறிது காலம் வியாதிப்படுக்கையில் இருக்க வேண்டியதாயிருக்கிறதா? அப்படியானால் "நீ படுக்கும்போது பயப்படாதிருப்பாய்" என்னும் வாக்குறுதியை மனதில் கொண்டு, வருத்தமின்றி படுக்கைக்குச் செல்.

இரவில் படுக்கைக்குப் போகும்போது இந்த வார்த்தை நமக்கு அமைதி அளிக்கட்டும். நாம் தூங்கும் போது நம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியாது. ஆனால் ஆண்டவர் இரவு முழுவதும் நம்மைப் பாதுகாப்பார். ஆண்டவரின் பாதுகாப்பில் படுத்துக் கொள்ளுகிறவர்கள் அரண்மனைகளிலுள்ள அரசரையும் அரசிகளையும் விட அதிகமான பாதுகாப்பு உள்ளவர்கள் ஆகிறார்கள். நாம் படுத்துக்கொள்ளும்போது நம்முடைய கவலைகளையும் புகழார்வங்களையும் கைவிடுகிறவர்களாயிருந்தால், கவலைப் படுகிறவர்களும் பிறர் பொருளை இச்சிக்கிற வர்களும் பெறாத விதமாய் நம் தூக்கத்தினால் புது வலு பெறுவோம். கெட்ட சொப்பனங்கள் அகற்றப்படும். அப்படியே அவை வந்தாலும் அவை சொப்பனங்கள்தானே என்று அவற் றால் ஏற்பட்ட கருத்தை மறந்துவிடுவோம்.

இவ்விதமாய் நித்திரை செய்தல் நமக்கு நல்லது. பேதுரு மறுநாள் மரணமடைய வேண்டும் என்று தீர்ப்பு பெற்றிருந்தாலும் எவ்வளவு ஆழ்ந்த நித்திரையில் இருந்தான். தேவ தூதனின் வெளிச்சம்கூட அவனை விழிப்படையச் செய்யவில்லை; அவனை விலாவிலே தட்டி எழுப்ப வேண்டியதா யிருந்தது. இரத்த சாட்சிகள் எரிக்கப் படும். முன்னும் அவ்விதமே தூங்கி னார்கள்.

ஆன்மீகம்



"அவரே தமக் குப் பிரியமான வருக்கு நித்திரை அளிக்கிறார்." இன்ப மான நித்திரையைப் பெற நம் வாழ்க்கை இன்பமானதாய் இருக்க வேண்டும். நம் மனநிலை இன்பமானதாய் இருக்க வேண்டும். நம் தியானம் இன்பமானதாய் இருக்க வேண்டும். நம் அன்பு இன்பமானதாய் இருக்க வேண்டும்.

குணத்தி பிரபா-கனடா.

ஒற்றுமையாக வாழுங்கள்!

மேலும் நீங்கள் யாவரும் (ஒன்று சேர்ந்து) அல்லாஹ்வுடைய வேதமாகிய கயிற்றைப் பலமாகப் பற்றிப் பிடித்துக்கொள்ளுங்கள். நீங்கள் பிரிந்துவிட வேண்டாம். உங்கள் மீது அல்லாஹ் புரிந்திருக்கும் அருளை நினைத்துப் பாருங்கள். நீங்கள் விரோதிகளாக இருந்த சமயத்தில், அவன் உங்கள் இருதயங்களுள் அன்பையூட்டி, ஒன்று சேர்த்தான். ஆகவே, அவனுடைய அருளால் நீங்கள் சகோதரர்களாகி விட்டீர்கள். நீங்கள் நரக நெருப்புக் கிடங்கருகில் இருந்தீர்கள். அதிலிருந்தும் அவன் உங்களை இரட்சித்துக் கொண்டான். நீங்கள் நேர்வழி பெறும் பொருட்டு அல்லாஹ் தன் வசனங்களை உங்களுக்கு இவ்வாறு தெளிவு படுத்துகின்றான். (அல்குர்ஆன்-3:103)

அன்றி நீங்கள் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் வழிபாடியற்றுங்கள். உங்களுக்குள் தர்க்கித்துக் கொள்ளாதீர்கள். அவ்வாறாயின் நீங்கள் தைரியத்தை மிழந்து, உங்கள் வலிமை குன்றிவிடும். ஆகவே நீங்கள் பொறுமையாக இருங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையுடையவர்களுடன் இருக்கின்றான். (அல்குர்ஆன்-8:46)

விசுவாசிகளே! (யாவரும்) நிச்சயமாகச் சகோதரர்களே! ஆகவே, உங்கள் சகோதரர்களுக்கிடையில் சமுகமாக இருங்கள். அல்லாஹ்வுக்குப் பயந்து நடவுங்கள். இதனால் அவனுடைய கிருபையைப் பெறலாம். (அல்குர்ஆன்-49:10)

அவர்கள் சமாதானத்தின் பக்கம் சாய்ந்தால், நீங்களும் அதன் பக்கம் சாயுங்கள். அல்லாஹ்வையும் நம்புங்கள். நிச்சயமாக அவன் செவியுறுவோனும், நன்கறிந்தோனுமாயிருக்கின்றான். (அல்-குர்ஆன்-8: 61)

ஈமானிய சோதரர்களே!

உலக மக்கள் யாவரும் ஒருதாய் பெற்ற சகோதரர்கள். உலகிலே பிரச்சனைகள் நிகழாமல் வாழ வேண்டுமென்றால் ஒவ்வொரு மனிதனும் புரிந்துணர்வோடும், ஒற்றுமையாகவும் வாழ்வதே சிறந்த வழி. பிரச்சனைகள் வராமலிருக்க ஒற்றுமையாகவும் சமாதானமாகவும் வாழ வல்ல இறைவன் துணை புரிவானாக!

தொகுப்பு: மசூத் அஹமத்-காத்தான்குடி-03.

முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
ஐம்பதாவது வாரத்தில்
முரசு தடம் பதிக்கிறது.

மகிழ்ச்சியோடும்
பல்லாயிரம் வாசகர்களின்
அன்பில் நனைந்து கொண்டிருக்கும்
நெகிழ்ச்சியோடும்
ஐம்பதாவது வாரம் அமோகம்!

ஐம்பதாவது வாரத்திற்குரிய
சந்தோசங்கள் பகிர்ந்து கொள்ள
விசேஷ' இணைப்பு கேட்டு
ஏற்கனவே
நிறைய மடல்கள்-
கரம் வந்து சேர்ந்துள்ளன.

இன்னும் சில வாரங்களில்
உங்கள் முரசுக்கு
வயது ஒன்றாகப் போகிறது.

ஒரு வயதுப் பூர்த்தியை
உவகை பொங்க உற்சாகமாய்
கொண்டாடலாம் அல்லவா?

எனவே-விசேஷ இணைப்பை
ஒரு வயதுப் பூர்த்தியின்
பூரிப்போடு
முரசு உங்களிடம் தரும்!

விளம்பரங்கள் அதிகமாகிவிட்டால்
வருமானம் அதிகரிக்கும்.
உள்ளடக்கங்களின் பெறுமானம்
தேய்மானம் ஆகிவிடும்.
அதனால்தான் விளம்பரங்களை
பெருமளவில் பெற்று பிரசுரிக்காமல்-முரசு
சில சுமைகளையும் தாங்கிக்கொண்டிருக்கிறது.

ஏன்-இதை-சொல்கிறேன் என்றால்
ஐம்பதாவது முரசுக்கும்
விசேஷ இணைப்பு தந்து
ஒரு வயது நிறைவுக்கும்
தனியே ஒரு இணைப்பு தந்தால்
களிப்பாக இருக்குமே என்று
அன்புள்ளங்களில் ஆவல் எழக்கூடும்.
முரசுக்கும் விருப்பம்தான்-எனினும்
அந்த விருப்பத்தை செயலாக்க
முரசு இன்னமும் வளர வேண்டியிருக்கிறது.

இப்போதுதானே ஒரு வயதாகப்போகிறது!
வயது ஏறும்போது வலிவும் அதிகமாகும்.
பொலிவும் பெருக்கமாகும்.
அப்போது-இப்போதிலும்விட
இன்னமும் அதிகமாக, இன்னமும் இனிமையாக
புதிது-புதிதாக
சந்தோசங்களைப் பகிர்ந்து கொள்ளலாம்.

■

தனக்கென்று "ஒரு தனிப் பாணி வகுத்து
முரசு முத்திரை பதித்துவிட்டது.
மேலும்-புதிய பாணிகளோடு
முரசு முன் செல்லும்.

முரசில் வரும் அரசியல் கருத்துக்கள்
எந்தவொரு பக்கத்தையும்
ஏற்றிப் போற்றும் நோக்கத்திலோ
தூற்றி மகிழும் எண்ணத்திலோ
வெளிவந்து முகம் காட்டுவதில்லை.

துரதிஷ்டவசமாக-
"எவரையும் விமர்சிக்கலாம்.
எங்களை மட்டும் விட்டுவிடுங்கள்.
அப்போதுதான் நீங்கள்
அருமையான விமர்சகர்கள்;
அற்புதமான பத்திரிகையாளர்கள்"
என்று ஆசைகாட்டும்
அரசியல் வாதிகள் அதிகமாகிவருகிறார்கள்.

ஜனநாயகம் என்பதை
தம்மை நியாயப்படுத்தும் சாதனமாக்கவும்
தமக்கு சாதகமாகவே
ஜனநாயகம் நாவசைக்கவேண்டும் எனவும்
அவர்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

அவ்வாறான நினைப்புக்கும்,
அந்த நினைப்பை தவறு என்று சொன்னால்
உடனே அநாகரிகமாகப் பேசும்
அடாவடித்தன முறைப்புகளுக்கும்
முரசு வளைந்து கொடுக்காது.
அவ்வாறானவர்களை
அடையாளம் காட்டவும் தயங்காது.

இனிவரும் முரசுகளும்
அவ்வாறுதான் முகம் உயர்த்தும்.
முன்நோக்கி தொடர்ந்து செல்லும்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

தினமுரசு போன்: 820265

கவிதைப்போட்டி இல-47

களம்தேடி வந்த கவிதைகளில்
வெற்றிமுகம் கண்டதுவும், வியக்கப்பட்டவையும்.

பரிசுக்குரிய கவிதை

தேடல்?

தண்டவாளம் இருந்தென்ன
இரயில் வரக்காணோம்.
நாட்டின்
சுதந்திரம் கிடைத்தென்ன?
சமாதானம்
உயிர்பெறக்காணோம்.
ஆடை தொழிற்சாலை
திறந்தென்ன-இங்கே
ஆடைகளைக் காணோம்!

இ. ஜனார்த்தனி
அக்கரைப்பற்று-8.

தங்க மழை வேண்டாம்

சோடி நிலவு வேண்டாம்
ஒரு சோடி உடையே போதும்!
தங்க மழையே வேண்டாம்
தங்க இடமே போதும்!
செல்வி எஸ். ஆனந்தி-கொழும்பு-09.

கருப்பொருள்

அவமானம் என்னுயிரை
அழித்தொழிக்க வந்தீரோ? கவிஞன்
உவமானம் சொல்வதற்கு(க்)
கருப்பொருளைத் தந்தீரோ?
ச.மகாலிங்கம்-வெளிமடை.

எப்ப வந்திடுமோ?

புகையிரதம் வருவதுகூடப்
புரிகிறதே-ஆனால் எமக்கு,
போரில்லாப் புதுவாழ்வு
எப்ப வந்திடுமோ புரியலியே!
ஏ.ஸி.ஒஸ்லி-அநுராதபுரம்.

வியக்கப்பட்டவை

உள்நாட்டுப்போர் இன்னும்
ஓராண்டு நீடித்தால்
உள்ளாரும் இல்லாரும்
எல்லோரும் அம்மணமே.
ராதை மணாளன்-செங்கலடி.

வரவேற்பு

அரைகுறையும் ஆடையில்லா
அம்மணத்தில் நிலைகொண்டு
வடக்கு ரெயில் வரவை
வரவேற்கும் நிலை பாரு.
தெ.லோஜனா-கொழும்பு-15.

ஜனநாயகம்

மரணத்தின்
விளிம்பில்
இங்கு-
ஜனநாயகம்
அமைதியைத் தேடுகிறது.
அன்னூன் எம்.இஸ்மாயில்
கிண்ணியா-07.

அந்தோ பரிதாபம்

"தடம் மீது தலைவைத்து
புகை வண்டிதனை நோக்கும்
புகைவண்டி நிறமறியா
வடபகுதிப் பச்சிளங்கள்.
செ.தயாளினி-கொழும்பு-15.

தொலைவில் வரும்
வண்டியும்
தொலைந்துவிட்ட
வாழ்க்கையும்
எங்களுக்குத் தெரிகிறது
எங்களிலும் தெரிகிறது.
இல்மியா காதர்-மூதூர்-02.

வியப்புத்தான்

கொலைகளுக்கே
கணக்கில்லை
தற்கொலைக்கு
காவல் வேறா?
பண்டிருப்பு-தாசன்.

ஏற்கலாமோ?

போர் வெறியால்
அம்மணமாய்..
ஆகினாலும்
தற்கொலைதான்
தீர்வென்றால்
ஏற்கலாமோ?
ஏ.அஹமது ஜுனைது
ஏறாவூர்-06.

எதிர்பார்ப்பு

எமது
நிர்வாணம் போக்க
நிவாரணத்தோடு
வருமென்ற
நீராவி வண்டி
வருகிறதா பார்?
ஆர்.சுரேஷ்-கலஹா.

துணை

நாம்...
அனாதைகளென்று
யார் சொன்னது-
இந்த(த்)
தண்டவாளங்கள்
துணையிருக்கும்போது!
கவிவேந்தன் ஜிப்ரி
பொத்துவில்.



செய்தி

அகதிப் பயிர்களுக்கு
அவசரச் செய்தியொன்று!
வருகின்ற ரயிலிலும்
வருவது ஆயுதமே!
ரேணுகா றிபாய்தீன்-ஏறாவூர்-02.

வருகுதில்லையே!

உண்ண உணவில்லை
உடுக்க உடையில்லை
உயிரை விடுவதற்கும்
ரயிலும் வருகுதில்லை.
எப்.ஜி.லேகா-கொழும்பு-13.

மீண்டும்?

யாழ் தேவி
மீண்டும் நம்மூர்
வருமா?
எஸ்.உமையவன்
வவு/சின்னப் புதுக்குளம்.

இணையுமா?

தம்பிகளே, தம்பிகளே!
தண்டவாளங்களைப் போல
தமிழ் இயக்கங்களும்
இணையப் போவதுமில்லை!
எங்கள் துயரத் தீ
அணையப் போவதுமில்லை!
செ. குணரத்தினம்-மட்டக்களப்பு.

வேதனைக்குரல்

தண்டவாளத்திலும்,
சத்தியாக் கிரகமென்று
கண்டவர்கள் ஓடிப்போய்
கடுகதிக்கு சொல்லிடுங்கோ.
சிவலிங்கம்-ஜெயா-மட்/பிள்ளையாரடி.

போதாதோ?

போர் என்ற அரக்கன்-எங்கள்
போர்வைகளைப் பறித்தமையால்,
போர்வையற்று நிற்கிறோம்...
போதாதோ? உங்கள்
போர் வெறியாட்டம்!
ஜி.ஸ்ரீநேசன்-மட்/இந்துக்கல்லூரி.

கவிதைப் போட்டி இல-50

சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பிவையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=.

அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் திகதி 21.05.1994.

—முகவரி—
கவிதைப் போட்டி இல: 50
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு-5

வாசகர் சாலை

அன்பு முரசே,

தித்திக்கும் ஆக்கங்களால் எண்ணற் றோரை திகைப்பில் ஆழ்த்தும் உனது பணியினை பாராட்டி வர்ணிக்க வார்த்தைகள் இல்லை. நீ தரும் அரசியல் அலசல் ஒரு கலக்கு கலக்க, ரசிகனின் இலக்கிய நயமும் தொடர் கதையும் திகிலடையச் செய்கிறது. பாராபட்சமற்ற உனது பணி தொடர எனது வாழ்த்துக்கள்.

எம்.எஸ்.எம்.ராசிக்-வரக்காமுறை.

□□

அன்பு தினமுரசே,

உன் ஒவ்வொரு பக்கமும் அருமையே அருமை. அதாவது ஆன்மீகம், எக்ஸ்ரே ரிப்போர்ட், உலக ரவுண்டப், அரசியல் அலசல், ஸ்போர்ட்ஸ், லேடிஸ் ஸ்பெசல், தகவல் பெட்டி, சினிவிசிட் (வர்ணத்திரை) பாப்பாமுரசு, தேன் கிண்ணம், மருத்துவ விந்தைகள், தொடர்கதை, சிறுகதை, மகாபாரதம், அறியாதவைகளை அறியத் தரும் கடைசி பக்கம்! முரசே உன்னை வாழ்த்த என் இதயம் ஏங்குகிறது. எந்நாளும் எங்கள் கரங்களில் நீ வந்து சேரவேண்டும். பலகோடி வாழ்த்துக்கள்.

பி.ஜீவரட்ணம்-அக்கரப்பத்தனை.

□□

மே 1ம் திகதிக்கான முரசில் 'அற்புதன்' வழங்கிய நில்! கவனி!! முன்னேறு!! சிந்தனைகள் வெகு அருமை. நல்ல சிந்தனைகள். வளமான இதமான வரிகள். ஆரம்பமே அருமை. தொடர்வதைக் காண காத்திருக்கிறோம்.

ஷர்மி-கண்டி.

□□

சிந்தைக்கு விருந்து

சிந்தைக்கு விருந்தாக- வித்தியாச மாக 'அற்புதன்' அளிக்கும் புதிய பகுதியான 'சிந்திக்கலாம் இங்கே...' அம்சம் அற்புதம். இதுபோன்ற பல்வகை புதிய பகுதிகளை ஆவலோடும், ஆசையோடும் வரவேற்க வும் வாழ்த்தவும் அன்பு வாசகர் நாம் பிரியத்தோடு காத்திருக்கிறோம். இலக்கிய நயத்திலும், கொலைவிழும் நேரத்திலும் வழக்கம்போல் தூள் பரத்தும் அபிமான ரசிகனுக்கும் நமது வாழ்த்து. பாராட்டு.

கோட்டைமுனை-முத்துமணி-பதுளை.

□□

"நலம் 'வாழ எந்நாளும் என் வாழ்த்துக்கள். தமிழ் கூறும் வளமான தினமுரசு(க்கு)! நீ சுமந்துவரும் அம்சங்களும், சமாச்சாரங்களும் சாதாரணமானவையல்ல. இன்று சக்கை போடு போடும் இதழ் நீ என்றால் அது மிகையாகாது.

கலைச்செல்வன் பாரிஸ்-அக்குறனை.

□□

அன்பின் தினமுரசே!

உன்னில் வெளிவரும் அத்தனை அம்சங்களும் சுப்பர். உலக ரவுண்டப், தகவல்பெட்டி, மகாபாரதம், எக்ஸ்ரே ரிப்போர்ட், மருத்துவ விந்தைகள் இன்னும் எத்தனையோ அத்தனையையும் தீஞ்சுவையுடன் தருகிறாய். உன் பணி தொடர வாழ்த்துக்கள்.

த.தியாகராஜா-நமுனுகுல பஜார்.

□□

தித்திக்கும் தினமுரசே, வாரந் தோறும் வளர்பிறைபோல் உதயமாகும் வாரமலரே, உன் வருகை எங்கள் குடும்ப அங்கத்தினர்கள் அனைவரை யும் கொள்ளை கொண்டுள்ளன. நீ சுமந்துவரும் தொடர்கதையும், சிறுகதைகளும் மற்றும் பல அம்சங் களும் மெய் மறக்க செய்கின்றன. இன்னும் புதிய தகவல்களை என் போன்ற இன்னும் பலருக்கு அளிக்க உன்னை என்றும் வாழ்க என்று வாழ்த்தும் எங்கள் குடும்பத்தினர்.

எஸ்.ஏ.அலெக்ஸ்,புஸ்பா, ஜெசிந்தா குமுக்கத்துர.



தின்முரசே,

மகாபாரதம் என்றால் என்ன என்று தத்தளித்த எனக்கு தெட்டத் தெளிவாய் எடுத்துரைத்தாய் நீ. நன்றிகள் பல கூறி இதுபோன்ற அம்சங்களைச் சுமந்துவர வாழ்த்து கின்றேன். வளர்க உன் சேவை.

பாலமுனை-வாஸிட்.

□□

அன்பின் முரசே!

சென்ற முரசு ஸ்போர்ட்ஸ் பகுதியில் 'ஒஸ்ரலேசியா கிண்ண'த் திற்கான போட்டியில் பாகிஸ்தான் ஆடிய அபாரமான ஆட்டத்தை சற்று மிகையாக விமர்சனம் செய்து விட்டு இந்தியாவின் தோல்வியை ஏனோ போஸ்ட் மோர்டம் செய்ய துடங்கிவிட்டீர். இந்தியாதான் வெற்றி பெற்றிருக்க வேண்டும் என்ற ரீதியில்தான் உமது விமர்சனம் இருந்தது.

ஹாஜி ஹஸன்-கொழும்பு-10.

□□

மலை போல் கருத்துக்களை
மாலை போல் கோத்தும்
சிலை போல் வடித்தும்
அலை போல் எங்கும் பரப்பி
நிலையாக மக்கள் மனதில்
தளை போல் வளர்த்து வரும்
முல்லை முரசே! உனக்கு எம்
எல்லையில்லாப் பாராட்டுக்கள்.

டி.வானதி-சென்னை-600091.

□□

வாரா வாரம் மலர்ந்து வரும் தினமுரசு வார மலரில் அத்தனை அம்சங் களும் பிரமாதம். ஆனால் இறை சிந்தனைக்கு இடமளிக்க தவறுவது ஏனோ? விஞ்ஞானத் தின் வளர்ச்சிக்கு மத்தியில் மெஞ்ஞானம் மெல்ல மௌனமாகிவிட்டதோ? சமய ஆக்கங்களுக்கும் இடமளித்தால் மேலும் சிறப்பாக அமையும்.

அம்பிகா வேலையா-இறக்குவானை.

□□

வாரந்தோறும் நடை பயின்று வரும் தினமுரசே! உன்னுள் அடங்கியுள்ள விடையங்கள் எம்மாத்திரம்! அவை அனைத்தையும் எம் இதயங்கள் அறிந்து அலைமோதிக் கொள்ளுகின்றன. நீ என்றென்றும் நிலைத்திட எனது இனிய வாழ்த்துக்கள்.

கு.கலைமகள்-திருகோணமலை.

□□

எம்மை தித்திக்க வைக்கும் தினமுரசே, 48வது முரசின் சிறுகதைகளில் ஸ்ரீவரணி வாழையூர் எழுதிய 'விழிக்குள் விழுந்தவள்' கவிதைக் கதையும், எம்.சுரேஷ் எழுதிய 'சித்திரைச் செவ்வானம் சிரிக்கக் கண்டேன்' கவிதை நடை கதை வாசித்து வயிறு குலுங்க சிரித்தேன். பல்வேறு சிறப்பான அம்சங்களோடு வெளிவரும் முரசே நீ இன்னும் சிறப்புடன் வெளிவர என் நல்வாழ்த்துக்கள்.

மகேஸ்வரி ராமதாஸ்-வத்தேகம.

“போராட்டத்தை அடக்கவே பொருளாதாரத் தடை!”

அழுத்தங்களுக்கு அடிபணிய மாட்டோம் என்கிறார் பிரபா!!



வே.பிரபாகரன்

வடபகுதியில் விவசாய உற்பத்தியில் சாதனை படைத்த விவசாயிகளுக்கு புலிகள் அமைப்பினால் 'வேளான் மன்னன்' விருதுகள் வழங்கப்பட்டன.

கடந்த 6ம் திகதி நடைபெற்ற அந்த விழாவில் கலந்துகொண்ட பிரபாகரன் ஆறு பேருக்கு விருதுகள், சான்றிதழ்கள், தங்கப் பதக்கங்கள் என்பவற்றை வழங்கினார்.

விழாவில் வே. பிரபாகரன் தனது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளதாவது:

“எமது போராட்டத்தை உடைத்துவிடும் நோக்கத்தோடு அரசாங்கம் பொருளாதாரத் தடைகளை விதித்து வருகிறது.

“கடந்த 4 ஆண்டு காலமாக பெரும் எதிர்ப்புகளையும், சவால்களையும் நாம் சந்தித்து வருகிறோம். எனினும் வியக்கத்தக்க முறையில் முகம் கொடுத்து வருகிறோம்.

“பொருளாதாரத் தடையால் விளைந்த பாதிப்பும் அதனால் ஏற்பட்ட பற்றாக்குறையும், அந்தப் பற்றாக்குறையால் ஏற்பட்ட தேடுதல்களும் ஒட்டு மொத்தத்தில் சுய சார்பு பொருளாதாரத்தின் அவசியத்தையும், முக்கியத்துவத்தையும் எமது மக்களுக்கு உணர்த்தியுள்ளது.

“அழுத்தங்களுக்கு அடி பணிந்து போகாது எமது மண்ணின் வளத்தில் நாம் தங்கி நிற்கவேண்டும். இன்று பல வழிகளில் உள்ளூர் உற்பத்தி உயர்ச்சி கண்டுள்ளது.

“பொருளாதார அழுத்தம் உள்ளூர் பொருளுற்பத்தியை ஊக்குவித்துவருகிறது.

“அரசியல் விடுதலை என்ற குறிக்கோளுடன் பொருளாதார விடுதலையும் ஒன்றிணைந்து நிற்கிறது. நாம் நிர்மாணிக்கப் போகும் நாடு தன் காலில் தனித்து நின்று, வளர்ச்சி பெறக்கூடியதாக இப்போதிருந்தே அத்திவாரத்தை கட்டியெழுப்ப வேண்டும்.

“இயற்கையின் கொடையாக எமக்கு வழங்கப்பட்ட வளங்களை இனம் கண்டு பயன்படுத்த வேண்டும். வேளாண்மையும், கைத்தொழிலும் பொருளாதார கட்டு மானத்திற்கு அடிப்படையானவை. இந்த இரு துறைகளையும் கட்டி வளர்ப்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

“உழைப்பவர்களை ஊக்கப்படுத்தி அவர்களது ஒத்துழைப்போடு உற்பத்தியைப் பெருக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் ஒரு கட்டமாகவே வேளாண்மைத் துறைகளில் போட்டிகளை நடத்தி வேளாண்மை மன்னர்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள்.”

இவ்வாறு பிரபாகரன் அந்த வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

—பிரபா வந்தால் மட்டுமே பேச்சு— அரசின் நிலையில் மாற்றம் இல்லை!

புலிகள் அமைப்புடன் அரசாங்கம் சில தனிநபர்கள் மூலமாக பேச்சுக்கான முயற்சிகளை நடத்தி வருவதாக வெளியான செய்திகளை அரசாங்க வட்டாரங்கள் மறுத்துள்ளன.

சுயேச்சைக் குழுவைச் சேர்ந்த ஈரோஸ் உறுப்பினர்கள் சிலர் பாராளுமன்றம் வரக்கூடும் என்றும் சில செய்திகள் வெளியாகியிருந்தன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஈரோஸ் சுயேச்சைக் குழுவினரை அழைக்க முயற்சி செய்வதாகவும் பேசப்பட்டது.

அந்தச் செய்திகளை முற்றாக நிராகரித்து கருத்துத் தெரிவித்த அரசாங்க வட்டாரங்கள், புலிகளோடு பேசுவதானால் அரசாங்கம் அதனை பகிரங்கமாக அறிவிக்கும்.

பேச்சுக்கள் நடப்பதாயின் புலிகளின் தரப்பில் இருந்து பிரபாகரன் கலந்து கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஜனாதிபதியும், அரசாங்கமும் உறுதியாக இருப்பதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

சமீபத்தில் ஜனாதிபதியை சந்தித்துப் பேசிய அரசியல் கட்சி தலைவர் ஒருவர் முரசிடம் கருத்துத் தெரிவிக்கும்போது, “கடந்த கால பேச்சுவார்த்தையில் புலிகள் பிரேமதாசாவின் நல்லெண்ணத்தை தமக்கு சாதகமாக்கிக்கொள்ள முற்பட்டு அவரையும் இறுதியில் ஏமாற்றிவிட்டார்கள் என்ற அபிப்பிராயத்தையே ஜனாதிபதி கொண்டிருக்கிறார் என்று தெரிவித்தார்.

இதேவேளையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் மூலமாக பாராளுமன்றம் செல்லும் திரு.காமினி திசாநாயக்காவுக்கு முக்கிய அமைச்சுப் பொறுப்பு ஒன்று வழங்கப்படலாம் என்று தெரிகிறது.

புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழ் அமைப்புக்களோடு சுமுகமான உறவுகளை அரசாங்கம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அவர் கருதுவதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறுகின்றன.

எப்படியிருப்பினும் தற்போதைய அரசியல் சூழலில் அரசாங்கம் புலிகளோடு பேசுவதற்கு உடனடி சாத்தியங்கள் இல்லை என்றே தெரிகிறது.

தெற்கில் ஏற்பட்டுவரும் அரசியல் மாற்றங்களை அவதானித்துவரும் புலிகளும் அரசாங்கத்தோடு பேசுவதற்கு உடனடியாக முன்வரமாட்டார்கள் என்றே கூறப்படுகிறது.

தற்போது யாழ்ப்பாணத்தில் வெளியாகியுள்ள புலிகள் அமைப்பின் உத்தியோகபூர்வ பத்திரிகையான 'விடுதலைப் புலிகள்' தனது ஆசிரியத் தலையங்கத்தில், அரசு பாரிய போருக்கு தயாராகி வருவதாக தெரிவித்திருக்கிறது.

மாற்றுக் கருத்துக்களை மறுக்கும் செயல்!

பாரிசில் சபாலிங்கம் கொலைக்கு கண்டனம்

பிரான்ஸில் பாரிஸ் நகரில் இம் மாதம் முதலாம் திகதி (1.5.94) சபாலிங்கம் என்னும் இலங்கைத் தமிழர் இனம் தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இவர் மாத்தையா குழுவைச் சேர்ந்தவர் என்று வெளியான செய்திகளில் உண்மை கிடையாது. எந்தவொரு இயக்கமும் சாராதவராகவே இருந்தார் என்று பாரிஸில் உள்ள அவரது நண்பர்கள் கூறுகின்றனர்.

எனினும் இவர் பாரிசில் இருந்து வெளியிட்ட சில ஆவணங்கள் புலிகள் அமைப்பை விமர்சிக்கும் கருத்துக்களை உள்ளடக்கியிருந்தன.

புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழ் அமைப்புக்களோடு சபாலிங்கம் சுமுகமாக நட்புறவு கொண்டிருந்தார்.

இவர் சுட்டுக்கொல்லப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் திரு.சுரேஸ் பிரேமச்சந்திரன் அவரை பாரிசில் உள்ள அவரது இல்லத்தில் சந்தித்தார் என்றும் கூறப்படுகிறது.

தமிழ் மாணவர் பேரவையின் ஆரம்பகால முன்னோடிகளில் ஒருவராகவும் விளங்கியவர் சபாலிங்கம்.

இவரது கொலைக்கு புலிகளே காரணம் என்று பரவலாக நம்பப்பட்டபோதும் பாரிசில் உள்ள புலிகளின் பிரமுகர் திரு.லோரன்ஸ் திலகர் அதனை மறுத்துள்ளார்.

தமக்கும் இக் கொலைக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்று கூறியுள்ள திலகர், சபாலிங்கம் கொலையை கண்டிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

பாரிஸ் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மே மாதம் 12ம் திகதி பாரிசில் சபாலிங்கம் அஞ்சலிக் கூட்டம் நடைபெறுகிறது.

'சபாலிங்கம் அஞ்சலிக் குழு நண்பர்கள்' என்ற பெயரில் பாரிசில் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் உள்ள விடயங்கள் கீழே தரப்படுகின்றன:

இதுவரை காலமும் எழுத்துக்கும் இன்னொரு அரசியல் நிலைப்பாட்டுக்கும் எதிராக இலங்கையில் அரசியற் படுகொலைகளை நடத்திய அதே முகங்கள் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், ரஜனி திராணகம, என்று தொடரும் முடிவில்லாத வரிசையில் பாரிசில் சபாலிங்கத்தையும் தங்கள் வெறிக்கு இரையாக்கியுள்ளனர். மே மாதம் முதலாம் திகதி பிற்பகல் 1 மணியளவில் துப்பாக்கி சகிதம் அவரது வீட்டுக்குள் நுழைந்த இரண்டு தமிழர்கள் மனைவி குழந்தை முன்னால் சபாலிங்கத்தின் மீது பல துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்த பின் தொலைபேசி மற்றும் சகல தொடர்புகளையும் நாசஞ் செய்து குடும்பத்தினரையும் எச்சரித்துத் தலைமறைவாகி விட்டனர்.

போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவரான சபாலிங்கம் (14.01.1952- 01.05.1994) இன்று எஞ்சியிருந்த ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவராவார்.

1970களில் பயங்கரவாதிகள் என்ற போர்வையில் சிறிலங்கா அரசு, விடுதலையை முன்னெடுத்த தமிழ் இளைஞர்களை கைது செய்த வேளையில் சபாலிங்கம் பாலமொன்றுக்கு குண்டு வைத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இரண்டு வருடங்கள் (1973-1975) சிறையில் இடப்பட்டார். மாடிச்சிறையில் இருந்து தப்பி ஓடும் போது நாரியில் முறிவேற்பட்டு ஐந்து வருடங்கள் சிறிலங்கா அரசின் தேடுதல் வேட்டைக்குத் தலைமறைவாக ஈழத்தில் வாழ்ந்து அதன் பின்னர் பிரான்சு வந்து சேர்ந்தார்.

தமிழ்ச் சமூகத்தின் கடந்த கால ஈழப் போராட்டமாயினும் சரி இன்றைய இடம்பெயர்ந்த தமிழர் வாழ்வாயினும் சரி அனைத்தினதும் ஆவணப்படுத்தலின் தேவையை உணர்ந்து கொண்ட சபாலிங்கம் நிகழ்வுகளை தன்னால் முடிந்த அளவு கோவைப்படுத்தி வந்திருக்கின்றார்.

ஆசியா (ASSEAY- ஈழம் கலைகள் சமூகவிஞ்ஞானக்கழகம்) எனும் இடம்பெயர்ந்த தமிழர்களின் வெளியீட்டு நிறுவனத்தின் இயக்குநராகவிருந்து சமகாலக் கவிஞர்களான ஜெயபாலன், சேரன், அருந்ததி செல்வம், சோலைக்கிளி ஆகிய கவிஞர்களின் கவிதைகளையும் தாரகி அவர்களின் ஈழவிடுதலைப்போராட்டம் பற்றிய பத்தி எழுத்துக்களை “The Eluding Peace” எனும் பெயரிலும் வெளியிட்டுள்ளார். மேலும் “புத்தளம் வரலாறும் மரபுகளும்” என்ற நூல் வெளிவர உதவியும் மற்றும் இயக்க உட்படுகொலைகளைச் சித்தரிக்கும் “புதியதோர் உலகம்”, 1958ல் தமிழர்கள் மீதான இனப்படுகொலையை கண்டித்து தார்சி வித்தாச்சி அவர்கள் எழுதிய இலங்கையில் தடை செய்யப்பட்ட Emergency 58, யாழ்ப்பாண வைபவமாலை, யாழ்ப்பாண முஸ்லிம் மக்கள் வரலாறு போன்ற நூல்களை மறுபிரசுரம் செய்துமுள்ளார்.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் பற்றிய யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் குழுவின் அறிக்கைகளை பிரெஞ்சு மொழியில் வெளிக்கொணர்ந்ததுடன் புகலிடத்தில் தமிழர்களின் அரசியல் இலக்கியச் செயற்பாடுகளில் தன்னை முடிந்தவரை ஈடுபடுத்திக்கொண்டார்.

தனிமனிதப் படுகொலைகளாலேயே ஈழவிடுதலைப் போராட்டம் சர்வதேசமெங்கும் நலிந்து கொண்டிருக்கும் இந்த வேளையில் சபாலிங்கத்தைப் படுகொலை செய்தமை ஈழத்தில் தமிழர்கள்மேல் நடாத்தப்படும் கொடூரமான தாக்குதல்களை அகில உலக ரீதியில் வெளிப்படுத்துவது மேலும் சிக்கலாகியுள்ளது. இக் கொலையில் தாங்கள் இலாபமடையக்கூடும் என்று நினைப்போர் அரசியலை என்னவென்பது? ஈழத்தில் மட்டுமன்றி இன்று ஐரோப்பாவிலும்கூட தமிழரை அச்சுறுத்தும் இக் காட்டு மிராண்டித்தனமான கொலை மாற்றுக் கருத்துக்களை செவிமடுக்கும் தாற்பரியம் தமிழர்களிடமிருந்து எட்ட எட்டப் போவதை மீண்டும் எமக்குக் காட்டி நிற்கிறது.

சிறு பொறிகளைக்கூட கண்டு அஞ்சும் கோழைகளே!
கொலைகளை நிறுத்துங்கள்!
மௌனங்கள் பேசும் நாளொன்று தோன்றும்!

என்று அந்தப் பிரசுரத்தில் அஞ்சலிக் குழுவினர் குறிப்பிட்டுள்ளனர்.

உலகத் தொலைக்காட்சி சேவையின் பின்னணி! 2 கோடி ரூபாய்கள் கிடைத்தது எப்படி?

ஜெர்மனியில் உள்ள இலங்கைத் தமிழரான தனிநாயகம் செல்வநாயகம் என்பவரால் உலக தமிழ் தொலைக்காட்சி சேவை ஒன்று ஆரம்பிக்கப்படப் போவதாக விளம்பரம் செய்யப்பட்டது.

இதனையடுத்து இலங்கை அரசு எடுத்த சில நடவடிக்கைகளும், அதனை தடுக்க அதிகாரி ஒருவரை ஜெர்மனுக்கு அனுப்பப் போவதாக கூறியதும் பத்திரிகைகளில் வந்து பரபரப்பை ஏற்படுத்தின.

இதற்கிடையே தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் திரு.மு.சிவசிதம்பரமும் அவசர அவசரமாக ஓர் அறிக்கை விட்டிருந்தார்.

அந்த அறிக்கையின்படி தனிநாயகம் என்பவர் தமிழர்களது கலை, கலாசாரத்தை வளர்க்க அயராது பாடுபடும் ஒருவர் போல கருதவேண்டி ஏற்பட்டது.

உடனடியாக அந்த உலகத் தொலைக்காட்சி பின்னணி பற்றி முரசு ஆராய்ந்தது.

24 மணிநேரமும் இயங்கும் தொலைக்காட்சி என்று உலகத் தமிழ் தொலைக்காட்சி பற்றிய விளம்பரங்கள் வெளிநாட்டு பத்திரிகைகள் சிலவற்றில் வெளியாகியிருந்தன.

அந்த விளம்பரத்தில் பல்வேறு நாடுகளிலும் உள்ள தமது தொடர்பு நிறுவனங்கள் என்று குறிப்பிடப்பட்டு தொலைபேசி இலக்கங்களும் வெளியிடப் பட்டிருந்தன.

ஆனால், அந்த தொலைபேசி இலக்கங்கள் சில பத்திரிகை காரியாலயங்களது தொலைபேசி இலக்கங்களாகும்.

குறிப்பிட்ட பத்திரிகைகளது சம்மதம் பெறப்படாமலேயே அந்த இலக்கங்கள் வெளியிடப்பட்டிருந்தன.

தமக்கு உலகளாவிய தொடர்புகள் இருப்பதாகக் காட்டுவதற்கு அவ்வாறு செய்திருக்கலாம்.

சம்பந்தப்பட்ட தொலைபேசி இலக்கங்கள் சிலவற்றோடு தொடர்பு கொண்டபோது தமக்கும் உலக தமிழ் தொலைக்காட்சிக்கும் ஒரு தொடர்பும் இல்லை, உறவும் இல்லை என்றார்கள்.

தனிநாயகம் செல்வநாயகம் என்பவர் நெடுந்தீவைச் சேர்ந்தவர். சிறந்த வியாபாரி. போதை மருந்து கடத்தலில் நிறைய சம்பாதித்திருப்பவர். அதிஷ்டலாப சீட்டு விழுந்ததாகவும், அதன் மூலம் ஒரு தொகைப் பணம் கிடைத்ததாகவும் அதனையும் வைத்தே 2 கோடி ரூபா மூலதனத்தில் உலகத் தமிழ் தொலைக்காட்சி ஆரம்பிக்கவுள்ளதாகவும் தன் நண்பர்களிடம் கூறியிருக்கிறார்.

அந்த தொலைக்காட்சி சேவைக்கு நிகழ்ச்சி தயாரிப்பாளராக அறிவிக்கப்பட்டிருப்பவர் திருமதி குணரூபினி செல்வநாதன். இவரது சொந்த இடம் யாழ் மாவட்டத்தில் உள்ள பருத்தித்துறை - கடற்கரை வீதி. இவரது கணவர் திரு.செல்வநாதன் 84 அல்லது 85ம் ஆண்டில் இலங்கையில் சிறையில் இருந்தவர். தொழில்: வியாபாரம்.

உலகத் தொலைக்காட்சியின் முக்கிய நோக்கம் தமிழ் திரைப்படங்களை காண்பிப்பதோடு இடைக்கிடைய செய்தித் துண்டுகளும் வெளியிடுவது. உலகளாவிய ரீதியில் தமிழ் வர்த்தக நிறுவனங்களிடம் விளம்பரம் திரட்டி வருமானம் சேகரிப்பது.

உலகத் தமிழ் தொலைக்காட்சி சேவை வர்த்தக ரீதியில் வெற்றி பெறமுடியாது என்பதே பொதுவான அபிப்பிராயமாகும்.

உலகத் தமிழ் தொலைக்காட்சி ஆரம்பிக்கப்படுவதைக் கண்டு இலங்கை அரசு ஏன் பயப்படுகிறது என்று தெரியவில்லை.

வெளிநாடுகளில் தனிநபர்கள் தொழில் தொடங்க உள்ள உரிமையை இலங்கைத் தமிழர் என்ற காரணத்தால் ஒருவர் இழக்க வேண்டி ஏற்படுவதும், அரசு தடுக்க முற்படுவதும் நியாயமானதல்ல.

அதனை சுட்டிக்காட்டவேண்டிய தேவையும், கண்டிக்க வேண்டிய அவசியமும் தமிழ் அமைப்புக்களுக்கு இருக்கிறது. ஆனால் தவறான நபர்களை கலை கலாசார காவலர்களாக சித்தரிப்பதுதான் தவறானது. இத் தவறுகளால் அவர்கள் நாளை இங்கு வந்து தேர்தலில் நிற்கக்கூடும். தோல்வியடைந்தால்கூட தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்றமும் செல்லக்கூடும்.

பிரபாவின் மெய்காப்பாளர் தற்கொலை!

செம்மணி சுடலையில் பிணம்!!

புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் மெய்காப்பாளர்களில் ஒருவர் றிச்சாட். அவர் கடந்த 01.05.94 அன்று யாழ்ப்பாணம் நல்லூர் தொகுதியில் உள்ள செம்மணிச் சுடலையில் பிணமாகக் கிடந்தார்.

இது பற்றி முரசுக்கு கிடைத்த தகவல்களை கீழே தருகிறோம்:

யாழ்ப்பாணம் அரியாலையைச் சேர்ந்த தர்மலிங்கம் தியாகலிங்கம் (றிச்சாட்) என்பவர் 44/1, அம்மன் வீதி, (கொட்ட பேச்சியம்மன்) நாயன்மார்க்கட்டில் பிறந்தவர். இவர் தனது க.பொ.த (சா/த) ஐ யா/ கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்திலும் கல்வி பயின்றார். 1984ம் ஆண்டு பிற்பகுதியில் புலிகள் இயக்கத்தில் சேர்ந்தார். இவர் இந்தியாவில் பயிற்சி பெற்று யாழ்ப்பாணம் வந்தார். இந்திய அமைதிப்படை இலங்கை வந்தபோது அரியாலைப் பகுதியில் ஜவான், ரத்தின இவர்களுடன் சேர்ந்து றிச்சாட்டும் தாக்குதல்களை நடாத்தி தலைமைப்பீடத்தின் நன்மதிப்பை பெற்றவர். பின் அமைதிப்படை சென்ற பின்னர் யாழ் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்திற்கு அருகில் அமைந்துள்ள டாக்டர் கந்தையா என்பவரது மாடி வீட்டில் புலிகளின் தலைமை உணவுக் களஞ்சியத்திற்கு களஞ்சியப் பொறுப்பாளராக கடமை புரிந்தவர். பின்னர் பிரபாகரனின் குடும்பப் பாதுகாப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில் புளொட் இயக்கத்தைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவரின் மனைவியுடன் நட்பு ஏற்பட்டது. இவர்களின் நட்பு நாளுக்கு நாள் முற்றி வாரத்தில் மூன்று முறை பெண்ணின் வீட்டில் சந்திக்க வைத்தது. இச் சந்திப்பை புலிகளின் உளவுத்துறை அறிந்து, றிச்சாட்டுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தும் அவர் அதை தட்டிக்கழித்து வந்தார். இதனால் அவர் பெண்ணுடன் இருக்கும்போது நேரிடையாக கைது செய்யப்பட்டார். உடனே அவர் சயனைட் விழுங்க முற்பட அது தோல்வியில் முடிந்தது. பின்னர் அவர் புலிகளின் உளவுத்துறையினரால் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார். நான்கு மாதங்களின் பின் 27.04.94 இரவு 11 மணிக்கு றிச்சாட் தடுப்புக் காவலில் இருந்து தப்பியோடிவிட்டார். அல்லது ஒரு சில புலிகளால் அவர் இரகசியமாக வெளியேற்றப்பட்டார். உடனே குடாநாடு முழுவதும் புலிகளால் சோதனை நடந்தது. மீன்பிடிப்பதற்குக்கூட வள்ளங்கள் கடலில் இறக்கப்படவில்லை. கிளாலி படகுச் சேவை நிறுத்தப்பட்டது. இந்நிலையில் றிச்சாட் தப்பி வெளியேற வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை.

இந்நிலையில் 01.05.94 அதிகாலை இரண்டு மணியளவில் செம்மணிச் சுடலையடிக்கு வந்த றிச்சாட் தனது வீட்டின் பகுதியை புலிகள் முற்றுகையிட்டதால் தாய்-தந்தையரை சந்திக்க முடியாமலும் புலிகளிடம் உயிருடன் பிடிபடக்கூடாது என்ற நோக்கத்தினாலும் கிருமிநாசினி அருந்தி செம்மணி மயானத்திலேயே உயிர்துறந்தார். 02.05.94 அதிகாலை 6.30 மணிக்கு ஒரு பிணம் செம்மணியில் இருக்கிறது என மக்கள் கூற புலி-காவல்துறையினர் சென்று பார்த்தனர். றிச்சாட் பிணமாக கிடந்தார். ஒரு சாரம் அணிந்து சேட் கிழிந்த நிலையில் காலில் செருப்பும் இருந்தது. பிணத்தைப் புலிகளின் காவல்துறை கொண்டு சென்றபின்னர் 02.05.94 பிற்பகல் உடனடியாக தகனம் செய்யும்படி கூறி றிச்சாட்டின் தந்தையிடம் உடலை கையளித்தனர். எதுவித ஆடம்பரமோ இயக்க மரியாதையோ இன்றி உடல் தகனம் செய்யப்பட்டது.

'ராகிங்' —கல்லூரி நிர்வாகம் கடும் நடவடிக்கை!

(திருமலை நிருபர்)

திருகோணமலையில் பிரபல ஆண்கள் கல்லூரியான ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் ராகிங் நடவடிக்கையில் ஈடுபட்டமைக்காக முப்பதுக்கும் மேற்பட்ட உயர்தர மாணவர்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வருடம் க.பொ.த உயர்தர வகுப்புக்குப் புதிதாகச் சேர்ந்துள்ள மாணவர்களை கேலி செய்து உள வதைக்கு உள்ளாக்கியதால் கல்லூரி நிர்வாகம் இந்த முடிவை எடுத்துள்ளது. இந்நடவடிக்கையின் காரணமாக மாணவர் தலைவர் ஒருவருடைய அதிகாரம் பறிக்கப்பட்டது. இரண்டு மாணவர்களுக்கு இருவார கால கல்லூரித் தடையும், பதினான்கு பேருக்கு ஒருவார காலத் தடையும் விதிக்கப்பட்டதுடன், மேலும் பதினெட்டு மாணவர்கள் பெற்றோரை அழைத்து வருமாறும் பணிக்கப்பட்டார்கள். சகல மாணவர்களும் தங்கள் தண்டனைக் காலம் முடிந்ததும், கல்லூரியில் பகிரங்க மன்னிப்பு கேட்க வெண்டுமெனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

விளம்பரப் பகுதி

மலையாள மாந்திரீகம்

வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் கடந்த 27 வருடங்களாக மாந்திரீகத் துறையில் உண்மையான, நிலையான சேவையை ஒட்டியே தற்பொழுது எனது நிறுவனம் வரையறுக்கப்பட்ட தனியார்துறையாக (PVT. LTD) உருவாகியுள்ளது. இதன் சொத்து அனைத்துமே சிறீ துர்க்கா அம்மனுக்கே.

இதைவிட உண்மையை அறிய நேரில் வாருங்கள்.
உங்கள் குறை என்ன?
வாழ்வில் நிந்திப்பா?
வறுமையில் தவிப்பா?
இஷ்ட தேவவைகளில் குறையா?
இஷ்டப்பட்டவனையோ,
இஷ்டப்பட்டவளையோ
தீர்க்கமாகவே அடைந்து தீர வேண்டுமா? இன்னலுக்குப் பின் இன்னலாக வரும் தறுவாயில் எதிர் நீச்சலுக்கு ஏணிப்படியாக பற்பல உற்சாடனங்கள் உண்டு.
இன்னும் வசியத் தொப்பி, தீர்க்க முடியாது என முடிவெடுக்கப்பட்ட ஆஸ்துமா நோய், தீராத நோய்கள் அனைத்துக்கும் அம்மனிடம் வாருங்கள்.



கொழும்பு கொட்டாஞ்சேனை சிறி முத்துமாரி அம்மன் கோவில் அருகிலும், பிக்கரிங்ஸ் வீதி ஊடாகவும், சிறி குணானந்த மாவத்தை உபதபால் காரியாலயத்தின் எதிரிலும் அமைந்துள்ள இடத்தில் மாதந்தோறும் 20முதல் 31 வரை நிச்சயம் சேவையில் இருப்பேன். இத்தினங்களில் பூஜைகள், ஆராதனைகள், அன்னையின் அன்பு, அரவணைப்பு, ஆசீர்வாதங்கள் பெறலாம். அதுமட்டுமல்ல. எமது பிரிவில் 'கைரேகை நிபுணத்துவம், வாழ்க்கைச் சுவடி சாஸ்திரம், ஜாதகக் குறிப்பு, எண் ஞானக் குறிப்பு, இனியும் வேறு என்ன என்பதற்கு நேரில் வரவும்.

வறியவர் எனக்கண்டால் எமது ஸ்தாபனத்தில் தனி இடம் உண்டு.

தலைமைப்பீடம்

P.K.சாமி JDGAN (மாந்திரீகச் சக்கரவர்த்தி)
சிறீ துர்க்காதேவி ஆலயம்
32, தினச்சந்தை காம்பிளக்ஸ்
நுவரெலியா.
தொலைபேசி: *052-2508, 052-3093*

கொழும்பில்-- வினோத் இன் (VINNODH INN)
இல: 33, 3ம் மாடி
சிறி குணானந்த மாவத்தை
கொட்டாஞ்சேனை.
கொழும்பு-13.
தொலைபேசி: *078-71592, 078-71243*

வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.
FAX: 0094 2508, 0094 3093

நுவரெலியா மாவட்ட மக்களின் நலனைக்கருதி
P.K. Samy Associates (PVT) Ltd *ஸ்தாபனத்தால்*
அறிமுகப்படுத்தும் புதிய தொலைத்தொடர்புச் சேவை
இல: 21, பஸ்தரிப்பு நிலையம்
நுவரெலியா.
நினைத்த நேரத்தில் நினைத்த இடத்தில் உலகின் எப்பாகமும் உள்ளூர்களெங்கும் தொடர்புகொள்ள வேண்டுமா?
இனிமேல் கவலை வேண்டாம். எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.
தொலைபேசி: 052-2508, 052-3093

முகவர்கள் தேவை

கடுகன்னாவ, பிலிமத்தலாவ, மாத்தறை, தெஹிந்தர, திஸ்ஸமஹாராம, நொச்சியாகம, குருவிட்ட, பெல்மதுல்ல, பெரகல, பெலவத்த, தமண.

மேற்காணும் ஊர்களில் தினமுரசு வாரமலர் விற்பனை செய்வதற்கு முகவர்கள் தேவைப்படுகின்றார்கள். நியாயமான விற்பனைத் தரகு வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு—
விநியோக மேலாளர்
இல.88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை, கொழும்பு-05.

CIRCULATION MANAGER
NO: 88/14, SOMADEVI PLACE,
KIRILAPONE, COLOMBO-5.
PHONE: 820265

கொழும்பு நகரும் குப்பை வாகனங்களும்!

"சுத்தம் சுகம் தரும்" என்பது பழமொழி. வாழ்க்கையிலே அது உண்மையும்கூடத்தான். அதுவும் கிராமத்தைவிட நகரத்திலேதான் சனம் நெருக்கமாக வாழுகின்றது. அங்கு சுகாதாரம் பேணப்பட வேண்டும். தற்போது கொழும்பு நகரத்திலே குப்பை எடுக்கும் வாகனங்களில் இருந்து வரும் துர்நாற்றமும், குப்பைகள் போடப்பட்ட இடங்களில் இருந்து வரும் துர்நாற்றமும் மனிதனின் வாழ்க்கைக்கு பெரும் சுகாதாரக் கேடாக உள்ளன.

அதுவும் காலை 8 மணிக்குப் பின்னர் காரியாலயத்துக்கு வரும்போது குப்பை எடுக்கும் வாகனங்களின் போக்குவரத்து பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது. இதனால் மனிதனுக்கு பல நோய்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. எனவே இவ்வாறான குப்பைகளை எடுக்கும் வேலைகளை இரவு நேரங்களிலும், காலை 7 மணிவரையும் வேலையாட்கள் மேற்கொள்ள சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அபிவிருத்தி அடைந்த நாடுகளில் இரவு வேளைகளிலேயே இத்தகைய வேலைகளை செய்கிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆர். நல்லத்தம்பி-கொழும்பு-8.

கவனிக்குமா ரூபவாஹினி?

இலங்கை ரூபவாஹினி நிகழ்ச்சிகளில் தமிழ் நிகழ்ச்சிகளும் நாடகங்களும் மிகக் குறைவாகவே ஒளிபரப்பப்படுகின்றன. மற்றும் மாதம் ஒருமுறை இடம்பெறும் திரைப்படம் ஏற்கனவே ஒளிபரப்பட்டது. ஏன் புதிய நல்ல திரைப்படங்கள் நாடகங்கள் போன்றன கிடைக்கவில்லையா? கவனிக்குமா ரூபவாஹினி கூட்டுத்தாபனம்?

மலர்மகள்-சம்மாந்துறை.

ரிஷி அஜமாமிச லேகியம்

(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 175/=,95/=
தங்க பஸ்பம் கலந்தது 975/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 875/=

ஞான சுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398

புகார் பெட்டி

எவருமில்லையா தமிழ் இசைவிழா நடத்த?

இயற்கை எழில் அமையப்பெற்ற நுவரெலியா மாநகரம் தற்போது அதன் சித்திரை வசந்தகால பண்டிகையை மிகவும் விமரிசையாகக் கொண்டாடிக்கொண்டிருக்கிறது.

கடந்த இவ்வசந்த காலங்களின்போது, விளையாட்டுக்கள், பலதரப்பட்ட நிகழ்ச்சிகள் நுவரெலியா மாநகரசபையால் ஒழுங்கு செய்யப்படும். பல இசைக் கச்சேரிகளும் இடம்பெறுவது வழக்கம்.

நுவரெலியா மாவட்டத்தில் பெரும்பான்மையாக தமிழ் மக்கள் வசிப்பது குறிப்பிடத்தக்கது.

இருந்தும், 01.04.94முதல் 14.04.94 வரை வசந்த விழாவைப் பார்த்து இரசிக்க வந்த உல்லாசப் பிரயாணிகள், வெளியார்கள் கண்டு களிக்கும் வகையில் பல நிகழ்ச்சிகள் இடம் பெற்றிருக்கின்றன. இசை நிகழ்ச்சியும் இடம் பெற்றிருக்கின்றன. ஆனால் தமிழ் இசை நிகழ்ச்சி இடம்பெறவில்லை. சிங்கள இசை நிகழ்ச்சி மாத்திரமே இடம்பெற்றிருக்கிறது. இந்த சிங்கள இசைக்குழுவில் தமிழ் மொழிக்கும், தமிழ் மக்களுக்கும் மதிப்பளிக்கும் வகையில் ஒரு தமிழ் பாடலையேனும் கேட்கமுடியாததையிட்டு நுவரெலியா வாழ் தமிழ் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஆனால் அதே சமயம், 15.04.94 அன்று ஹைலண்ட் பால்மா நிறுவன ஆதரவில் ஓர் இசை நிகழ்ச்சி இடம்பெற்றது. இவ்விசைக் குழுவில் ஓர் தோட்டத் தொழிலாளியின் மகன் பாடுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. இதையிட்டு நுவரெலியா வாழ் தமிழ் பெருமக்கள் அந்த சிங்கள இசைக் குழுவிற்கு தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

நுவரெலியா மாநகரில் பலதரப்பட்ட வர்த்தக பிரமுகர்கள், அரசியல்வாதிகள், பல சமூக ஸ்தாபனங்கள் இருந்தும் தமிழ் இசை நிகழ்ச்சியொன்றை நடத்த முன்வராததையிட்டு நுவரெலியா வாழ் மக்கள் கவலை தெரிவித்துக் கொள்வதோடு, இனியும் இப்படியான சந்தர்ப்பங்களில் தமிழ் மக்கள் ஏங்கித் தவிக்குமளவிற்கு நடக்காமல், நுவரெலியா வாழ் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பல தமிழ் இசை நிகழ்ச்சிகளை நடத்த முற்பட வேண்டுமென நுவரெலியா மாநகரசபையையும், மற்றும் இதர பிரமுகர்களையும் பத்திரிகை வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

எஸ்.சதானந்தர்-நுவரெலியா.

சட்டசபையில் ஒரு சண்டைக் காட்சி! வன்-ரூ-திறீ-ரெடி- ஆக்ஷன்!!



பாண்டிச்சேரி மாநில சட்டசபையில் இந்திரா காங்கிரஸ்தான் ஆளும்கட்சி. தற்போது இந்திரா காங்கிரசுக்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இடையில் உறவு முறிந்திருப்பதால் பாண்டிச்சேரி சட்டசபையிலும் மோதல். பாண்டிச்சேரி முதல்வர் பட்ஜெட் வாசிக்க, அ.தி.மு.க.சட்டசபை உறுப்பினர்கள் பாய்ந்து தடுத்து தாக்க முற்பட காவலர்கள் ஓடிவந்து மறிக்கிறார்கள். புகைப்படத்தில் உள்ள காட்சி, சினிமாப் படங்களில் வரும் சட்டசபை சண்டைக்காட்சிகளில் கற்பனை கிடையாது என்பதற்கு சாட்சி. ஆனால் நாங்கள் சிரிக்கக்கூடாது. நம்நாட்டு அரசியலிலும் இக் காட்சிகள் அரங்கேறக்கூடும். இன்று அங்கே. நாளை இங்கே. யார் கண்டது?

மலையகத் தமிழர்களது கல்விக்கு மற்றொரு தடை! ஸ்ரீபாத கல்விக் கல்லூரியின் கதவுகள் திறக்குமா?

மலையக மாணவர்களின் கல்வி நிலையை உயர்த்தும் நோக்குடன் ஜெர்மன் அரசாங்கத்தினால் பலகோடி ரூபா செலவில் அமைக்கப்பட்டதே ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரி. ஆனால் அந்த நோக்கம் எந்த அளவிற்கு எய்தப்பட்டுள்ளது என்று கேட்டால் அது கேள்விக்குறியாகவே இருக்கும்.

மேலும், சகல வசதிகளும் பொருந்திய இக்கல்லூரியை பறிகொடுத்தால் மீண்டும் இவ்வாறான ஒரு கல்லூரியை பெருந்தோட்டத்துறையினர் காண முடியும் என்பதை கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாது.

மலையகத்தில் படித்தவர்களை பொறுத்தமட்டில் கிடைக்ககூடிய ஒரே தொழில் ஆசிரியர் தொழில்தான். அதிலும் மலையகத்தவருக்கு ஒரு வரப்பிரசாதமாக கிடைத்த இக்கல்லூரிக்காக எத்தனையோ போட்டிகள். இவ்வாறான கல்லூரியில் பெரும்பான்மையினரின் தலையீடு இருக்கவேண்டும் எனவும் முழுமையான தமிழ் மாணவர்கள் இவ் வளங்களை அனுபவிக்கக் கூடாது என்று திட்டமிட்டு செயல்படும் சக்திகளால் 500க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் மலையகத்தில் உருவாகுவது தடுக்கப்பட்டுள்ளது. மேலும் இந்நிலமை தொடருவதாகவே இருக்கிறது.

1991ல் பல காரணங்களினால் கல்லூரிக்கு மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. 1992.02.05ந் திகதி முதல் முறையாக பயிலுனர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். இவர்கள் தமது 2 வருட உள்ளகப் பயிற்சியில் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து 3ம் வருட வெளிக்களப் பயிற்சிக்காக கடந்த தை மாதம் 3ந் திகதி சொந்த இடங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

இம் மாணவர்கள் GTZ நிறுவனத்திலிருந்து பெற வேண்டிய பல்வேறு வழிகாட்டல்/ஆலோசனைகளை பெறாமல் பல்வேறு நடைமுறை சிக்கல்களுக்கு உள்ளாகின்றார்கள். இது அவ்வாறு இருக்க 93ம் ஆண்டுக்கான பயிலுனர்களுக்கு....நேர்முகப் பரீட்சை நடந்தும் அவர்கள் இன்னமும் அழைக்கப்படவில்லை. ஏனைய கல்லூரிகளில் 94ம் ஆண்டுக்கான பயிலுனர்கள் அனுமதிக்கான சகல ஏற்பாடுகளும் செய்தாகி விட்டன. இக் கல்லூரிக்கு மட்டும் இதுவரை ஏன் பயிலுனர்கள் சேர்க்கப்படவில்லை?

கல்லூரி நிலையை பற்றி ஆராய எங்கிருந்து எவர் வந்தாலும் சகல பிரச்சினைகளும் அங்கு மூடி மறைக்கப்பட்டு பல பொய் பிரசாரங்கள் செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் இக்கல்லூரியின் நிலை பற்றி ஆராய GTZ நிறுவனத்தினர் மாணவர்களைச் சந்தித்து தரவுகளை சேகரித்து புதிய மாணவர்களை சேர்ப்பதற்கான முயற்சியையும் மேற்கொண்டுள்ளனர். அதே வேளை கல்லூரிக்கு விஜயம் மேற்கொண்ட கௌரவ அமைச்சர் செல்லச்சாமி அவர்கள் விரிவுரையாளர், மாணவர்களைக் கண்டு பல்வேறு தகவல்களைப் பெற்றுச் சென்றதுடன் புதிய மாணவர்களை எடுப்பதற்கு தான் உரிய நடவடிக்கை மேற்கொள்வதாக உறுதிமொழி அளித்துள்ளார். ஆனால் இதுவரை எந்த முன்னேற்றமும் தெரியவில்லை.

இதே வேளை கல்லூரியின் நிர்வாகத்தில் தற்போது பெரும்பான்மையினரின் முற்று முழுதான ஆதிக்கமே காணப்படுகின்றது.

இவ்வாறான போக்கு மலையக தமிழ் மக்களை பாதிப்பதாக அமைந்துள்ளது. 92ம் ஆண்டு சேர்த்துக் கொள்ளப்பட்டது போல் தமிழ் மாணவர்களும் ஏனைய மாணவர்களும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். இதற்காக மலையக கல்வி நிலையில் அக்கறையுள்ள அனைவரும் குரல் எழுப்ப வேண்டும்.

மேகலா-பத்தனை.

பெருகிவரும் போதை வியாபாரம்!

அண்மைக்காலமாக புத்தளத்தில் ஹெரோயின் வியாபாரமும் பாவனையும் அதிகரித்துவிட்டன. பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் அதனை பரப்புவதற்கு முயற்சிகள் நடைபெறுவதாக தகவல்கள் கிடைத்த வண்ணமுள்ளன. இந்த வியாபாரத்தை நடத்துவோர் காவற்துறையினரிடம் மாட்டிக்கொண்டாலும் சட்டத்தில் உள்ள ஓட்டைகளால் தப்பிவிடுகின்றனர்.

இப்போதைப் பொருள் மன்னர்களின் தீய வியாபாரத்தால் ஒரு சில தமிழ் பேசும் இளைஞர்கள் ஹெரோயின் பழக்கத்துக்கு ஆளாகியுள்ளதோடு நிரந்தரமாக அப்பழக்கத்தில் இருந்து மீள முடியாத அளவிற்கு அதற்கு அடிமையாகியுள்ளனர். அதனால் ஹெரோயின் வாங்க பண வசதியற்றோர் சிறுசிறு திருட்டுக்களிலும் மோசடி வேலைகளிலும் ஈடுபடுகின்றனர்.

இது தொடருமானால் எதிர்கால சந்ததிகளின் நல்வாழ்வுக்கு ஊறுவிளைவிக்கும் என்பது உறுதி. ஆகவே இவ்வாறான சமூகத்தையே அழிக்கும் காரியங்களுக்கு முற்றுப் புள்ளி உடனே வைத்தாகவேண்டும். இதற்கு எதிராக இந்நகர மக்கள்-இளைஞர்கள், காவற்துறையினர் ஆகிய அனைவரும் இணைந்து செயற்பட முன்வரவேண்டும் என தினமுரசு வாரமலர் வாயிலாக வேண்டுகோள் விடுக்கிறேன்.

ஏ.எம்.இப்திகார்-புத்தளம்.

பாதை சீர்கேடும் பாதசாரிகள் படும் பாடும்

கிழக்கிலங்கையின் ஆகக்கூடுதலான- அதாவது 2வது இடத்தில் சனத்தொகையைக் கொண்டுள்ள கிண்ணியாப் பிரதேசத்தின் மக்கள் பாதை சீர்கேடு காரணமாக பிரயாணம் செய்வதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

றெகுமானியா பள்ளிவாசலுக்கு அருகாமையில் இருந்து அல் அக்ஸா மகா வித்தியாலயத்தை நோக்கிப் புறப்படும் பாதை மிகவும் மோசமான நிலையில் பள்ளமும், படுகுழியுமாக உடைந்து காணப்படுகின்றது. இதனால் துவிச்சக்கர வண்டியில் செல்வோரும், பாடசாலை செல்லும் மாணவ மாணவிகளும் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆவன செய்வார்களா என மக்களின் சார்பில் கேட்டுக் கொள்கின்றேன்.

பீ.எம்.ஹிதாயத்துள்ளா-கிண்ணியா.

மருத்துவமனை இன்றி மக்கள் கவலை

அனுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள கம்பிரிகஸ்வெவ, கட்டுகெலியாவை, அழுத்கம போன்ற கிராமங்களில் இதுவரைக்கும் ஒரு மருத்துவமனை இல்லை. இதனால் மக்கள் பெரும் கவலைப்படுகின்றார்கள். ஒருவர் நோய்வாய்ப்பட்டால் இங்கிருந்து பதினெட்டு மைல் நோயாளியை கொண்டுசெல்ல வேண்டும். இது பெரும் சிரமம்.

ஆகவே இக்கிராமங்களில் ஒரு மருத்துவமனை அமைத்து ஒரு நிரந்தர டாக்டரையும் வைக்க இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனம் செலுத்தும்படி ஊர் மக்களின் சார்பில் வேண்டுகின்றேன்.

எஸ்.ஐ.நிலாம்தீன் கட்டுகெலியாவை.

புனைபெயரிலோ முகவரி இன்றியோ அனுப்பப்படும் புகார்கள் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது.

ஆட்சி மாற்றம் நடந்தது போல் காட்சி மாற்றங்கள்!

ஆளும் கட்சி வகுத்துவரும் வியூகங்கள்!!

எக்ஸ்ரே ரிப்போர்ட்



காமினி

தென்னிலங்கையின் அரசியல் அரங்கில் தற்போது ஓரளவு சுவாரசியமான காட்சிகள் அரங்கேறி வருகின்றன.

ஆளும்கட்சி எதிர்வரும் தேர்தல்களுக்கு இன்னும் எத்தனை மாதங்கள் இருக்கின்றன என்று கணக்கிட்டபடியே கட்சியை தயார்படுத்துவதில் கடும் தீவிரம் காட்டுகிறது.

இந்த ஆண்டை தேர்தல் ஆண்டு என்று அறிவித்தவர் ஜனாதிபதிதான்.

அவ்வாறு அறிவிக்கும்போது நிலமை தமக்கு சாதகமாக இருப்பதாகவே அவர் நம்பியிருக்க வேண்டும்.

தனது தலைமைத்துவத்தின்கீழ் ஆளும் கட்சிக்கு மீண்டும் ஒரு மிகப்பெரிய வெற்றியை தேடிக்கொடுக்க முடியும் என்று அவர் எண்ணியிருக்கக்கூடும்.

பிரதான எதிர்கட்சியின் முகாமில் இருந்து அம்மையாரின் புத்திரர் திரு.அநுராவை தம் பக்கம் அழைத்துக்கொண்டபோது, இன்னும் பலர் அந்த முகாமில் இருந்து ஓடிவந்து சேர்ந்து கொள்வார்கள் என்றே ஆளும் கட்சி நம்பியிருந்தது.

உண்மையும் அதுதான். பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு, முன்னாள் ஜனாதிபதி அமரர் பிரேமாவால் தலைவராக நியமிக்கப்பட்டவர் திரு.மங்கள முனசிங்க.

அவர் திரு.அநுராவின் நெருக்கமான நண்பர் என்றும் அறியப்பட்டவர்.

திரு.மங்கள முனசிங்காவுக்கும், வேறு சிலருக்கும் ஆளும் கட்சியில் சங்கமிக்கும் அபிப்பிராயம் இருந்தது.

சாதகமான ஒரு சந்தர்ப்பத்திற்காக அவர்கள் சத்தம் போடாமல் காத்திருந்தார்கள்.

ஆனால், தென்மாகாணசபைத் தேர்தலில் வாக்காளர்கள் போட்ட புள்ளடிகள், ஓடிவர நினைத்து எடுத்து வைத்த காலை அவர்கள் மறுபடி மெல்ல உள்ளே இழுத்துக் கொள்ள வைத்துவிட்டது.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் இறுதிக்காலம் கடும் போராட்டம் நிறைந்ததாக இருந்தது.

முன்னாள் அமைச்சர் லலித்தை புலிகள் புத்திசாலித்தனமாக கொலை செய்துவிட, புலிகள்கூட எதிர்பார்த்திருக்காத அளவுக்கு தென்னிலங்கை அரசியலில் ஒரு புயல் வீசியது.

பிரேமாமீது பழிபோட்டு மிகவும் அற்புதமான பிரசாரம் ஒன்றை எதிரணிகள் ஒன்றுபட்டு மேற்கொண்டன.

அடுத்த கட்டமாக பிரேமாவும் கொல்லப்பட்டார். ஆளும் கட்சி அரசியல் புத்திசாலித் தனத்தோடு யோசித்திருந்தால் பிரேமாவின் கொலையை எதிர்கட்சிகளின் பிரசாரங்களை உடைத்துப்போடும் வகையில் மக்களிடம் எடுத்துக்காட்டி பிரசாரம் செய்திருக்க முடியும்.

இந்தியாவில் ராஜீவ் கொலை ஏற்படுத்திய அனுதாப அலைபோன்று ஓர் ஆதரவு அலையை ஆளும்கட்சி ஏற்படுத்திக்கொள்ள சந்தர்ப்பம் இருந்தது.

ஆனால், பிரேமாவின் பெயரை அடிக்கடி சொன்னால் ஆதரவு குறையும் என்று தவறான ஒரு முடிவுக்கு வந்ததாகவே தெரிந்தது.

புதிதாக ஜனாதிபதிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட டி.பி.விஜேதுங்கா புலிகளோடு பேசத் தயார் என்று அவசரமாக அறிவித்தார்.

கொலைக்கு காரணம் புலிகள் என்று சொல்வதற்கே அரச தரப்புக்கு அதிக காலம் தேவைப்பட்டது.

எனவே, பிரேமாவின் மரணத்தை அதற்குரிய முக்கியத்துவத்தோடு மக்களிடம் கொண்டு சொல்லவும் அதன்மூலம் பெற்றிருக்கக்கூடிய அரசியல் ஆதரவையும் ஆளும் கட்சி தவறவிட்டுவிட்டது.

ஜனாதிபதி டி.பி.விஜேதுங்காவை ஆரம்பத்தில் எதிரணிகள் பாராட்டவும் செய்தன.

டி.பி.விஜேதுங்கா ஜனாதிபதியானதால் தங்கள் வளர்ச்சிக்கு தடையிருக்காது. அவரிடமிருந்து பலமான ஒரு மோதலை எதிர்பார்க்க வேண்டியிருக்காது என்ற சந்தோச நம்பிக்கையில்தான் எதிரணிகள் உடனே அவரைப் பாராட்ட முன்வந்தன.

ஆனால், ஜனாதிபதி என்ன நினைத்தார் என்றால், எதிரணிகளும் பாராட்டும் ஒரு ஜனாதிபதியாக இருப்பதன் மூலம் பிரேமாவுக்கு எதிரானவர்களையும் தம்பக்கம் வென்றெடுக்க முடியும்;

பிரேமாவின் பெயர் சொல்லாமலேயே தன்னை ஒரு சிறந்த ஜனாதிபதியாக நிரூபித்துக்காட்டி, அதன்மூலம் எதிரணிகளை நிலைகுலையச் செய்ய முடியும் என்றெல்லாம் ஜனாதிபதி நினைத்திருப்பார்.

ஜனாதிபதி ஆட்சிமுறையை இங்கே அறிமுகம் செய்தவர் ஜே.ஆர். அந்த ஆட்சி முறையில் அவருக்கு அடுத்ததாக ஜனாதிபதியானவர் பிரேமா.

அந்த ஆட்சி முறை மீது தனக்கு விருப்புக் கிடையாது என்று பிரேமதாசா எப்போதும் சொல்லியதில்லை.

ஆனால்-ஜனாதிபதி டி.பி.விஜேதுங்காவோ ஜனாதிபதி ஆட்சிமுறையை மாற்றுவதற்கு தான் தயாராக இருப்பது போலவே பேசினார்.

அதன்மூலம், சர்வ அதிகாரமுடையவராக இருப்பதற்கு தான் விருப்பம் இல்லாதவர் என்று மக்கள் நினைப்பார்கள்; மறுபுறம் எதிரணிகளும் திருப்திப்பட்டுக்கொள்ளும் என்று நம்பினார்.

ஆனால், ஜனாதிபதி அப்படி ஒரு நல்ல பெயர் எடுப்பதை கை கட்டி நின்று வேடிக்கை பார்த்தால் எதிர்கட்சி என்று ஏன் இருக்க வேண்டும்?

ஜனாதிபதி பெறுகின்ற நல்ல பெயர் ஆளும் கட்சிக்கு சாதகமாகிவிடும் அல்லவா?

எனவே-சிறிமாவோ அம்மையார் அவர்கள் ஜனாதிபதியை விடவில்லை.

'ஆட்சி முறையை மாற்றுவதை நீங்கள் செய்ய வேண்டியதில்லை. அதனை நாங்கள் பார்த்துக்கொள்ளுகிறோம். நீங்கள் என்னோடு ஜனாதிபதித் தேர்தலில் மோதியே தீரவேண்டும். மோதலுக்கு பயந்து முறையை மாற்ற வேண்டாம்' என்று ஒரு போடு போட்டிருக்கிறார்.

எப்படியாவது ஒரு முறை ஜனாதிபதி இருக்கையில் அமர்ந்துவிட்டுத்தான், அந்த அதிகாரமுடைய கதிரையைத் தூக்கி ஓரத்தில் போடுவேன் என்று அம்மையார் ஒற்றைக்காலில் நிற்கத் தொடங்கிவிட்டார்.

பல கட்சி ஆட்சி முறையில் எதிர்கட்சி ஆட்சிக் கட்டிலையே பார்த்துக்கொண்டிருக்கும்.

அப்படியிருக்க எதிர்கட்சியின் பாராட்டு மொழிகளை கேட்டபடி ஆட்சிக் கட்டிலில் கால் நீட்டிக்கொண்டு தூங்கலாம் என்று ஆளும்கட்சி நினைத்துக்கொண்டிருக்கக்கூடாது.

ஆளும்கட்சி இனப்பிரச்சனையே இல்லை என்று அடித்துப் பேசினால்தான் எதிர்கட்சி இனப்பிரச்சனை இருக்கவே இருக்கிறது என்று உண்மையை உரத்துச் சொல்லும்.

நல்லது. தீர்வு என்ன என்று கேட்டால், 'அந்த ஆட்சிக் கட்டிலை விட்டு அவரை எழுந்து போகச் சொல்லுங்கள். அங்கே நாம் போயிருந்தால் எங்களுக்கும் ஒரு திருப்தியாக இருக்கும். அந்த திருப்தியோடு தீர்வையும் சொல்லலாம்' என்று கூறும். இதுதான் நம் நாட்டு அரசியல் நிலவரம்.

அப்படியிருக்கும்போது எதிரணிகளையும் திருப்தி செய்துகொண்டு ஆளும் கட்சியின் தலைவர் ஜனாதிபதியாக இருக்க முடியுமா?

ஆக மொத்தத்தில் தவறான கணிப்புக்களின் அடிப்படையில் ஜனாதிபதி கொண்டிருந்த நம்பிக்கைகள் தென் மாகாணசபைத் தேர்தலோடு பொய்த்துப்போய்விட்டன.

இனப்பிரச்சனை இல்லை என்று பேசுவதற்கு ஜனாதிபதி காரணமல்ல. அவருக்கு வழங்கப்பட்ட தவறான ஆலோசனையே காரணம் என்று கூறப்படுகிறது.

அவரது உரைகளை தயாரிப்பதில் சம்பந்தப் பட்டவர்கள்மீது ஆளும்கட்சி பிரமுகர்களின் கோபம் திரும்பியிருக்கிறது.

உரை தயாரித்தது யார்? முழுப் பூசணிக் காயை ஒரு கோப்பை சோற்றுக்குள் மறைக்க முடியும் என்று நினைத்து ஆலோசனை சொன்னது யார்? அவ்வாறானவர்களின் நோக்கம் என்ன? என்பதெல்லாம் திருவாளர் பொது ஜனத்தின் அக்கறைக்குரியதல்ல.

ஜனாதிபதி என்ன பேசினார்? என்ன பேசுகிறார்? என்ன செய்கிறார்? என்பவைதான் திருவாளர் பொதுஜனத்தால் கவனிக்கப்படும்.

குறிப்பாக தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரை இனப்பிரச்சனை குறித்து ஜனாதிபதி அவர்கள் வெளியிட்ட கருத்துக்கள் ஆழப்பதிந்துவிட்டதாகவே இருக்கின்றன.

தன்னை இனவாதம் உள்ள ஒருவராக சித்தரிக்க சிலர் முற்படுவதாக ஜனாதிபதி அவர்கள் அண்மையில் வேதனைப்பட்டிருந்தார்.

ஆனால் யாரும் அவ்வாறு சித்தரிக்க வேண்டிய தேவையே இல்லாமல் அவரது பேச்சுக்களே அவ்வாறான ஒரு தோற்றத்தை உருவாக்கியிருந்தன என்பதை மறுப்பதற்கில்லை.

இனப்பிரச்சனையால் இரத்தம் சிந்தப் படுகின்ற ஒரு நாட்டில் இனப்பிரச்சனையே இல்லை என்பதாக பேசுவதை பெரிதாக எடுத்துக்கொள்ளக்கூடாது என்று ஜனாதிபதி அவர்கள் எப்படி எதிர்பார்க்க முடியும்?

இன்னொரு விசயமும் இருக்கிறது. ஜனாதிபதியின் பேச்சுக்கள் என்று சகல பத்திரிகைகளிலும் வெளியான நேரத்தில் ஜனாதிபதியும் சரி, ஜனாதிபதிச் செயலகமும் சரி. அதனை மறுக்கவில்லை. பேச்சுக்கள் திரிக்கப்படுவதாக சொல்லவும் இல்லை.

இப்போது தென் மாகாணசபைத் தேர்தல் முடிந்த பின்னர்தானே பேச்சுக்கள் திரிக்கப் பட்டதாக கூறுகிறார்கள். தவறான சித்தரிப்பு என்று வருத்தப்படுகிறார்கள்.

இப்போதுகூட இனப்பிரச்சனை என்ற பதம் தவிர்க்கப்பட்டுத்தானே வருகிறது. வடக்கு-கிழக்கு பிரச்சனை என்றுதானே ஆளும் கட்சியினர் முதல், அரசின் வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள்வரை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

எனவே - வருத்தப்படுவதைவிட இனப்பிரச்சனையின் தீர்வுக்கான திட்டத்தை வகுத்து முன்வைத்தால் தமிழ் பேசும் மக்கள் ஜனாதிபதியை மட்டுமல்ல, ஆளும் கட்சியையும்-கசப்புகள் மறந்து வரவேற்கவே செய்வார்கள்.

ஆனால், ஆளும் கட்சிக்கு தற்போது அதற்கெல்லாம் அவகாசம் போதும் என்று தோன்றவில்லை.

கட்சியை சீர்படுத்தி தயார் செய்யும் பணிக்கே அவகாசம் போதுமா என்று தெரியவில்லை.

கட்சிக்குள் தனது பிடியை உறுதிப்படுத்திக் கொண்டு, அமைச்சரவையிலும் மாற்றங்கள் செய்துகொள்ளவே ஜனாதிபதி நினைத்துள்ளார் என்று தெரிகிறது.

ஆளும் கட்சியின் பலம் பொருந்திய பொதுச் செயலாளர் திரு.சிறிசேன குரேயிடமிருந்து இராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதி பெற்றுக் கொண்டது தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போன கதை போன்றது.

குரே உட்கட்சிப் போராட்டத்தில் குதித்திருந்தால்கூட ஆளும் கட்சிக்குள் பிளவு பெரிதாக வந்திருக்காது. என்றாலும் கூட பிரச்சனைகள் பகிரங்கமாகி பெரிய தலைவலியை ஜனாதிபதிக்கு ஏற்படுத்தியிருக்கும்.

ஆறு மாத காலத்திற்குள் கட்சிக்குள் தலைமை மாற்றம் என்பதும், அதற்கான உட்கட்சிப் போராட்டம் என்பதும் சாத்தியமில்லை. அது கட்சியை மேலும் பலவீனமாக்கும் என்றே குரேக்கு ஆதரவளித்தவர்கள்கூட அபிப்பிராயப்பட்டனர்.

எனவே-சிறிசேன குரே உறைக்குள் இருந்து வாளை உருவிக்கொள்ளாமல் ஒதுங்கிக் கொண்டார். 'என்னால் போரிட முடியும். ஆனால் விருப்பமில்லை' என்று பொருள்பட ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியும் இருந்தார்.

இப்போது புதிய பொதுச் செயலாளர் நியமிக்கப்பட்டுவிட்டார். அவர் ஜனாதிபதியின் விருப்பு-வெறுப்பு அறிந்து செயற்படக்கூடியவர்.

திரு.காமினி திசாநாயக்காவை பாராளுமன்ற உறுப்பினராக்குவதும், மிக முக்கியமான அமைச்சுப் பொறுப்பினை அவருக்கு வழங்குவதும் முக்கியம் என்று ஜனாதிபதி கருதுகிறார்.

திரு.காமினி திசாநாயக்காவை சக்திமிக்கவராக மாற்றுவதன் மூலம் எதிர்வரும் தேர்தல்களுக்கு அவரது திறமைகளை பயன்படுத்திக்கொள்ள முடியும் என்று அவர் நம்புவதாகத் தெரிகிறது.

ஆறு மாதகால அவகாசத்திற்குள் நிறைய சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையோடு திரு.காமினி திசாநாயக்காவும் தன் கரம் பலமாகும்வரை காத்திருக்கிறார்.

ஒருபுறம் பிரேமதாசாவின் ஆதரவாளர்களைத் திருப்தி செய்தபடியே, பிரேமதாசாவின் இறுதிக்காலத்தில் அவரோடு கடுமையாக மோதிய திரு.காமினி திசாநாயக்காவையும் களத்தில் இறக்கிவிடும் காட்சி ஆளும் கட்சியின் அரசியல் அரங்கில் தோன்றப் போகிறது.

முரண்பட்ட இந்த நிலையை திருவாளர் பொதுஜனம் எவ்வாறு புரிந்துகொள்ளப் போகிறார் என்பதுதான் கேள்வி.

இறுதி நேரத்தில் பிரேமதாசா அவர்களோடு சேருவதற்கு மறைந்த லலித்தும் தானும் அவரோடு பேச்சு நடத்தியதாக திரு.காமினி கூறுகிறார்.

அப்படியானால் பிரேமா ஏன் லலித்தைக் கொல்ல வேண்டும்? அவர்தான் கொலைக்கு தூண்டியதாக காமினி ஏன் முன்பு கூறினார்? இப்போது திரு.காமினி கூறியதில் அவர் முன்னர் செய்த பிரேமா எதிர்ப் பிரசாரங்கள் அடிபட்டுப்போய்விட்டன.

ஆனால் இன்றுவரை லலித் கொலைக்கு பிரேமதாசா காரணமல்ல என்பதை திரு.காமினி பகிரங்கமாக சொல்லவில்லை என்பதை கவனிக்க வேண்டும். சொல்வதில் அவருக்கு சில சங்கடங்கள் இருக்கலாம்.

எப்படியோ-திரு.காமினியின் பலம் கட்சிக்குள் அதிகரிப்பதன் மூலம் அவரது அரசியல் சாதுரியம் ஆளும் கடசிக்கு ஓரளவு உதவக்கூடும்.

ஆயினும், லலித்தின் துணைவியார் திருமதி சிறீமாணியை எதிரணிகள் லலித் ஆதரவாளர்களது வாக்குளை பெறுவதற்கு முன் நிறுத்த முயலலாம்.

அவரும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் இணைவது பற்றி யோசித்து வருகிறார்.

அப்படி நடந்தால் ஆளும் கட்சிக்கு எதிரணியில் உள்ள பெண்கள்தான் சவால்.

ஒருவேளை எதிர்வரும் தேர்தலில் பாதகம் ஏற்பட்டால் 'ஆவதும் -பெண்ணால் அழிவதும் பெண்ணால்' என்ற கருத்தை ஐ.தே.கட்சியினர் சொல்லிப்பார்க்க வேண்டி வந்துவிடலாம்.

கடந்த மேதின ஊர்வலம் கொடுத்த உற்சாகத்தில் கிட்டத்தட்ட ஆட்சிக்கே வந்துவிட்டதுபோல் சிறிலங்கா சுதந்திரக்கட்சி பூரித்துப்போய் நிற்கிறது.

அம்மாவும், மகளும் அளவற்ற சந்தோசத்தில் திரு.அநுராவை தம்மோடு சேர்த்துக்கொண்ட ஜனாதிபதிக்கு நன்றி சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

என்றாலும், சந்திரிக்கா நினைப்பதையெல்லாம் நிறைவேற்றும் அளவுக்கு கட்சிக்குள் அவரது கரம் இன்னமும் பலப்படவில்லை என்றே தெரிகிறது.

நாரதர்

மறுபுறம், ஆளும் கட்சிக்குள் சிறிசேன குரேயின் ஆதரவாளராக இருந்த அதிகாரிகள் சிலர் தமது பதவிகளை இராஜினாமா செய்துவருகின்றனர்.

அரச பத்திரிகை நிறுவனத் தலைவர் தனது பதவியை இராஜினாமா செய்துவிட்டார். திரு.காமினி திசாநாயக்காவுக்கு நெருக்கமான புதிய தலைவர் பதவி ஏற்றுள்ளார்.

வெளியே தெரியாத வகையிலும் சில மாற்றங்கள் நடப்பதாகவே தெரிகிறது.

மேதினத்தை முன்னிட்டு ஜனாதிபதி புதிய சலுகைகள் சிலவற்றை அறிவித்து இருந்தார். மேலும் அறிவித்தும் வருகிறார்.

அடுத்த கட்டமாக, தமிழ் பேசும் மக்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையிலான சில அறிவிப்புக்களை ஜனாதிபதி செய்யக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ் பேசும் அமைச்சர்கள் சிலரும் அதனை வலியுறுத்துவதாகத் தெரிகிறது.

அரசியலில் எதுவும் எப்போதும் நடக்கலாம். என்ன நடக்கப்போகிறது என்பதை அடுத்த வாரங்களில் காணலாம்.

அதிரடி அய்யாத்துரை

எங்கள் நாட்டு தமிழ் அமைப்புக்களுக்கு ஒரு விசயத்திலை மட்டும் அக்கறை அதிகம். விலாசம் காட்டுறதுதான் அந்த அக்கறை. திருமலையிலை ஒரு அமைப்பு மேதின போஸ்டர் ஒட்டியிருந்தது. திடீரென்று ஒரு நாள் இன்னொரு அமைப்பு வந்து அதை வீடியோப் படம் எடுத்தது. எப்படி எடுத்தது தெரியுமோ? போஸ்டர் ஒட்டின அமைப்பின் பெயரை ஒரு பேப்பராலை ஒரு உறுப்பினர் மறைச்சுக்கொண்டு நிண்டவராம். இனி என்ன? மேதின கலக்கல் எண்டு வீடியோ காட்சி வெளிநாடுகளுக்கு போகும். இல்லாததை இருக்கறதா காட்டுற விலாச ஆசை எப்பதான் போகுமோ, அப்பதான் விமோசனம்.

கூட்டான தமிழ் கட்சி பழையபடி அரசியல் பக்கம் காலடி எடுத்து வைச்சாலும், வைச்சது ஏனைய தமிழ் அமைப்புக்கள் சிலதுக்கு மூக்கிலை கோபம் வந்திட்டுது எண்டு மட்டும் தெரியுது. கூட்டான கட்சிக்காரரும் கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை எண்ட மாதிரி ஆயுதப் போராட்டம் அட்டகாசம் எண்டும் சொல்லுகினம். அது தீர்வாகாது எண்டும் சொல்லுகினம். ஆக மொத்தத்திலை ஆபத்தை விலைக்கு வாங்காமல் அரசியல் நடத்தப் பார்க்கினம்.

அதிகாரத்தைப் பிடிக்க சதி எண்டு ஒரு சிங்கள வாரப் பத்திரிகை செய்தி போட்டது. செய்தி பொய் எண்டு அதிகார மட்டம் மறுத்தது தெரிஞ்ச சங்கதி. எண்டாலும் பழைய செயலாளரின் நடவடிக்கைகள் கூர்ந்து கவனிக்கப்படுறதாயும் உள் தகவல் ஒண்டு காதிலை விழுகுது பாருங்கோ. அவருக்கு இருந்த பழைய காவலர்கள் மாற்றப்பட்டு மேல் மட்டத்திற்கு விசுவாசமான காவலர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டிருப்பதாகவும் அந்த தகவல் காதுக்குள்ளே குசுகுசுத்தது. யாம் அறியோம் பராபரமே.

முன்னாள் தலைவரின் சிலை திறப்பு விசயத்திலை கெடு பிடி கூடாது எண்டு பழைய செயலாளர் கண்டிப்பாய் சொன்னவராம். அதுதான் முக்கியமானவரை போக வேண்டாம் எண்டு பாதுகாப்பு சம்பந்தப்பட்டவை சொன்னதாயும் ஒரு பேச்சு அடிபட்டது பாருங்கோ. சரி அதை விடுங்கோ. எங்கை பார்த்தாலும் ஒரே வெக்கையாய் இருந்தது. மழை வந்து காப்பாத்திப்போட்டுது.

மலை உள்ள பகுதியிலை உள்ளே இருந்து வந்தவர் நடத்தின மேதின ஊர்வலம் தனித்துவ தலைவர் வட்டாரத்திலையும் பேசப்பட்டதாம். நல்ல கூட்டம் சேர்ந்திருக்குது. இதுக்கிடையிலை சந்திரரும் - சாமியும் கை கோர்க்கலாம் எண்டு பேசப்படுறது வதந்தி எண்டு அடிச்சு சொல்லுது சந்திரர் வட்டாரம். அரசியலில் எது வேண்டுமானாலும் நடக்கலாம்தானே?

நீல அணியின் நம்பிக்கை நட்சத்திரத்தை சோசலிச சின்னம் மாதிரி சிலர் கீறிக்காட்டப் பார்க்கினம். ஆனால் பாருங்கோ, அப்படி கீறிக் காட்டுற ஆட்களில சீறி விழுகிற மாதிரி, அவ வெளிநாட்டுக்காரருக்கு விருந்து கொடுத்து சோசலிசம் சரிவராது எண்டு தனக்கும் தெரியும் எண்ட மாதிரி அவ சொல்லிப்போட்டா.

அமெரிக்காவிலை ஜனநாயகம் தாராளம். அதாலை நல்ல அரசியல் ஜோக்குகளும் அடிபடும். சமீபத்திய ஜோக் ஒன்று- இது கிளின்ரனின் வைட் வோட்டர் பிரச்சனைக்குப் பிறகு வந்தது. ஒரு பெற்றோல் நிலையத்திற்கு கிளின்ரன் தம்பதி காரிலை போச்சினமாம். அங்கை காருக்கு பெற்றோல் போட்டவரை காட்டி, கிளின்ரன் ஹிலாரியின் காதிலை சொன்னார்: "என்னை திருமணம் செய்யாட்டி நீயும் இப்படியான ஒருவரைத்தான் திருமணம் செய்திருப்பாய்!" உடனை ஹிலாரி கிளின்ரனின் காதிலை சொன்னது இது: என்னைத் திருமணம் செய்திருந்தால் இவனும் அமெரிக்க ஜனாதிபதியாகியிருப்பான்" ஹௌ இஸ் இட்?

இனி ஒரு சித்தர் பாடல்.

"ஆவியோடு காயம் அழிந்தாலும் மேதினியில்
பாவி என்று நாமம் படையாதே- மேவிய சீர்
வித்தாரமும் கடம்பும் வேண்டா மட நெஞ்சே
செத்தாரைப் போல திரி"

எப்படி திரியிறது? ஆசை சாகாதே பாருங்கோ!

விபத்தில் சிக்கித் தப்பிய சிறுவர்கள்!
அம்மா போனது இன்னும் தெரியாது!!

தைப்பே நகரிலிருந்து 271 பயணிகளுடன் புறப்பட்ட சீன விமானம் ஒன்று இரண்டரை மணிநேரப் பயணத்தின் பின்னர் ஜப்பானிலுள்ள நகோய நகர சர்வதேச விமான நிலைய ஓடு பாதையில் விழுந்து நொருங்கியது. தீப்பிடித்து எரிந்தது. பயணிகளில் 263 பேர் மாண்டனர்.

அண்மைக் காலங்களில் ஜப்பானில் இடம் பெற்ற விமான விபத்துக்களில் இதுவும் மிகவும் பயங்கரமானது என்று வர்ணிக்கப் படுகிறது. இரண்டரை மணி நேரம் ஆகாயத்தில் பயணம் செய்த இந்த 'எயார் பஸ்' விமானம் தரை இறங்கும்போது விபத்துக்கானமைக்கான காரணம் என்ன என்று இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை. விமானத்தைத் தரை இறக்கப் போவதாக விமான நிலையக் கட்டுப்பாட்டறைக்கு தகவல் கொடுத்த விமானி மீண்டுமொரு முறை நிலையத்தின் மீது சுற்றிய பின்னர் தரை இறங்கும்போதே விமானம் வெடித்து தீப்பிழம்பானதாம்.

தப்பிப்பிழைத்தவர்களில் இரு சிறுவர்கள், செய்ஜி- 3வயது; யூஜி- 6வயது. பிலிப்பைன் நாட்டைச் சேர்ந்த தாய்க்கும் ஜப்பானியத் தகப்பனுக்கும் பிறந்தவர்கள். மனிலாவில் நடைபெற்ற குடும்ப நிகழ்ச்சி ஒன்றில் தாயாருடன் சென்று கலந்து விட்டுத் திரும்புகையில் இந்த விபத்தில் சிக்கினர். இருவரும் காயமடைந்தனர். விபத்தில் தாயார் இறந்துபோன செய்தி இவர்களுக்கு இன்னும் தெரியப்படுத்தப்படவில்லை.

கிராமத்தை அழித்த இராணுவ வேட்டை!
இராணுவ ஆட்சியில் இரத்தம் சிந்தும் பூமி



மத்திய அமெரிக்காவில் கியூபாவுக்கு தென் கிழக்கே அத்லாந்திக் சமுத்திரத்தில் டொமினிக்கன் குடியரசுடன் ஒட்டிக்கொண்டிருக்கும் குட்டி நாடு ஹைட்டி. ஏறத்தாழ 63 இலட்சம் மக்களைக் கொண்டது. ஃபிரெஞ்சுக் குடியேற்ற நாடாக இருந்த போதும் 1804ல் சுதந்திரக் குடியரசாக பிரகடனப் படுத்திக்கொண்டது. இருப்பினும் ஃபிரெஞ்ச் மொழியே இன்றும் ஆட்சி மொழியாக இருந்து வருகிறது.

1991ல் அந்நாட்டின் அதிபராக விளங்கிய ஜீன் பேர்ட்றண்ட் அறிஸ்ரைட் என்பவரை நீக்கிவிட்டு இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டது. அதுமட்டுமல்லாமல் அதிபர் அறிஸ்ரைட்டுக்கு ஆதரவாக இருந்துவந்த அதிகாரிகள் மட்டுமல்லாமல் ஆதரவாளர்கள் அனைவரையும் தாக்கி அழிக்க ஆரம்பித்து விட்டது. ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட இராணுவம்.

ராபொட்டியோ என்ற கடற்கரையோரக் கிராமம். பதவியிறக்கப்பட்ட அதிபர் அறிஸ்ட்ரைட் மீது தொடர்ந்து அநுதாபம் கொண்டிருந்த குற்றத்துக்காக அந்தக் கிராமத்தை-ஏப்ரல் 22ம் திகதி அதிகாலைப் பொழுதில் -- சுற்றி வளைத்த இராணுவம் அங்கு வாழ்ந்த மக்களை ஈவிரக்கமின்றிக் கொன்று குவித்தது.

பயந்து கடலில் ஓடிச்சென்று தப்பலாம் என்று தோணிகளில் ஏறியவர்களையும் விட்டு வைக்கவில்லை. துரத்தித் துரத்திக்கொன்றனர். பெரியவர் சிறியவர் என்று எவரையும் விட்டு வைக்கவில்லை. இளம் பெண்களை கற்பழித்துவிட்டு கொலை செய்தனர்.

இந்தக் கொடுமைகளைத் தத்ரூபமாக எடுத்துக்காட்டும் புகைப்படங்கள் ஐ.நா. சபைக்கும் வந்து சேர்ந்துள்ளன. கொலை செய்யப்பட்டவர்களை போதுமான ஆழமற்ற குழிகளில் புதைத்தமையினால், நாய்களும் பன்றிகளும் பிரேதங்களை வெளியே இழுத்தெடுத்து விருந்துண்டு வருகின்றன. தொடர்ந்து அந்நாட்டின் பல பகுதிகளிலும் அரசப் படைகள் அட்டூழியங்களை விதைத்து வருகின்றன.

ஹைட்டி மீது அமெரிக்க நிர்வாகத்தின் போக்கு திடமாக இல்லை என்று அவதானிகள் கூறுகின்றனர். தொடர்ந்து அந்நாட்டில் நிலவும் கொடுமைகளிலிருந்து தப்புவதற்காக படகுகளில் ஏறி அமெரிக்காவின் ஃபுளோரிடா கடற்கரைக்குச் சென்ற ஹைட்டிய அகதிகளுக்குக்கூட கிளின்ரன் நிர்வாகம் கருணை காட்டுவதற்கு வீண் காலதாமதம் செய்தமை உலக நாடுகளின் கண்டனத்தை ஈர்த்தது. மார்ச் மாத இறுதியில்தான் இந்த அகதிகளில் 400 பேரை மட்டும் ஏற்றுக்கொண்டு 113 பேரை திருப்பி அனுப்பிவிட்டனர்.

ஹைட்டியில் அப்பாவி மக்களை அனாவசியமாக கைது செய்து சித்திரவதை செய்வதும் தொடர்கிறது. இவற்றைத் தட்டிக்கேட்க அமைதி விரும்பிகள் எவராவது முற்பட்டால் அவர்கள் இருந்த இடமே தெரியாமலாக்கப்பட்டு விடுகிறது.

கைதானவர்கள் எவரானாலும் சம்பந்தப்பட்ட படை அதிகாரிகளுக்கு 25 டொலர் கொடுத்தாலே போதும். அவர்கள் 'குற்றமற்றவர்கள்' என்ற குறிப்புடன் விடுதலை செய்யப்படுகின்றனர்.

ஹைட்டியின் இராணுவ ஆட்சிக்கு எதிராக- அந்நாட்டின் மீது-மிகக் கடுமையான பொருளாதாரத் தடையினை விதிக்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு ஐ.நாவில் பல நாடுகள் ஆதரவு தெரிவித்திருந்த போதிலும் அமெரிக்காவின் போக்கு, அந்நாட்டின் இராணுவ ஆட்சிக்கு விரோதமான நடவடிக்கைகளுக்கு ஆதரவாக இருக்காதோ என்ற ஐயப்பாட்டினை ஏற்படுத்தியிருக்கிறது.

இராணுவ ஆட்சியை நீக்கி, பதவியிலிருந்து இறக்கப்பட்ட அறிஸ்ட் ரைட்டை மீண்டும் நாட்டின் அதிபர் ஆக்க வேண்டும் என்ற கோரிக்கை உள்நாட்டிலும் அயல்நாடுகளிலும் வேகமாகப் பரவி வருகிறது.

தடுக்காதே - தள்ளிப் போ!

இஸ்ரேலிய எல்லைப் பொலிசாரோடு மோதும் பலஸ்தீன வாலிபன். இஸ்ரேலிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை தடுத்து நிறுத்தியதால் ஏற்பட்ட கோபம். ஆவேசம் வந்துவிட்டால் ஆயுதம் மிரட்டமுடியாது.

மூவாயிரம் ஆண்டுகள் கடந்தபோதும் கெட்டுப்போகாமல் கிடந்த உடல்!
ஈரானிய செய்தி நிறுவனம் தகவல்

மூன்று நாட்களுக்கு முன் உயிர்போன உடல்கூட கெட்டுப்போய்விடுகிறது.

ஆனால் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் செத்துப்போனவரின் உடல் ஒரு மாசு மறுவில்லாமல் பத்திரமாக இருந்திருக்கிறது.

எங்கே இந்த ஆச்சரியம் நடந்திருக்கிறது?

ஈரானின் வடமேற்கு பகுதியில் தொல் பொருள் ஆய்வுத்துறையினர் மேற்கொண்ட ஆய்வின் போதே மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் இறந்தவரின் உடல் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. உப்பளம் ஒன்றில் கெட்டுப்போகாத நிலையில் அந்த உடல் காணப்பட்டது.

இறந்தவரின் தலைமுடி, கண், காது, மூக்கு, வெள்ளைத்தாடி, மீசை ஆகியவை அப்படியே உள்ளன. பிரவுன் கலர் சப்பாத்தும், காற்சட்டையுடன் ஒரு கத்தியும் அப்படியே இருக்கின்றன.

இதேபோல் மற்றொரு உடலும் ஈரானில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த தகவலை ஈரானின் செய்தி நிறுவனமான 'ஈரானா' தெரிவித்துள்ளது.

பத்து மனைவிக்காரர் கைது!

பத்து பெண்களை திருமணம் செய்த சிங்கப்பூர் ஆசாமி ஒருவரை சிங்கப்பூர் பொலிசார் பிடித்து நீதிமன்றத்தில் நிறுத்தியுள்ளனர். சட்டவிரோத பாலியல் தொடர்பு என்று குற்றம்சாட்டப்பட்டபோதும், பத்து திருமணம் சட்ட விரோதம்தானா என்று ஆராயும்வரை அவரை விட்டு பத்து மனைவியரும் விலகி இருக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அவரது பெயர் அடி தலீப்ஹாரூன். (34 வயது) பத்துப் பெண்களும் சிங்கப்பூரைச் சேர்ந்தவர்கள். தீர்ப்புவரும்வரை தம் உள்ளம் கவர்ந்த கள்வனை அவர்கள் ஒருவரும் பார்க்கவே முடியாது.

ஒரு சுவாரசியத் தகவல்
அமெரிக்க நகரில் தீ எறும்புகள் கொட்டம்! தீ எறும்பை அழிக்க பிரேசில் ஈ படைகள்!!

சிறு எறும்பும் யானையை வெல்லும் என்பார்கள். இப்போது தீ எறும்பு அமெரிக்க வல்லரசையே ஆட்டிப்படைக்கிறது.

அமெரிக்காவில் உள்ள ஆண்டின் நகரில் தீ எறும்பு என்னும் ஒரு வகை எறும்பு அந்த நகர மக்களை பெரும் அவதிக்குள்ளாக்கி வருகிறது.

இந்த எறும்பு கடித்தால் கடும் வலியும், எரிச்சலும் தொடரும். இங்குள்ள மக்கள் அதனால் பெரும் துன்பப்படுகிறார்கள்.

இந்த எறும்பை ஒழிக்க அரசு மேற்கொண்ட முயற்சிகள் தோல்வி அடைந்துவிட்டன. ஒரு வகை விஷம் கலந்த இரசாயனப் பவுடர் எறும்புகள் மீது தூவப்பட்டபோதும் எறும்புகள் ஒழியவில்லை.

இப்போது புதிய வகையான திட்டம் ஒன்றை விஞ்ஞானிகள் வகுத்துள்ளனர். தீ எறும்பின் எதிரி என்று கருதப்படும் ஒரு வகை ஈ பிரேசில் நாட்டில் உள்ளது. போரியாட் வகை குடும்பத்தை சேர்ந்த இந்த ஈக்களை பிடித்து வந்து தீ எறும்புகளின் தலையில் உட்கார வைக்கவேண்டும். அந்த ஈக்கள் தீ எறும்பை சாப்பிட்டு தலையில் முட்டையிட்டு கூடுகட்டும் அந்த கூட்டம். புழுக்கள் தீ எறும்பின் மூளையை தின்று பெரிய ஈயாக மாறிவிடும்.

ஆனால் இந்த திட்டம் நடைமுறை சாத்தியமாகுமா என்று தெரியவில்லை.

ஸ்போர்ட்ஸ்
"கப்டன் பதவி இப்போது வேண்டாம் எந்தப் பந்தையும் என்னால் எதிர்த்தாட முடியும்"

இப்போதும் முகத்தில் குழந்தைத் தனம் மாறவில்லை. 21 வயதை நெருங்கிக் கொண்டிருக்கிறார்.

ஆனால்- ஆடுகளத்தில் இறங்கிவிட்டால் பார்வையாளர்கள் தம் விழிகளை அசைக்கக்கூட மறந்துவிட்டு அவரையே கவனித்துக்கொண்டிருப்பார்கள்.

இந்திய கிரிக்கெட் அணியின் உதவி கப்டன் சச்சின் டெண்டுல்கருக்குத்தான் அப்படியொரு மரியாதை.

மிக இளம் வயதில் கிரிக்கெட் அரங்கில் புயலாக நுழைந்தவர் அவர்.

குறைந்த வயதில் சதம் அடித்த வீரர்களது பட்டியலில் இரண்டாவதாக தன் பெயரைப் பதித்துக் கொண்டபோது டெண்டுல்கருக்கு வயது 17.

அந்த வயதிலும் அசுர வேகம்.

இங்கிலாந்து வீரர்கள் திறந்த வாய் மூடவில்லை.

அடுத்த சாதனை 19 வயதில். டெஸ்ட் போட்டிகளில் 1000 ரன்களை கடந்த குறைந்த வயது ஆட்டக்காரர் என்னும் சாதனைப் பட்டியலில் முதல் பெயர் அவருடையதாகிவிட்டது.

அதனை அடுத்து இந்திய அணிக்கு உதவிக் கப்டன் ஆனபோது, மிகக் குறைந்த வயதில் உதவிக் கப்டன் ஆகும் தகுதி பெற்றவர் என்ற சாதனையும், பெருமையும் அவரை தேடிவந்தது.

உதவிக் கப்டனாக நியூசிலாந்துக்கு எதிராக ஆடியபோது குறைந்த வயதில் 2 ஆயிரம் ரன்களை கடந்தவர் என்ற சாதனையை ஏற்படுத்தியிருந்தார்.

டெண்டுல்கருக்கு முன்பு இந்த சாதனையை படைத்தவர் பாகிஸ்தான் வீரர் ஜாவிட் மியண்டாட்.

மியண்டாட் 22 வயது 192 நாட்களில் 2 ஆயிரம் ரன்களை கடந்திருந்தார்.

ஆனால் டெண்டுல்கர் 20 வயது 332 நாட்களில் அதாவது 1 1/2 ஆண்டு வித்தியாசத்தில் அந்த சாதனையை படைத்திருக்கிறார்.

21 வயதிற்குள் டெஸ்ட் போட்டிகளில் 7 சதம் அடித்த ஒரே வீரர் என்ற அவரது சாதனையையும் சுலபமாக யாரும் உடைத்துவிட முடியாது.

இந்திய கிரிக்கெட் அணிக்கு தலைவரான பின்னர்தான் ஸ்ரீகாந்த்தின் சரிவும் ஆரம்பமானது. கப்டன் பதவியின் சுமை அவரது திறமையை அடித்து ஆடும் வேகத்தை கட்டுப்படுத்தியதாக சில விமர்சனங்கள் அப்போது எழுந்தன.

இப்போது டெண்டுல்கரும் உதவிக் கப்டன் என்ற சுமை காரணமாக எதிர்பார்க்கும்

காம்ளி ரன் குவிக்க பொறாமை வருமா?

அளவுக்கு ஆட முடியவில்லை என்று சில விமர்சகர்கள் குறைபட்டுக் கொள்கிறார்கள்.

அதற்கு டெண்டுல்கரே விளக்கம் அளித்திருக்கிறார். அவர் என்ன சொல்கிறார் என்று கேளுங்கள்;

"ஒரு நாள் போட்டிகளை தொலைக் காட்சியில் இரசிகர்கள் ஒவ்வொரு பந்தாக கண்காணிக்கின்றனர். இப்படிப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட ஓவர்கள் உள்ள போட்டிகளில் ஆடும்போது யோசித்து ஆடுவதற்கு நேரமிருப்பதில்லை. அடித்து ஆடவேண்டியிருக்கிறது. இதனால் விக்கெட்டும் பறிபோகிறது.

ஒருநாள் ஆட்டத்தில் தனிப்பட்ட வீரர் ரன் குவிப்பை விட அணியின் வெற்றிதான் முக்கியம். ஒருநாள் போட்டிகளில் ரன் குவிக்காமையால் எனக்கு சரிவு ஏற்பட்டுள்ளதாக கூறுகிறார்கள். எனது துடுப்பாட்டத்தின் மீது முழுமையான நம்பிக்கை எனக்கிருக்கிறது.

பாகிஸ்தானில் வாசிம் அக்ரம், இம்ரான்கான் அதிவேகமாக பந்துவீசி விக்கெட் வீழ்த்தக்கூடியவர்கள். அவர்கள் தமது பந்து வீசிசல் வைத்திருக்கும் நம்பிக்கையைப் போலவே எனது துடுப்பாட்டத்திலும் என் நம்பிக்கை உறுதியாக உள்ளது. எப்படிப்பட்ட பந்து வீச்சையும் என்னால் எதிர்த்து ஆட முடியும்."

என்று நம்பிக்கையோடு கூறுகிறார் அந்த இளம்புயல்.

"எதிர்கால இலட்சியம் என்ன? இந்திய அணியின் 'கப்டன்' பதவி கிடைக்க வேண்டும் என்ற கனவு இருக்கிறதா?" என்ற கேள்விகளுக்கு சலனம் இல்லாமல் மனம் திறந்து பதில் சொல்கிறார்,

"கப்டன் பதவி என்பது மிக பொறுப்பான சுமை. ஒரு கப்டன் அணி வீரர்களை பக்குவமாக நடத்திச் செல்ல வேண்டும். எந்த நேரத்தில் என்ன மாற்றம் செய்யலாம் என்பது தெரிந்திருக்க வேண்டும். கப்டன் பதவியை பெறுவதற்கு தற்போது நான் விரும்பவில்லை" என்று சொல்லும் டெண்டுல்கர் தனது அணி வீரர்களால் பெரிதும் மதிக்கப்படுகிறார்.

டெண்டுல்கரின் சாதனையும், மென்மையான சுபாவமும் இளம் வயதில் உதவிக் கப்டனாக அணியை நடத்திச் சொல்ல கை கொடுக்கின்றன.

வினோத் காம்ளியும், டெண்டுல்கரும் நல்ல நண்பர்கள். பள்ளித் தோழர்கள்.

காம்ளி ரன் குவித்தால் டெண்டுல்கருக்கு பொறாமையாக இருக்கும் என்று சிலர் புரளி கிளப்பி விட்டிருக்கிறார்கள்.

டெண்டுல்கர் சிரிக்கிறார்.

"அவ்வாறான தவறான விமர்சனங்கள் வரத்தான் செய்கின்றன. அணியில் உள்ள ஒவ்வொரு வீரரும் சிறப்பாக ஆடவேண்டும் என்பதே என் விருப்பம். காம்ளியும் நானும் என்றுமே நண்பர்கள். ஒருவர் வெற்றியில் மற்றவர் மகிழ்வோம். பொறாமை என்ற பேச்சுக்கே இடமில்லை."

சாதனை-சாதனை... அந்த சிகரத்தில் ஏறிக்கொண்டே இருக்க வேண்டும். அதுதான் டெண்டுல்கரின் கனவு. கனவு கைபடட்டும்.

அலசுவது — இராஜதந்திரி

வெறிச்சோடிய காலிமுகத்திடல்

ஆட்டங்காண ஆரம்பித்திருக்கும் ஆளுங்கட்சியின் ஆளுமை!

காலிமுகத்திடல், மேதினக் கூட்டங்களின்போது ஜனசமுத்திரத்தினால் இதுவரை காலமும் நிரம்பிவழிந்திருந்தது.

ஆளுங்கட்சியினரே காலிமுகத்திடலை (Galleface Green) தமது மேதினக் கூட்டங்களுக்குப் பயன்படுத்துவது வழக்கமாகும்.

தலைநகரில் உள்ள பிரமாண்டமான மைதானமாக காலிமுகத்திடல் விளங்குகின்றது. இதன் காரணமாகவே ஆட்சியிலிருப்போர் ஆண்டுதோறும் மேதினக் கூட்டங்களையும் தடல்புடலான ஏற்பாடுகளுடன் காலிமுகத்திடலில் கொண்டாடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

ஆனால் ஆளுங்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கு கடந்த ஆண்டு மேதினத்தின்போது ஏற்பட்ட இழப்பின் தாக்கம், இத்தடவையும் பாதிப்பை ஏற்படுத்தியிருந்ததை நன்கு அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மேதினக் கொண்டாட்டங்கள், கடந்த ஒரு தசாப்த காலத்துக்கும் மேலாக பிரமாண்டமான முறையில் அமைந்திருந்தன.

ஆளுங்கட்சியனரின் மேதின ஊர்வலம் நாட்டின் மிகப்பெரிய விளையாட்டரங்கான சுகதாசா விளையாட்டரங்கில் இருந்து ஆரம்பமாகும். பின்னர் ஒரு மாபெரும் 'ஜனப்பிரவாக'மாக இந்த ஊர்வலம் காலிமுகத்திடலை வந்தடையும்.

காலிமுகத்திடலில் இந்த 'ஜனப்பிரவாகம்', ஒரு 'ஜனசமுத்திரமாக' மாறி, திடலை அண்டிய அரபுக் கடலுடன் போட்டியிடுவது போல 'தளந்தட்டி' நிற்கக்காணப்படும்.

ஆனால் கடந்த ஆண்டிலும், இந்த ஆண்டிலும் காலிமுகத்திடல் மேதினத்திலன்று வெறிச்சோடிய நிலையில் இருக்கக் காணப்பட்டது.

ஓரிருவருடங்களுக்கு முன்னர் காலிமுகத்திடலில் இடம்பெற்ற மேதினக் கூட்டமொன்றில் இந்தியாவின் பிரபல

பின்னணிப் பாடகர்கள், இசை அமைப்பாளர்கள் ஆகியோரும் கலந்து கொண்டு கலை நிகழ்ச்சிகளை வழங்கியிருந்தனர்.

பிரபல தென்னிந்தியப் பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம், இசை அமைப்பாளர் கங்கைஅமரன் உட்பட வட இந்தியாவின் முன்னணி ஹிந்திப் பாடகர்களும் இக்கலைஞர்களில் அடங்கியிருந்தனர்.

மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா, பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியத்தை இரு வருடங்களுக்கு முன்னர் காலி முகத்திடலில் இடம்பெற்ற மேதினக் கலை நிகழ்ச்சியொன்றின்போது கௌரவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டிலும் ஆளுங்கட்சியினர் மேதின ஊர்வலம், பொதுக்கூட்டம் என்பனவற்றைப் பிரமாண்டமான முறையில் ஏற்பாடு செய்திருந்தனர்.

காலிமுகத்திடலில் விஸ்தாரமான மேடை போடப்பட்டிருந்ததுடன், அங்கே ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் நெடிதுயர்ந்த 'கட் அவுட்' உருவப்படமும் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

ஆனால் கடந்த ஆண்டு சுகதாசா விளையாட்டரங்கிலிருந்து ஆளுங் கட்சியினரின் மேதின ஊர்வலம் காலிமுகத்திடலை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தபோது கொழும்பு மத்திய தொகுதியின் ஆமர்வீதிச் சந்தியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு, அந்த ஊர்வலத்தை சிதறடித்திருந்தது.

ஊர்வலம் மட்டும் அன்று சிதறியிருக்கவில்லை. அதனை முன்னின்று வழிநடத்திய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் உடலும் அக்குண்டு வெடிப்பினால் உருக்குலைந்து போயிருந்தது.

இதனையடுத்து ஐ.தே.கவின் கடந்த ஆண்டு மேதின வைபவம் இடைநடுவில் குழம்பியதுடன்,கொடிகள், சோடனைகளுடன் களைகட்டியிருந்த காலிமுகத்திடலும் வெறிச்சோடலாயிற்று.

கடந்த ஆண்டின் மேதினத்திலன்று இடம்பெற்ற குண்டு வெடிப்பு, நாட்டின் தலைவரான ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவைப் பலியெடுத்திருந்ததுடன், இலங்கையின் அரசியலிலும் தொடர்ச்சியான மாறுதல்களுக்கு வழியமைத்திருந்தது.

இந்த மாறுதல்களில் ஒன்றாகவே தற்போது ஐக்கியதேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் தோன்றியுள்ள மாற்றமும் காணப்படுகின்றது.

1991ம் ஆண்டு தேசிய பந்தோபஸ்து அமைச்சராகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளராகவுமிருந்த திரு.ரஞ்சன் விஜேரத்ன குண்டு வெடிப்பொன்றில் கொல்லப்பட்டிருந்தார்.

திரு.ரஞ்சன் விஜேரத்ன ஐ.தே.கவைப் பொறுத்தவரை ஒரு பிரபலம் மிக்க அரசியல்வாதியாக விளங்கியிருந்தார்.

ஐ.தே.கவின் உட்கட்சி நடவடிக்கைகள் முதற்கொண்டு, அதன் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் அனைத்திலும் திரு.ரஞ்சன் விஜேரத்ன தீவிர கவனஞ் செலுத்தியிருந்தார்.

கூடவே தேசிய பந்தோபஸ்து அமைச்சராகவுமிருந்து பாதுகாப்புப் படையினரின் நன்மதிப்புக்குரியவராகவும் அவர் பணிபுரிந்திருந்தார்.

திரு.ரஞ்சன் விஜேரத்னவின் திடீர் மறைவையடுத்தே ஐ.தே.கவின் பொதுச் செயலாளராக திரு.சிறிசேன குரே நியமிக்கப் பட்டிருந்தார்.

மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் நம்பிக்கைக்குரியவர்களில் ஒருவராக திரு.சிறிசேன குரே விளங்கியிருந்தார். கூடவே வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சர் பதவியை வகித்ததன் மூலம் திரு.குரே, மறைந்த ஜனாதிபதியின் கிராமிய எழுச்சித் திட்டங்களுக்கும் தோள் கொடுத்திருந்தார்.

ஆனால் இந்த ஆண்டு மேதினத்திலன்று, அதாவது ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் முதலாவது சிராார்த்த தினத்திலன்று அமைச்சர் திரு.சிறிசேன குரே ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்தும் இராஜினாமாச் செய்திருந்தார்.

அமரர் பிதேமதாசாவின் உருவச் சிலையை சுமார் 17 இலட்சம் ரூபாய் செலவில் நிர்மாணித்து, கொழும்பு 'ஹல்வ்ஸ்டோப்' பிரதேசத்தில் அதன் திறப்பு விழாவையும் நடத்தி முடித்ததே திரு.சிறிசேன குரே ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளராக இருந்து மேற்கொண்ட இறுதிப் பணியாகவும் விளங்கியிருந்தது.

அமரர் பிரேமதாசாவின் சிலை திறப்பு வைபவமே இத்தடவை ஐ.தே.கவின் பிரதான மேதின நிகழ்ச்சியாகவும் விளங்கியிருந்தது. இச்சிலை திறப்பு வைபவம், மற்றும் அமரர்

பிரேமதாசாவின் முதலாவது சிரார்த்த தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட மத வைபவங்கள் தவிர வேறு அரசியல் கூட்டங்களிலோ, ஊர்வலங்களிலோ ஆளுங் கட்சியினர் இறங்கியிருக்கவில்லை.

ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க இந்த ஆண்டை ஒரு தேர்தல் ஆண்டென்று முன்பு குறிப்பிட்டிருந்தார். ஆனால் கடந்த காலங்களில் தேர்தல் இடம் பெறவிருக்கும் ஆண்டொன்றில் வரும் மேதினத்திலேயே ஆட்சியிலிருப்போர் உட்பட, அனைத்து அரசியல் தரப்பினரும் தத்தமது அரசியல் நிலைப்பாடுகளை விரிவான முறையில் வெளிப்படுத்துவதுண்டு.

ஐக்கிய தேசியக் கட்சியனரின் கடந்த ஆண்டுக்கு முற்பட்ட மேதின ஊர்வலங்கள் எதிரணியினரைச் சாடுவதாகவும், ஐ.தே.கவின் அரசியல் திட்டங்களை வெளிப் படுத்துவதாகவும் அமைந்திருந்தன.

ஆனால் இத்தடவை ஒரு 'புயலடித்து ஓய்ந்த' நிலைக்கு முகங்கொடுத்தவர்கள் போன்றே ஆளுங் கட்சியினர் மேதினத்திலன்று மௌனம் சாதித்திருந்தனர்.

அமரர் ரணசிங்க பிரேமதாசாவின் ஓராண்டு சிரார்த்த தினத்தை முன்னிட்டே ஆளுங்கட்சியினர், இத்தடவை மேதினத்தில் அமைதியைப் பேணியிருந்தனர் என்ற அபிப்பிராயம் வெளியுலகிற்கு ஏற்படுத்தப் பட்டிருந்தது.

ஆனால் மறைந்த ஜனாதிபதியின் சிலையைத் திறந்து வைப்பதற்குக்கூட இன்றைய ஜனாதிபதி சமூகமளிக்காதமை, மேலும் சிலை திறப்பு வைபவத்தில் அமரர் பிரேமதாசாவின் மனைவி, பிள்ளைகள்கூட கலந்து கொள்ளாதமை போன்ற விடயங்கள் ஐ.தே.கவில் நிலவும் உட்பூசலை தெளிவு படுத்தியிருந்தன.

இந்த உட்பூசலை திரு.சிறிசேன குரேயின் இராஜினாமா மேலும் வெளிச்சம் போட்டுக் காட்டுவதாகவே விளங்கியிருந்தது.

இந்நிலையில் ஆட்சியாளரின் நடவடிக்கைகள் காரணமாக மேதினத்திலன்று காலிமுகத்திடல் மட்டும் வெறிச்சோடி விடவில்லை. கடந்த பதினேழு வருடகாலமாக 'பச்சைப் பசேலென' பட்டொளிவீசிப் பறந்த ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளும் வெறுமை குடிகொள்ள ஆரம்பித்துள்ளதையே இத்தடவை மேதினம் புலப்படுத்தியிருந்தது.

மேல் மாகாண முதலமைச்சர் திருமதி. சந்திரிக்கா குமாரணதுங்க பண்டாரநாயக்கா தலைமையில் கொழும்பு கம்பெல் மைதானத்தில் (Camphel Park) பொதுஜன மக்கள் முன்னணியினரின் மேதின வைபவம் கோலாகலமான முறையில் இடம் பெற்றிருந்தது.

நாட்டின் அனைத்துப் புறங்களிலிருந்தும் வந்திருந்த பல்லாயிரக்கணக்கானவர்கள் இந்த கம்பெல் மைதான மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

தென்மாகாணத் தேர்தலில் மக்கள் முன்னணியினர் ஈட்டியிருந்த வெற்றிக்குப் பின்னர், முதல் தடவையாக தலைநகரில் அம் முன்னணியினரால் நடத்தப்பட்ட மாபெரும் அரசியல் வைபவமாக இத்தடவை மேதினம் விளங்கியிருந்தது.

இந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் ஆகியன இடம்பெறவுள்ளன.

இத் தேர்தல்களுக்கு இன்னும் ஏழு மாதங்களே இருக்கின்ற தறுவாயில் ஆளுங்கட்சிக்குள் பூசல்கள் ஏற்பட்டிருக்கக் காணப்படுகின்றன.

இந்நிலையில் எதிர்வரும் தேர்தல்களில் ஆளுங்கட்சியினர் எவ்வளவு தூரம் தாக்குப் பிடிப்பார்கள் என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

கடந்த சில மாதங்களாக எதிர்க் கட்சிகளைப் பலவீனப்படுத்துவதிலும், எதிர்க்கட்சி உறுப்பினர்களை தம் பக்கம் சேர்த்துக் கொள்வதிலுமே ஆளுங்கட்சியினரான ஐ.தே.கவினர் மும்முரமாக இயங்கியிருந்தனர்.

திரு.அநுரா பண்டாரநாயக்கா ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்தும், திரு.காமினி திசாநாயக்கா ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியிலிருந்தும் விலகி ஆளுங் கட்சியினருடன் இணைந்திருந்தனர்.

இந்த இருவரையும் இணைத்துக் கொண்ட நிலையில் ஐ.தே.க தென் மாகாணத் தேர்தலில் தனது பலத்தைப் பரீட்சித்திருந்தது. ஆனால் அத்தேர்தலில் புகட்டப்பட்ட பாடம் ஐ.தே.கவுக்கு ஒரு பலத்த அடியாகவே விழுந்திருந்தது.

தென்மாகாணத் தேர்தல் தோல்வியிலிருந்து சுதாகரித்துக்கொள்ளு முன்னரே, திரு.சிறிசேன குரேயின் இராஜினாமா, ஆளுங்கட்சியினரை மேலும் ஆட்டங்காணச் செய்வதாகக் காணப்படுகின்றது.

எதிரணியினரைப் பலவீனப்படுத்துவதிலும், எதிரணி உறுப்பினர்களைத் தம்பக்கம் சேர்த்துக்கொள்வதிலும் முனைப்படைந்திருந்த ஐ.தே.கவினரிடையே தற்போது பலவீனம் குடிகொண்டுள்ளதுடன், எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் நிச்சயமற்ற நிலை உருவாகியுள்ளது.

ஆளுங்கட்சியினரின் இன்றைய நிலை நெருக்கடிகள் நிறைந்ததொன்றாகவே காணப்படுகின்றது. தென்னிலங்கையில் ஆளுங்கட்சியினர் மீதான வெறுப்புணர்வு வலுவடைய ஆரம்பித்துள்ளது.

வடக்கு-கிழக்குப் பிரச்னை தொடர்ந்து ஒரு பெரும் சவாலாகவே இருந்து வருகின்றது. வுவுனியாவிற்கு, வடக்கே 'ஒப்பரேஷன் ஜயமஹா' என்ற இராணுவ நடவடிக்கை கடந்த வாரங்களில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இராணுவத்தினர் வவுனியாவிலிருந்தும் மன்னார் பிரதேசம் நோக்கி பல மைல்கள் தூரம் இந்த இராணுவ நடவடிக்கையின் போது முன்னேறியிருந்தனர்.

புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பல பகுதிகள் இராணுவத்தினரால் இந்த 'ஒப்பரேஷன் ஜயமஹா' நடவடிக்கையின் போது மீட்கப்பட்டிருந்தன.

தென்னிலங்கையில் அரசியல் ரீதியான மாற்றங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் இத்தருணத்தில், வடக்கு-கிழக்கில் இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டிருக்கக் காணப்படுகின்றன.

ஆனால் ஆளுங்கட்சியினர் இத்தடவை தாமே குழம்பிப்போயிருந்த நிலையில் அரசியல், இராணுவ நடவடிக்கைகள் குறித்த தமது நிலைப்பாட்டை இத்தடவை மேதினத்திலன்று தெளிவு படுத்த முடியாதிருந்தனர்.

இருந்தபோதிலும் ஹல்வ்ஸ்டோப்பில் அமரர் பிரேமதாசாவின் சிலை திறப்பு வைபவத்தில் உரையாற்றிய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான எஸ்.தொண்டமான் சிறுபான்மை இன மக்களின் எதிர்பார்ப்புகள் குறித்து ஒளிவு மறைவற்ற கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

"இன, மத குரோதங்களைத் தூண்டிவிடுவதன் மூலம் எக்காலத்திலும் இந்நாட்டில் அமைதியை ஏற்படுத்த முடியாது. 1983ம் அண்டில் இடம்பெற்ற இனக் கலவரம் போன்று மீண்டுமொருதடவை கலகம் தோன்றுவதை எவரும் அனுமதிக்க முடியாது" என்று திரு. தொண்டமான் அழுத்தம் திருத்தமாகத் தமது உரையில் கூறியிருந்தார்.

1983ம் ஆண்டில் ஜனாதிபதியாக இருந்த திரு.ஜே.ஆர்.ஜயவர்த்தனாவும், அமரர் பிரேமதாசாவின் சிலையைத் திறந்து வைத்த பின்னர், அமைச்சர் எஸ்.தொண்டமானின் இந்த உரையை செவிமடுத்திருக்கக் காணப்பட்டார்.

இதேவேளை பொதுஜன ஐக்கிய முன்னணியின் மேதினக் கூட்டத்தில் மேல்

சிறிசேன குரே

மாகாண முதலமைச்சர் திருமதி.சந்திரிக்கா குமாரணதுங்க பண்டாரநாயக்கா, "இந்த அரசாங்கம் ஆட்சியிலிருக்கும்வரை இந்நாட்டில் இனப்பிரச்னைக்குத் தீர்வு ஏற்பட்டுவிடாது" என்று தெரிவித்திருந்தார்.

சலக தரப்பினராலும் கண்டனக் கணைகளும், எதிர்ப்புக் கோஷங்களும் விடுக்கப்பட்ட நிலையில் தாம் வெறுமையடைந்துள்ளதை ஆளுங்கட்சியினரான ஐ.தே.கவினர் தற்போது உணர்ந்திருக்கக் காணப்படுகின்றனர்.

இந்நிலையில் இத்தடவை மேதினத்திலன்று ஆளுங்கட்சியினரின் பொதுக்கூட்ட மைதானமான காலிமுகத்திடல் மட்டும் வெறிச்சோடிவிடவில்லை.

அவர்களது அரசியலில்கூட வெறுமையும், வரட்சியும் இழையோடியிருந்ததையே காணக்கூடியதாக இருந்தது.

உடல் செழிக்க இது உதவும்!

பேர்ச்சைப் பழத்தில் மனிதனுக்குத் தேவையான அளவிற்கு அனைத்து ஊட்டச்சத்துக்களும் இருக்கின்றன. டீ,காபி குடித்ததும் உடலுக்கு உடனடியாகக் கிடைக்கின்ற உற்சாகம் பேர்ச்சைப் பழத்தால் கிடைக்கிறது என்று மருத்துவ விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

யுனானி மருத்துவர்கள் தயாரிக்கின்ற செக்ஸ் லேகியங்களில் பேர்ச்சைப்பழம் முக்கியமாக கலக்கப்படுகிறது. இந்திரியத்தில் உயிரணுக்களின் குறைவால் குழந்தை பாக்கியம் உண்டாகாது. அதை மாஜீன் ஆரத்குர்மா என்னும் 'பேர்ச்சைப்பழ லேகியம் நிவர்த்தி செய்து குழந்தை பாக்கியத்தையும் ஏற்படுத்தி தருகிறது. பெண்களின் ஒழுங்கற்ற மாதவிலக்கை சரி செய்கிறது. இளைஞர்களின் இரகசிய பிரச்சனைகளையும் குணமாக்குகிறது.

விலை உயர்ந்த டானிக்குகள், ஊட்டச்சத்து நிறைந்த உயர்ந்தரக உணவுகள் சாப்பிட்டும் ஒல்லியாக இருப்பார்கள். உடலில் சதை பிடிக்காமல் காணப்படுவார்கள். இவர்களுக்கு பேரீச்சைப்பழத்தால் தயாரிக்கப்பட்ட லேகியங்களான லபூக்சகீர், ஹல்வாஸாலப், லபூப் ஆஜம் போன்றவைகள் வரப்பிரசாதமாக அமைந்திருக்கின்றன. காலை, மாலை ஒரு டீஸ்பூன் அளவில் பாலுடன் சாப்பிட்டால் ஒல்லியான உடல் குண்டாகும். சப்பையான முகம் கவர்ச்சிகரமாகும். ஆண்-பெண்களின் பிறப்புறுப்பு கோளாறுகளையும் குணமாக்கும்.

உலர்ந்த பேரீச்சைப் பழங்கள் ஏழு எண்ணிக்கை ஒரு டம்ளர் பாலில் கொதிக்க வைத்து காலை, மாலை இரண்டு வேளையும் சாப்பிடலாம். இது வீட்டு வைத்தியமாகும்.

மாரடைப்பு, நெஞ்சுவலி ஏற்படும் போது ஏழு பேரீச்சைப்பழங்களை கொட்டையுடன் இடித்து சாப்பிட்டால் மாரடைப்பு நோயிலிருந்து தடுக்கப்படுவார்கள்.

வெறும் வயிற்றில் பேரீச்சைப்பழத்தை சாப்பிட்டால், வயிற்றில் உள்ள நாக்குப் பூச்சிகள் செத்துவிடும்.

அழகிய தொப்பி

தொப்பிகள் தயாரிக்கும் நிறுவனமான ஐ.ஜி.இ.டி.ஓ., தனிநபர்கள் அணிவதற்கான தொப்பியை அறிமுகம் செய்திருக்கிறது. பல அழகிய வடிவங்களுடனும், மழைக்காலத்தில் தொப்பிகள் நனையாதபடியும், வெயில் காலத்தில் வியர்வைகளால் பாதிப்பு ஏற்படாதபடியும் குளுகுளுவென்று பாதுகாப்பு அளிக்கும் விதத்திலும் மிருதுவாக வடிவமைக்கப்பட்ட இந்த தொப்பிகளுக்கு சர்வதேச அளவில் பலத்த வரவேற்பு உள்ளது.

சர்வதேச தரம் வாய்ந்த இந்த தொப்பிகள் அணியும் நாகரிகத்தை ஊக்கப்படுத்தியதற்காக, இந்த நிறுவனத்தின் இரண்டு மாடலிங் பெண்களுக்கு டஸ்செல்டோர்ஃப் என்ற இடத்தில் பாராட்டு விழா நடத்தி, 1993-94ம் வருடத்தின் வருமானத்தை அன்பளிப்பாக அளித்திருக்கிறது இந்த நிறுவனம்.

அழகுக் குறிப்புகள்

மஞ்சள் இருக்க பயமேன்?

மேக்கப் சாதனங்கள் உபயோகிப்பதால் மட்டுமே பெண் அழகாகிவிடுவதில்லை. மஞ்சள் பூசிக் குளிப்பது நல்லது. ஆமினும் வள்ளி மஞ்சள் தேய்த்துக் குளித்தால் முகம் மட்டும் தனியாக மஞ்சள் அப்பியதுபோல் தெரியும். அதற்குப் பதிலாக கஸ்தூரி மஞ்சள் நாட்டு மருந்துக் கடைகளில் கிடைக்கும். அதை வாங்கி தேய்த்துக் குளித்து வந்தால் மஞ்சள் நிறம் வெளிறி முகம் சற்று மாநிறமாகத் தெரியும். மஞ்சள்-முகத்திற்கு அழகு!

முகச்சுருக்கமா?

முகத்தில் சுருக்கம் வராமலிருக்க வேண்டுமானால் 25 வயதிற்கு முன்னரே முயற்சி எடுக்க வேண்டும். தேங்காய் எண்ணெய் அல்லது பாலேடு எடுத்து முகம் முழுக்க கீழிருந்து மேலாக தேய்த்து விட வேண்டும். தினமும் இரண்டு வேளை அவ்வாறு செய்துகொண்டு, முகத்தை சிரித்தாற்போல் வைத்துக்கொண்டால் முகச்சுருக்கம் எட்டியும் பார்க்காது.

உரத்த சிந்தனை

தமிழக எழுத்தாளர் சிவசங்கரி எழுதிய கட்டுரை ஒன்றில் இருந்து......

தனிப்பட்ட விருப்புகளில் தலையிடுவது ஏன்? பெண்ணுக்கு மட்டும் மாறுபட்ட நீதி எதற்கு?

ஆணுக்கு ஒரு நீதி, பெண்ணுக்கு ஒரு நீதி என்றிருக்கும் நிலை எப்போது மாறும்? பெண்ணை இரத்தமும், சதையும் கொண்ட ஒரு மனுஷியாக இந்த சமுதாயம் எப்போது ஏற்றுகொள்ளப் போகிறது?

மனைவியை இழந்த ஆணைக் குறிக்க 'விதவன்' என்ற சொல் வழக்கில் இல்லாத போது 'விதவை' என்ற அடையாளச் சொல் மட்டும் எதற்கு?

தோற்றத்தைக் கொண்டு ஒரு ஆணின் மனைவி உயிருடன் இருக்கிறாளா இல்லையா என்பதை தெரிந்து கொள்ள ஆர்வம் காட்டாத சமூகம், எதற்காகத் தோற்றத்தின் மூலம் கணவன் இருக்கிறானா, இறந்துவிட்டானா என்று ஒரு பெண் தெரியப்படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கிறது?

கணவனை இழந்து, பாதுகாப்புத் தகர்ந்து பிரிவில் துடிக்கும் பெண்ணை ஆதரவுடன் அணுகி இதமாய் நடந்துகொள்ள வேண்டிய தருணத்தில் "இதைச் செய்யாதே, அப்படி உடுக்காதே, இங்கே வராதே" என்று வேண்டாத சங்கிலிகளைப் பிணைத்து அவளை மென்மேலும் வருத்துவதில் இந்த சமுதாயம் என்ன சாதிக்கிறது?

இது பண்பாடு என்ற பெயரில் நடத்தப்படும் பழிவாங்கலா?

பாரம்பரிய பழக்கத்தை காப்பாற்றுகிறேன் என்ற அசட்டுத்தனமா?

அல்லது தெரியாத்தனமா?

ஏதோ ஒன்றோ, அல்லது எல்லாமே தானா? எதுவாக இருப்பினும் இந்த தேவையற்ற பழக்க வழக்கங்கள் உடனடியாய் நிறுத்தப்பட வேண்டும் என்பதுதானே நிஜம்?

உடுப்பதும், உறங்குவதும், உண்ணுவதும், அலங்கரித்துக்கொள்வதும், மீண்டும் துணை தேடுவதும் தனிநபரின் விருப்பு, வெறுப்புக்களைப் பொறுத்தது. பசித்தவர் சாப்பிடட்டும். துணைக்கு ஏங்குபவர் மறுமணம் செய்து கொள்ளட்டும். விரும்புகிறவர் 'பளிச்'சென்று அலங்காரம் செய்து கொள்ளட்டும். அது அவரவர் விருப்பம்.

புருஷனை இழந்து விடுவதால் ஒரு பெண் அமங்கலியாகி, எல்லா விதத்திலும் அமங்கலமாக ஆகிவிடுவதும், இதன் காரணமாய் பத்து மாதம் சுமந்து பெற்ற மகனின் திருமணத்தைக்கூட யார் கண்ணிலும் படாமல் அவள் ஒளிந்துகொண்டு காண வேண்டும் என்ற கட்டுப்பாடும் என்னைப் பொறுத்தவரை காட்டுமிராண்டித்தனமான செயல்களே!

லேடீஸ் ஸ்பெசல்

பரிசுத் திட்ட கூப்பன் இல-12

தினமுரசு-அருள் ஜுவல்லர்ஸ் இணைந்து வழங்கும் தங்க நகைப் பரிசுத் திட்டம்

தங்க நகைப் பரிசுத் திட்டத்தில் பங்குபற்றி வெற்றியீட்டும் அதிஷ்டசாலிகளில் முதல் அதிஷ்டசாலிக்கு தங்க நகை காத்திருக்கிறது.

ஏனைய பத்து அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.

1. மகளிர் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
2. இல 1 முதல் 20 வரையான பரிசுத்திட்ட கூப்பன்களைச் சேகரித்து வையுங்கள்.
3. சேகரித்து வைத்துள்ள கூப்பன்களைப் பின்னர் நாம் குறிப்பிடும் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்கலாம்.

அழகிய முக அமைப்பு—ஆய்வுகள் தரும் முடிவு

உலகளாவிய நிலையில் ஒரு பெண்ணின் முக அழகுக்கான பிரதான அம்சங்கள் எவை என்பதை 'நேச்சர்' (இயற்கை) சஞ்சிகை அண்மையில் வெளியிட்டிருந்தது. பிரிட்டனிலும் ஜப்பானிலும் ஒரே கால கட்டத்தில் இதற்கான ஆய்வுகள் இடம்பெற்றுள்ளன.

இரு நாடுகளிலுமுள்ள அழகிய முகங்களைக் கொண்ட பெண்களின் புகைப் படங்களை வைத்தே ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன. 224 புகைப்படங்களை மூன்று பிரிவுகளாகப் பிரித்து ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டன.

முகத்தின் அளவுக்கு ஏற்ப பெண்ணின் கண்கள் சற்றுப் பெரிதாக இருக்க வேண்டும். கன்னங்களில் எலும்புகள் சற்று உப்பினாப் போலிருக்க வேண்டும். கீழ்த்தாடை சற்றுத் தளர்வுடனும்; தடிப்பமான-மிருதுவான கீழுதடும் கொண்டிருத்தல் வேண்டும். மூக்குக்கும் வாய்க்கும் இடைப்பட்ட தூரமும் வாய்க்கும் நாடிக்கு மிடையிலான தூரமும் குறைவாக இருக்க வேண்டும். பெண்களின் அழகு முகங்களுக்கான பொது விதிகள் இவைதான் என ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளன.

மிக அழகிகள், நடுத்தர அழகிகள், சாதாரண அழகிகள் என்ற பகுப்புகளில் பொதுவாக மூன்றாவது ரகமான சாதாரண பிரிவைச் சேர்ந்தவர்களே உண்மையில் அழகானவர்கள் என்று இரு நாடுகளிலுமுள்ள ஆராய்ச்சியாளர்கள் முடிவுக்கு வந்தனர். இந்த பிரிவினரே பிரிட்டனிலும் ஜப்பானிலும் பெரிதும் பிரமிப்போடு பார்க்கப்படுகிறார்கள் என்று அந்த ஆராய்ச்சி முடிவுகள் கூறுகின்றன.

சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது-சுகந்தினி

காரட் வடாம்

தேவையான பொருட்கள்:

சவ்வரிசி-1 படி
காரட்- 1 கிலோ
பச்சை மிளகாய்- 200 கிராம்
பெருங்காயம்- சிறிதளவு
எலுமிச்சம்பழம்-2
உப்பு-தேவையான அளவு

செய்முறை:

முதலில் சவ்வரிசியை நன்றாக சுத்தம் செய்துகொண்டு, ஒரு பாத்திரத்தில் கொட்டி சுமார் மூன்று மணி நேரம் ஊற வைக்கவும். பிறகு காரட்டை தோல் சீவி துண்டு துண்டாக நறுக்கி குக்கரில் வேகவைத்து எடுத்துக் கொள்ளவும். அத்துடன் பச்சைமிளகாய், உப்பு, பெருங்காயம் இவைகளைச் சேர்த்து மிக்சியில் அரைக்கவும்.

அடி கனமான பாத்திரத்தில் தண்ணீர் விட்டு, அது கொதிக்கும் பொழுது அரைத்து வைத்துள்ள விழுதைப் போட்டு ஒரு கொதி வந்ததும் சவ்வரிசியையும் அதில் கொட்டி நன்றாகக் கிளறவும். சவ்வரிசி வெந்ததும் கீழே இறக்கி வைத்து, எலுமிச்சம் பழத்தை அதில் பிழிந்து நன்றாக ஆறிய பின் ஒரு வெள்ளைத் துணியை வெயிலில் விரித்து அதன்மீது மாவை கரண்டியால் எடுத்து வட்டமாக விடவும். நன்றாக வெயிலில் காய்ந்ததும் எடுக்கவும்.

பருப்பு வடாம்

தேவையான பொருட்கள்:

பயத்தம் பருப்பு- 1 கிலோ
பெரிய பயத்தம் பருப்பு- 1 கிலோ
கடலைப்பருப்பு- 1/4 கிலோ
வெள்ளை உளுந்து- 100 கிராம்
இஞ்சி- 100 கிராம்
கறுவா- 20 கிராம்
ஏலக்காய்-20 கிராம்
பூண்டு-50 கிராம்
வெங்காயம்- 1/4 கிலோ
பச்சை மிளகாய்- 50 கிராம்
கொத்தமல்லித்தழை- 1 கட்டு
உப்பு-தேவையான அளவு

செய்முறை:

முதலில் பெரிய பயத்தம் பருப்பை எந்திரத்தில் போட்டு உடைக்கவும். முதல்நாள் இரவு பருப்பை தனித்தனியாக ஊறவைக்கவும்.

பொழுது விடிந்ததும் பருப்புகளை களைந்து தனித்தனியாக அரைக்கவும். இஞ்சி, பூண்டு, வெங்காயம் ஆகியவற்றை தோல்நீக்கி அரைக்கவும். ஏலக்காய், கறுவா, மிளகாய் சேர்த்து விழுதுபோல் அரைத்து, வைத்துள்ள பருப்புக் கலவையில் நன்றாகக் கலக்கவும். ஒரு துணியை வெயிலில் விரித்து அதில் கலவையை கிள்ளி வைக்கவும். நன்றாகக் காய்ந்ததும் எடுக்கவும்.



கிழங்கு ரோஸ்ட்

பெரிய அளவு உருளைக்கிழங்கை எடுத்துக்கொள்ளுங்கள். கனமான அளவில் வட்டவட்டமாக வெட்டிக்கொள்ளவும். முதலில் அரைகுறையாக வேக வைத்துக்கொள்ளுங்கள். இந்த உருளைக் கிழங்கின்மீது வெண்ணை அல்லது மார்ஜரின் பூசி பிரட் ரோஸ்ட் செய்வது போல் மொறு மொறுவென்று ரோஸ்ட் செய்து கொள்ளுங்கள். அதன்மீது உப்பு, மிளகு தூள் கலந்து சாப்பிட்டுப் பாருங்கள். சுவையாக இருக்கும். மாலை டிபன் ரெடி. தேவைப்பட்டால் 'சோஸ்' போட்டும் சாப்பிடலாம்.

வீட்டுக் குறிப்புகள்

தோலினால் ஆன சப்பாத்து உப்பு தண்ணீரில் நனைந்தோ, மழைக்காலங்களில் பூஞ்சை பிடித்தோ காணப்பட்டால், ஒரு மேசைக்கரண்டி பால் எடுத்துக் கொண்டு, அதில் இரண்டு தேக்கரண்டி மென்திலேட்டு ஸ்பிரிட் கலந்து கொள்ளவும். இந்த கலவையை கொண்டு சப்பாத்தைப் பாலிஷ் போட்டு பாருங்கள். அது பளபளவென்று புதியது போல் மாறிவிடும்.

தொடர்ந்து பத்து பதினைந்து நாட்களுக்கு வெளியூர் செல்ல நேரும்போது, வீட்டினுள் இருக்கும் பூத் தொட்டிகளில் தேவையான தணணீர் விட்டு ஒரு பிளாஸ்டிக் பேப்பரை கொண்டு தொட்டியை முழுவதுமாக மூடி விடுங்கள். இதனால் செடி வாடி விடாமலும், தண்ணீர் வறண்டு விடாமலும், செடி அப்படியே வனப்பாக இருக்கும்.

நீங்களும் தைக்கலாம்

4 வயதுப் பையனுக்கான காற்சட்டை

-சுதா-



காற்சட்டையின் உயரம் 14",13"
காற்சட்டையின் அகலம் 11"
சீற்லைன் உயரம் 11"(F.F)

Aயிலிருந்து Fவரை 11 அங்குலம் பதிவாகவும் Cயிலிருந்து 1 1/2" உள்நோக்கி Gவரையும் குறித்துக்கொள்க. பின்னர் F.Gஐ வளைவாக வரைந்து கொள்ளவும். Aயிலிருந்து Eவரை 1 1/4" உள்நோக்கி குறித்துக் கொள்ளவும். E,Fஐ வளைவாக வரைந்து கொள்ளவும். Dயிலிருந்து 3"அல்லது 4" மேல் நோக்கியும் பக்கமாக குறித்து G,Bஐ வளைவாக வரைந்து வெட்டிக்கொள்ளவும்.

மேலே படத்தில் காட்டப்பட்டவாறு 4 துண்டுகளை வெட்டி எடுக்கவும். வெட்டிய இரண்டு துண்டுகளை எடுத்து F,Gஐ பொருத்துக. பொருத்திய பகுதியை திருப்பி எடுத்துக்கொள்ளவும். சீற் லைனுடன் (E.Fபகுதியை) பொருத்திக் கொள்க. வளைவான பகுதிக்கு 1 1/2" அங்குலமான குறோஸ் பீஸ் (குறுக்குவெட்டுத்துணி) வேறு நிறத்தில் பைப்பிங் கொடுக்கவும். இரண்டு பின் பகுதியும் முன் துண்டினை மறைத்து வெளியே தெரியும்படி. குறோஸ்பீஸ் பகுதியை மேல் வைத்து பொருத்திக் கொள்ளவும். அதன்பின் மேற் பகுதியில் 1 1/2"அங்குல அகலத்திற்கு மடித்துத் தைத்து எலாஸ்ரிக் தைத்துக் கொள்ளவும்.

காணாமல் போனது குழந்தை! கண்டுபிடித்தது மனிதக் குரங்கு!!

ஜெர்மனியில் ஆச்சரியம்

கடும் குளிரில் மலைப் பிரதேசக் காட்டில் 2 வயதான குழந்தை காணாமற்போய் விட்டது. அதே குழந்தையுடன் தோழமை கொண்டு வளர்ந்து வந்த சிம்பான்ஸி அக்குழந்தையைக் கண்டு பிடித்து பெற்றாரிடம் சேர்த்து விட்டது.

ஹன்னாவும் அவள் கணவன் எரிக் பேர்ண்ஃபீல்டும் ஜெர்மனியில் பொண் நகருக்கருகாமையிலுள்ள ஒரு கிராமத்தில் வாழ்ந்து வந்தனர்.

மூன்று வருடங்களுக்கு முன்னர் சில கிலோ மீட்டர்களுக்கு அப்பாலுள்ள அவர்களுடைய பண்ணைக்குச் சென்றிருந்தபோது தனது தாயினால் ஒதுக்கப்பட்டுக் கிடந்த ஒரு சிம்பான்ஸி (மனிதக்) குரங்குக் குட்டியைக் கண்டெடுத்து, குழந்தையைப் போல் பாராட்டி வளர்த்தனர்.

அடுத்த வருடமே ஹன்னா, கிளவுஸ் என்ற மகனை ஈன்றாள். கிளவுஸும் ஸ்ட்றடல் என்ற சிம்பான்ஸியும் மிக நெருக்கமான தோழர்களாகி விட்டனர். ஒருவரையொருவர் விட்டுப் பிரியாமல் எப்போதும் ஒட்டியே திரிவார்கள். ஒன்றாகவே உணவு உண்டு, ஒரே அறையிலேயே படுத்தும் தூங்குவார்கள். விசித்திரமான இந்த உறவினைக் கண்டவர்கள் அதிசயப்பட்டனர்.

எரிக் தன் மனைவி மகனுடன், சிம்பன்ஸி ஸ்ட்றடலையும் அழைத்துக்கொண்டு றென்னேரொட் என்ற இடத்தில் உள்ள பண்ணைக்குச் சென்றிருந்தார். இந்த இடத்திலேதான் ஸ்ட்றடல் கண்டெடுக்கப்பட்டமையினால் அங்கு அதனைச் சுதந்திரமாக அலைய விட்டால், காட்டுக்குள் ஓடிச்சென்று தன் இனத்துடன் சேர்ந்து விடக்கூடும் என்ற பயத்தினால் அதனைக் கட்டியே வைத்திருந்தனர். இதனால் குழந்தை கிளவுஸ் மிகவும் வேதனை அடைந்தான். அந்தப் பிராணியும் வருந்தவே செய்தது.

ஒருநாள் பகலில் வெளிப்புறத்தில் விளையாடிக்கொண்டிருந்த குழந்தை கிளவுசை எங்கு தேடியும் காணவில்லை.

> “உறவுக்கு கைகொடுப்பதும்
> உரிய நேரத்தில்
> இயன்றவரை உதவுதலும்
> மனிதர் மத்தியில்
> மறைந்து வரும்
> இக்காலத்தில்.....
> இப்படி ஒரு ஆச்சரியம்!”

மாலையானதும் எங்கும் இருள் சூழ்ந்ததுடன் பனியும் குளிரும் அதிகரித்தது. பேர்ண்ஃபீல்ட் தம்பதியினர் செய்வதறியாது தவித்ததைப் போலவே தனது தோழனின் நடமாட்டத்தைக் காணாத ஸ்ட்றடலும் கவலையிலாழ்ந்தது.

தன்னை விடுவித்துக் கொள்ளவும் பெரும் பிரயத்தனப்பட்டது-கூச்சலிட்டது. குழந்தையைக் காணாது தவித்த பெற்றோருக்கு குரங்கின் கூச்சல் மேலும் சினத்தையே ஊட்டியது.

அடுத்த நாட்காலை குழந்தையைத் தேடிக் கண்டு பிடிப்பதற்கென ஒரு தேடுதல் கோஷ்டி புறப்பட்டது. ஆனால் பலன் எதுவும் கிடைக்கவில்லை. 48 மணி நேரமாகியும் குழந்தை பற்றிய தகவல் கிடைக்கவில்லை. இதே காலகட்டத்தில் தான் சிம்பான்ஸியும் கட்டை அறுத்துக்கொண்டு ஓடியதனையும் அவதானித்தனர்.

இப்போது குழந்தையுடன் குரங்கையும் தேடவேண்டிய நிலை. இரண்டு மணி நேரத்தின் பின் காணாமல் போன குரங்கார் வந்து கொண்டிருந்தார். அருகே குழந்தையும் கூட வந்துகொண்டிருந்தது.

குழந்தை கிளவுசுடன் அது வீடு வந்து சேர்ந்ததைக் கண்டு பெற்றார் ஆனந்தக் கண்ணீர் வடித்தனர். தோழர்கள் இருவரையும் அணைத்து முத்தமாரி பொழிந்தனர்.

கிளவுஸ் பசியாலும் குளிரில் அலைந்தமையினாலும் மிகவும் களைப்புற்றிருந்தான்.

சிம்பான்சியுடன் காடுமேடுகளிலும் பற்றைகளிலும் புகுந்து இடம் தேடிவந்தமையினால் அவன் உடம்பிலும் கால்களிலும் சிறு சிறு சிராய்ப்புகளும் காணப்பட்டன. ஒரு வகை மயக்கமான நிலையிலிருந்தபோதும் அந்த அறிவுள்ள சிம்பான்ஸி குழந்தையை கை பிடி தளராமல் இழுத்தே வந்திருக்க வேண்டும் என்று தென்பட்டது.

“இத்தகைய ஓர் அதிசயமான சம்பவத்தை என் வாழ் நாளில் எப்போதுமே கண்டதில்லை. இந்தக் கடும் குளிரில், அடர்ந்த கானகத்தில், அந்தப் பச்சிளம் பாலகன் உயிருடன் மீட்கப் படலாம் என்று எவருமே கருதவில்லை” என்று ‘வெஸ்றவால்ட் மவுண்டன் றெஸ்கியு ரீம்’ என்ற தேடுதல் குழுவின் தலைவர் டெயிற்றர் பாச் தெரிவித்தார்.

தங்கள் மகனை உயிருடன் மீட்டுத் தந்த ஸ்ட்றடன் மீது என்றுமில்லாத பாசத்துடன் பேர்ண்ஃபீல்ட் தம்பதியினர், தங்கள் மூத்த மகன் போன்று பேணி வளர்த்து வருகின்றனர். கிளவுசும் தன் ‘சகோதர’னுடன் மிக அந்யோன்யமாகப் பழகி மகிழ்கிறான்.

தேனீ மொய்க்கும் திட மேனி!

கொட்டும் தேனீ இவர் உடலெங்கும் ஒட்டிக்கொண்டது.

முல்லைக்கு தேர் கொடுத்த பாரியைப்போல, தேனீக்கு தன் மேனியைக் கொடுத்துள்ள இந்த மனிதன் ஒரு பேராசிரியர்.

பெயர்-நோர்மன் கோரி. அறிவியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகிறார். நடைமுறை இருந்தால்தானே ஆராய்ச்சியின் பயன் என்னவென்பது தெரியும்!

இராணித் தேனியிடம் வெளிப்படும் வாடையினை ஒத்த மணத்தினை கொண்ட திரவத்தை செயற்கையாக உற்பத்தி செய்து தன் மேனியெங்கும் பூசிக்கொண்டார். வெளியே வந்து ஒரு சில மணி நேரம் காத்து நின்றார் அவ்வளவுதான்.

எங்கிருந்து பறந்து வந்தனவோ தெரியாது. இலட்சம் வரையான தேனீக்கள் பேராசிரியா மேனிமை மொய்த்துக் கொண்டன.

மனிதர் அசரவில்லை. வெகு சுவாரசியமாக ‘கிளார்னட்’ வாத்தியத்தை ஊதி மகிழ்ந்து கொண்டிருக்கிறார்.

தகவல் பெட்டி

திசைமாறும் கால்கள்! முயன்று பார்க்கலாம் நீங்களும்!!



இவரது பெயர் வெலஸ் காம்போஸ். போர்ட்டோரிக்கோ நாட்டில் பிறந்தவர். சாகசம் செய்யும் ஆசை நிறைய உண்டு. முழங்காலால் நடந்து சாதனை படைக்க வேண்டும்.

அதுவும் எப்படி என்கிறீர்கள்? ஒரு கால் கிழக்கே பார்த்தால் இன்னொரு கால் மேற்கே பார்க்கும். இப்படியே நடந்து சாதனை படைத்து விட்டார்.

படத்தில் பார்க்க சுலபமாக தெரிகிறதா? எங்கே செய்து பாருங்கள் பார்க்கலாம். ஹி....ஹி......முடியவே முடியாது. அதற்கெல்லாம் நிறைய பயிற்சி தேவை. முக்கியமாக சளைக்காத முயற்சி தேவை. முடியுமானால் செய்து பார்த்து படம் எடுத்து அனுப்பி வையுங்கள். அட்டகாசப்படுத்தி விடலாம்.

எண்பதிலும் காதல் வரும்!

மிஸ்ஸிசிப்பி மாநிலத்தைச் சேர்ந்தவர் றாச்செல் ஸ்ராம் என்னும் பெண்மணியார்.

‘வருவாயா என் மனம் என்னும் மாளிகையில் குடியேறும் தகுதி உள்ள மன்னவனே?’ என்று அவர் காத்திருந்தார்.

வழிமேல் விழிவைத்து காத்திருக்க வயது தரித்திருக்குமோ? ஏறிக்கொண்டே இருந்தது.

ஆகிவிட்டது 83 வயது! அவர் வேலை பார்த்தது ஒரு துணிக்கடையில்.

நல்ல துணி தெரிவதற்கே நாற்பது துணி பார்க்கும் போது நல்ல துணைவன் தேட பொறுமையாக தெரிவு நடத்தவேண்டாமோ? நடத்தினார்.

பொறுமைக்கு வெற்றி. சமீபத்தில் அருமையான மணவாளனை ஆச்சி கண்டு விட்டார். விழிகள் வண்ணத்துப் பூச்சியாகப் படபடக்க ஒரே மகிழ்ச்சி.

81 வயதான ஆப்ரே என்பவர்தான் இந்த இராஜகுமாரன்.

திருமணத்திற்கு முன் மனம்விட்டுப் பேசினார்கள். கடதாசி (சீட்டுக்கட்டு) விளையாடினார்கள். காதல் மொழி பேசினார்கள்.

திருமணம் நடந்துவிட்டது. திருமண விருந்தின்போது இருவரும் ராஜா- ராணிபோல் உடையணிந்து விருந்தினர்களோடு நடனமாடினார்கள்.

திருமண விழாவில் ஆச்சி சொன்னது இது:

“என் கனவில் கண்ட இளைஞர் (?) ஆப்ரேதான். என்னால் சமைக்கவோ, வீட்டைச் சுத்தமாக வைத்திருக்கவோ முடியாது. அதையெல்லாம் இனி ஆப்ரே கவனித்துக்கொள்வார்.”

வாழ்க தம்பதிகள்!

சி னி வி சி ட்

ஐஸ்வர்யாவின் மனதில் இருப்பது என்ன?

கம்ப்யூட்டர் படித்துக் கொண்டிருந்த ஐஸ்வர்யாவை கமராவுக்கு முன் கொண்டுபோய் நிறுத்தி நடிக்க வைத்தவர் அவரது அம்மா நடிகை லட்சுமி.

அப்படி ஐஸ்வர்யா முதலில் நடித்த படம் 'ஓசகாலியா' (கன்னடம்).

பின்னர் அம்மாவோடு தகராறு. பாட்டியோடு இருந்தார். இப்போது திருமணமாகிவிட்ட பின் நடிப்பதா முழுக்குப் போடுவதா என்று இரட்டை மனதில் இருக்கிறார்.

சமீபத்தில் ஒரு பேட்டியில் ஐஸ்வர்யா, தன்னால் இந்திப் படவுலகில் பிரகாசித்திருக்க முடியும் என்றும், ஆனால் திருமணம் அந்த வாய்ப்பை இழக்கவைத்துவிட்டது என்றும் கூறியிருக்கிறார்.

ஐஸ்வர்யாவின் பேட்டியில் தெரிவது வருத்தமா? அல்லது பொருமையடிக்கும் நோக்கமா என்பதுதான் புதிர்.

ரஜனியின் புதிய முடிவு!

ரஜனிகாந்த் இதுவரை தனது ஊதியத்திற்குப் பதிலாகத் தான் நடிக்கும் படங்களின் விநியோக உரிமையை வாங்கி வந்தார். தற்போது அப்படி வாங்குவதை நிறுத்திவிட்டு நேரடியாக தனது ஊதியத்தைப் பெற முடிவு செய்திருக்கிறார்.

★★★

பட்டதாரி தேடும் ராஜகுமாரி

பாக்யராஜ் தன் படங்களுக்கு படப்பிடிப்பு நடத்த நிசப்தமான மலைப் பகுதிகளைத் தேடிச் செல்வது வழக்கம்.

இந்த முறை தனது புதிய படமான 'ஒரு ஊரில ஒரு ராஜகுமாரி' படப்பிடிப்பை மைசூர் அரண்மனையில் நடத்தியிருக்கிறார்.

நாயகியாக மீனா நடிக்கிறார். கதைப்படி நாயகி ராஜகுமாரி. அவருடைய தந்தை மகாராஜா (விஜயகுமார்) ஒரே ஒரு தவறான தொலைபேசி செய்தி காரணமாக இறந்து போகிறார். ராஜகுமாரியின் திருமணம் நின்றுவிடுகிறது. ஹீரோ (பாக்யராஜ்) வேலை இல்லாத பட்டதாரி. ராஜகுமாரியை சந்திக்கிறான். அவளோ தன்னை ராஜகுமாரி என்று காட்டிக் கொள்ளாமல் அவனை காதலிக்கிறாள். ஆனால் பட்டதாரியோ ராஜகுமாரி ஒருத்தியைத் தேடி அலைகிறான். பாக்யராஜ் பாணியில் கதை போகிறது. வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது.

புத்தாண்டு ரேசில் நாசர் வெற்றி-போட்டியில் இல்லை பிரபு!

சித்திரைப் புத்தாண்டுக்கு வந்த படங்களில் 'வரவு எட்டணா செலவு பத்தணா' முன் வரிசையில் நிற்கிறது.

ரஜனியின் 'வீரா' இரசிகர் பலத்தால் ஆரம்பத்தில் முன்வரிசையில் நின்றது.

'வண்டிச்சோலை சின்ராசு', 'ஆனஸ்ட்ராஜ்' போன்ற படங்களும் சத்யராஜ், விஜயகாந்த் இரசிகர்களால் ஓடிக்கொண்டிருக்கின்றன. 'ஆனஸ்ட்ராஜ்' ஓரளவு வசூலுக்கு பாதகம் செய்யாமல் ஓடுகிறது. என்றாலும் இந்தப் படங்களில் தயாரிப்புச்செலவுகளோடு ஒப்பிடும்போது நாசர்-ராதிகா ஜோடி நடித்த 'வரவு எட்டணா செலவு பத்தணா' படத்தின் வசூல் தயாரிப்பாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்களுக்கு கையையும், மனதையும் நிறைத்து விட்டது.

பிரபு நடித்த 'டூயட்' புத்தாண்டுக்கு வருவதாக இருந்தது.

பிரசாந்த் நடித்த 'கண்மணி', பிரபு கௌரவ வேடத்தில் நடித்த 'பிரியங்கா' போன்ற படங்களும் புத்தாண்டுக்கு வரப்போவதாக முதலில் அறிவிக்கப்பட்டது.

போட்டி பலமாக இருந்ததும், தகுந்த திரையரங்குகள் கிடைக்காமல் போனதும் புத்தாண்டு ரேசில் வந்து அவையும் சிக்காமல் காக்க உதவிவிட்டன.

"பட்டுப் புடவையில் ஜரிகை போல படத்திற்கு இசை"—மனோ! பாடியிருப்பது 12 ஆயிரம்

பின்னணிப் பாடகர் மனோவின் சொந்தப் பெயர் நாகூர் பாபு. மனைவி பெயர் ஜமீலா.

மூன்று குழந்தைகள். ஒரு மாதம் பொறுத்தால் இன்னொரு குழந்தை ரெடி. தமிழ் தெரியாது. தெலுங்கில் எழுதி வைத்து பாடுகிறார். மனோ என்று பெயர் வைத்தது இசைஞானி இளையராஜா. அவரது இசையில் இதுவரை மனோ பாடிய பாடல்கள் 2 ஆயிரம். ஆனால் பல மொழிகளிலும் மொத்தமாகப் பாடியுள்ள பாடல்கள் 12 ஆயிரம்.

இந்த பாடகருக்கு பிடித்த பாடகர்கள் கே.ஜே.ஜேசுதாஸ், எஸ்.பி.பாலசுப்பிரமணியம்.

ஒரு படத்தின் வெற்றியில் பாடல்களின் பங்கு என்ன?

அதற்கு மனோ சொல்லும் பதில்,

"ஒரு பட்டுப் புடவையில் ஜரிகை மாதிரி இசை; எனவே ஒரு படத்தின் வெற்றிக்கு முன்பாகவே இரசிகர்களின் மனதைக் கவருவது பாடல்கள்; பிறகுதான் கமரா, கதை-திரைக்கதை, நடிப்பு எல்லாமே." ஏ.ஆர்.ரகுமான் பற்றிக் கேட்டால், "எல்லா இசையமைப்பாளர்களும் எனக்கு வானம் மாதிரி. அதில் நான் ஒரு சின்ன பாடும் நட்சத்திரம்." என்கிறார் எதிலும் பட்டுக்கொள்ளாமல்!

இரண்டு பாடல்கள் செலவு இருபது இலட்சம்!

சமீபத்தில் 'கல்நாயக்' படம் நம் நாட்டு தொலைக் காட்சியிலும் ஒளிபரப்பானது. அதன் பிரமாண்டம் சின்னத்திரையில் கூட விழிகளைப் பறித்தது.

தற்போது தமிழில் தயாராகிவரும் 'கல்நாயக்' படத்தில் ரகுமான், சுகன்யா ஜோடி. 'கல்நாயக்' இந்தி படத்தில் 'மாதுரி திட்சித்' அணிந்து நடித்த கவர்ச்சி உடைகள் போன்று ஆறு விதமான உடைகள் சுகன்யாவுக்கு தேவை. உடனடியாக 'டிசைன்' செய்து சிங்கப்பூரில் இருந்து தருவிக்கப் போகிறார்கள்.

இரண்டு பாடல் காட்சிகள் மட்டும் 20 இலட்ச ரூபாவில் படமாக்கப்படவுள்ளன.

இசை-மரகதமணி. பாடல்கள்-வைரமுத்து. இயக்கம்-எ. ஜெகந்நாதன்.

இல்லை-
என்ற சொல்லுக்கே
அர்த்தம் கிடையாது
இந்த
அழகு அகராதியில்!

மீண்டும் சிவாஜி

உங்கள் அப்பா மீண்டும் நடிப்பாரா? என்று பிரபுவிடம் கேட்டார்கள். நல்ல கதாபாத்திரம் அமைந்தால் நடிப்பார் என்று சொல்லியிருக்கிறார் பிரபு. சிவாஜிக்கு ஏற்ற பாத்திரங்களைக் கொடுப்பதற்கு அவர் நடித்துக் கொண்டிருந்தபோதே கதாசிரியர்கள் தடுமாறினார்கள். அந்த பிறவி மேதைக்கு பொருத்தமான பாத்திரம் கொடுக்க இப்போது யார் இருக்கிறார்கள்?

மணிரத்னம் இயக்கத்தில் கமல்?

...ஒற்றுமையை வலியுறுத்தும் 'பம்பாய்' படத்தின் வேலைகள் ...ந்ததும் கமலை வைத்து புதிய படம் செய்ய மணிரத்னம் ...விட்டிருக்கிறார். ஆனால் நடிக்க கமல் ஒத்துக்கொள்வாரா ...ம் தெரியவில்லை. கமல் இயக்கத்தில் வளரும் 'மகாநதி' ...ப்படம் வெற்றிகரமாக ஓடினால், வெளியார் படங்களில் ...பதை கமல் நிறுத்தி விடுவார் என்று கூறப்படுகிறது.

அம்மாவே துணை

...னா தமிழ், தெலுங்கு என்று இரு மொழிகளிலும் நடித்து ...றார். தெலுங்கில் விஜயசாந்திக்கு அடுத்த இடத்தில் இருக்கிறார். ...டு பிஸியாக இருந்தாலும் ஒப்பந்தமான படங்களில் உரிய ...ஆஜராகி வந்து நடித்து விடுகிறார். அதற்கு காரணம் மீனாவின் ...தானாம்.

...தேவிக்கு அவரது அம்மா ராஜேஸ்வரி போல, மீனாவுக்கு ...து அம்மா லலிதா. மகளின் முன்னேற்றமே குறி!

ராதிகா வாங்குவது ஆறு இலட்சம்

திருமணத்திற்குப் பின் இறங்கியிருந்த ராதிகாவின் மார்க்கெட்டை 'கிழக்கு சீமையிலே' படம் தூக்கி நிறுத்தியது தெரிந்த சங்கதி.

இப்போது பட வாய்ப்புக்கள் குவியத் தொடங்க, ஓசையில்லாமல் தன் ஊதியத்தை உயர்த்திவிட்டார். இப்போது வாங்குவது ஆறு இலட்சம். தற்போது தமிழில் நம்பர் ஒன் நடிகையாக உள்ள சுகன்யா பெறுவதைவிட இது அதிகம்.

...ந்த்-வினிதா
...ன்பிரமாணம்

காதோடு சொல்லுகிறோம்

★ அனக நடிகைக்கு வாய்ப்புக்கள் குறைவாக இருந்தாலும் பந்தாவுக்கு குறைச்சல் இல்லை. பாதி படத்தில் வந்து ஒப்புக்கொண்ட தொகையை விட அதிகமாகக் கேட்கிறாராம்.

★ பதினாறு வயது புகழ் தேவி பம்பாயில் ஒன்றரைக்கோடிக்கு வீடு வாங்கிவிட்டாராம். நட்சத்திர விடுதியில் பாதுகாப்பு போதாது. சிலர் வந்து தொந்தரவு செய்கிறார்கள். அதனால்தான் குடியிருப்புக்கள் மத்தியில் வீடு வாங்கினேன் என்கிறாராம்.

★ 'சரண' நடிகை மீண்டும் ஒரு வலைவிரிப்பு. இயக்குநர்கள் சிலரை அழைத்து கைக்குள் போடும் முயற்சியில் இறங்கியிருக்கிறாராம். மீண்டும் மணம் செய்யும் யோசனையை ஒத்திப்போட்டுவிட்டு காரியத்தில் கண்ணாகியிருக்கிறார்.

★ பூ நடிகையோடு போட்டிபோட்ட நீலக்கண் நடிகை நொந்து போய் இருக்கிறார். ஒரு ஹீரோ தன்னை ஏமாற்றிவிட்டதாகச் சொல்லி வெறுப்படிக்கிறார். அந்த 'கா' நடிகரோ இப்போது 'சுகன்ய' நடிகையோடு சேர்த்து பேசப்படுகிறார்.

★ சமூக சேவை செய்யும் பெண்... என்றாலே துணிப்போர் ... நடிகைக்கு ஆத்திரம் வருகிறது ... அவரது நடனத்தை ... வில் தடுத்த ... காரணமாம்.

★ ரோகிணி நட்சத்திர நடிகை ... இப்போதும் சின்ன ... தான் என்று பேட்டி ... திருக்கிறார். அந்த ... ... ஆட்டம்தான் ... முடியவில்லை ... கிறார் ... இருக்கும் ...

★ ஒருமுறை ... போட்டியில் ... பெற்ற ... சொல்லி ... 'சுகன்ய' ... நடிகை ... முறை ... போட்டியில் ... ஆனதால் ... புகார் புலம்பு...

★ ... நடிகை வீட்டில் ... பண்ணையே இருக்கிறது. உலகில் ... அத்தனை ... களையும் வாங்கி ... 'லைன்' புத்தகத்தில் ... சிடம் என்கிறார்.

சொர்ணா
படம்-சிந்துநதி



பிரசாந்த்-கஸ்தூரி
படம்-திருமூர்த்தி

மறுபடி ஒரு நடனம் குஷ்புவுக்கு!

சிறைக்கு வந்துள்ள இந்துவில் குஷ்புவின் அதிரடி ஆட்டம் பார்த்தவர்களுக்கு இன்னொரு செய்தி.

விஜயகாந்த் நடித்துவரும் 'கன்னிப்பிரமாணம்' படத்திலும் குஷ்பு ஒரு நடனக்காட்சியில் தன் அழகைக் காட்டப்போகிறார்.

கேட்டால் தயாரிப்பாளர் மிகவும் வேண்டப்பட்டவர், விஜயகாந்த் நண்பர் என்றெல்லாம் அளந்து விடுவார். கேட்கக்கூடாது.

தூக்கிவிட்டார்கள் சுகன்யாவை!

... வைத்துவிட்டு மாற்றிக்கொள்வது தமிழ் ... வழக்கமாகிவிட்டது.

... நடிக்க 'சின்னராசு' ... பெயரில் ... அதுதான் சதி.

இப்போது 'ஜல்லிக்கட்டு காளை' என்று பெயர் ... வைத்துள்ளார்கள்.

... கதாநாயகியாக ... ஒப்பந்தம் செய்யப்பட்டவர் சுகன்யா. இப்போது அவரை தூக்கிவிட்டு ... ...ள்ளார்கள்.

... படப்பிடிப்பு ஆரம்பம். ... கவுண்டமணி, செந்தில் ... சித்ரா ஆகியோரும் இருக்கிறார்கள்.

மினி சினி

★ வில்லனாக நடித்து, கதாநாயகனாக ... ஆனந்தராஜ், ரகுவரனின் ... நடிக்க ...

★ மலையாளத்தில் பெருவெற்றி ... தமிழில் ... 'கிலுக்கம்' ... இரண்டாம் வரவு' என்ற ... மாற்றப்படுகிறது.

★ 'இதயம்' படத்தில் அறிமுகமாகியிருந்து தமிழில் இதுவரை ... ஹீரா. இப்போது நடித்து வரும் ... படத்தில் ...

★ 'முக்கிய பிரமுகர்' என்ற ... பாதியில் ... மாறுபட்ட மூன்று வேடங்களில் நடித்து வருகிறார் ...

★ மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் ... விஜயகாந்த், பிரபு ... நடிகர்களை ... கே.சங்கர் இவர் ... படம் ... இயக்கி வருகிறார்.

★ 'எங்க ஊரு ... சிவகாமி ... கள்' ... படங்களில் நடித்தவர் ஸ்ரீபானு. தமிழில் ... வாய்ப்புக்களில்லை ... என்ற பெயரில் கன்னடத்தில் பல படங்களில் நடித்து வருகிறார்.

★ 'பாஞ்சாலங்குறிச்சி' ... 'தாய்மாமன்' படத்திற்காக ஒரு பாடல் ... அடுத்து இவர் ... படமொன்றில் ... நடிக்கவுள்ளார்.

★ இதுவரை இருநூறுக்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ள சின்னி ஜெயந்த் 'சின்ன புள்ளே' என்ற படத்தில் ... நடிக்கிறார். 'பதினாறு வயதினிலே' படத்தில் ... வேடம் போன்றதொரு பாத்திரத்தில் சின்னி ...

★ பல படங்களில் ... பெயர் பெற்று வரும் கஸ்தூரி ... 'இந்திரா'... கூட்டுத்தயாரிப்பாக ... கஸ்தூரிக்குப் பதிலாக சொர்ணா ...

★ ... 'பசும்பொன் ... அரசாங்கம்' மூலம் தமிழ்ப்பட உலகிற்கு அறிமுகமான ... இப்போது, ... இயக்கத்தில் ... 'தெய்வம்' என்ற பாத்திரத்தில் நடித்து வருகிறார். ... இரட்டை வேடம்.

★ ... படத்தில் முதலில் கதாநாயகனாக ... அந்தப் படத்தில் நடிக்க மறுத்துவிட்டார்.

சரத்குமார்
படம்-மகாபிரபு

அழகான கனவு!

'மகாபிரபு' படத்தில் 12 வில்லன்களோடு கதாநாயகனாக நடிக்கிறார் சரத்குமார். தனது ஏரியாவில் என்ன பிரச்சனை வந்தாலும் அதனைத் தீர்த்து வைக்கும் 'பிரபல ரவுடியாக' சரத் நடிக்கிறார்.

... ஒரு காட்சி. அவர் திமிரென்று ... சுற்றுப் பூனைகள் பாதுகாப்போடு ... அழகு மங்கையர் ... ஆடுகிறார்கள்.

... வேஷத்திலும் ... இருக்கிறார் சரத்.

...போரில் ...டு ரோஜா ...படத்தின் ...ப்பன்று ...ர பதிவு ...சய்த ...சி.



உணவில் கவனம் வை!

உடம்பை நன்றாய் பார்த்துக் கொள்
உணவில் கவனம் சேர்த்துக் கொள்
இடும்பு எதுவும் செய்யாமல்
அன்னை தருவதை ஏற்றுக்கொள்.
கொழுந்தே, தளிரே, இளங்குருத்தே
ஒழுங்காய் இதை நீ அமைத்துக் கொள்.
சுவர் இருந்தால் தான் சித்திரமாம்
முன்னோர் சொன்னதை நினைத்துக் கொள்.

என். மாறன்

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்;
பாமரராய், விலங்குகளாய் உலகனைத்தும்
இகழ்ச்சி சொல்ல பான்மை கெட்டு,
நாமமது தமிழரெனக் கொண்டு இங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்வீர்!
தே மதுரத் தமிழோசை உலகமெல்லாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்.

-சுப்பிரமணிய பாரதியார்-

பாப்பா முரசு சிறுகதை

இலட்சியப் பாதை

குழந்தைகளுக்காக அன்னை வழங்கிய 'இலட்சியக் குழந்தை' என்ற நூலைத் தன் உயிராக நினைத்தாள் கமலா. அதில் அன்னை சொல்லியிருக்கும் ஒவ்வொரு கருத்தையும், வேதமாகவும், பாடமாகவும் ஏற்று அதன்படி நடந்து வீட்டில் நல்ல பெண் என்றும், பள்ளியில் சிறந்த மாணவி என்றும் பெயரெடுத்தாள் கமலா.

ஒருநாள் அவளுக்கு, அந்தப் புத்தகத்தில் ஒரு பகுதியில் சந்தேகம் ஏற்பட்டது. அதைப் போக்கிக்கொள்வதற்காகத் தன் அம்மா ஜானகியிடம் சென்றாள்.

அவள்தான் அந்த 'இலட்சியக் குழந்தை' நூலை வாங்கி தன் மகள் கமலாவிற்குக் கொடுத்து, "குழந்தையாக மட்டும் இருந்தால் போதாது. இந்நூலில் அன்னை கூறியிருப்பது போல், இலட்சியக் குழந்தையாக இருக்க வேண்டும். இதை முழுக்கப் படி. பிறகு நீ எல்லாம் தெரிந்து கொள்வாய்" என்று சொல்லியிருந்தாள்.

"அம்மா எனக்கு ஒரு சந்தேகம்." என்றாள் கமலா.

"என்ன சந்தேகம்?" என்று கேட்டாள் ஜானகி.

"இந்தப் புத்தகத்தில் அன்னை கூறியிருப்பது போல், பெரிய இடர்களையும், துயர்களையும் மனிதனால் எதிர்கொண்டு வெற்றிகாண முடியுமா?" என்று கேட்டாள் கமலா.

"முடியும் கமலா! ஒரு கதை சொல்லுகிறேன் கேள்."

ஒரு ஊரில் சிறந்த ஞானமும், ஆற்றலும் கொண்ட சதானந்த முனிவர் என்பவர் இருந்தார். ஒரு நாள் அவர் தன் சீடர்களை அழைத்து, "சீடர்களே நான் காசிக்குச் செல்ல இருக்கிறேன். அங்கு இருபத்தொரு வருடங்கள் நான் தொழுநோயை அனுபவிக்கப்போகிறேன். உங்களில் யார் எனக்குச் சேவை செய்ய வரப்போகிறீர்கள்?" என்று கேட்டார்.

வசந்தன் என்ற சீடன் அவர் முன் வந்து நின்று வணங்கினான்.

"குருவே, தங்களோடு நான் காசிக்குப் புறப்பட்டு வருகிறேன். தங்களுக்குச் சேவை செய்யும் பாக்கியத்தை விடச் சிறந்தது எனக்கு இந்த உலகத்தில் வேறொன்றும் இல்லை," என்று பயபக்தியுடன் கூறினான் வசந்தன்.

சதானந்த முனிவர் மிகவும் அக மகிழ்ந்து வசந்தனைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு, தனது ஆசிரமத்தை விட்டுக் காசிக்குப் புறப்பட்டுச் சென்றார்.

காசியை அடைந்த மறுநாளே, சதானந்த முனிவரைத் தொழுநோய் தொற்றிக்கொண்டது. நாட்கள் செல்லச் செல்ல நோயின் வீரியம் அதிகமாகி முனிவரின் கைகளும், கால்களும் அழுகி நாற்றமெடுக்கத் தொடங்கின.

வசந்தன் பல வீடுகளுக்குச் சென்று உணவைப் பிச்சையாகப் பெற்று வந்து தனது குருவிற்கு வாயில் ஊட்டி விடுவான்.

ஒருநாள் பிச்சையெடுத்த உணவை எடுத்துக்கொண்டு, தனது குருவின் பசி தீர்க்கச் சென்று கொண்டிருந்தான் வசந்தன். அப்பொழுது, அவன் முன்பு சிவபெருமான் தோன்றி, "வசந்தா! உன் குருபக்தியைக் கண்டு மெச்சினேன். உனக்கு என்ன வரம் வேண்டுமோ கேள்," என்றார்.

உடனே வசந்தன், "இறைவா என்னுடைய குருவின் அனுமதி இல்லாமல் நான் தங்களிடம் வரம் பெறத் தயாராக இல்லை." என்று கூறிவிட்டுத் தன் குருவிடம் வந்து சேர்ந்தான்.

அவருக்கு வாயில் உணவு ஊட்டிக் கொண்டே, சிவபெருமான் தன்னைச் சந்தித்த விசயத்தைச் சொன்னான்.

"தாங்கள் அனுமதி கொடுத்தால் தங்கள் நோய்தீர, சிவபெருமானிடம் சென்று வரம் வாங்கி வருகிறேன்!" என்றான் வசந்தன்.

உடனே சதானந்த முனிவர் குறுக்கிட்டார்.

"வசந்தா! நான் என் கர்ம பலனை முழுதும் அனுபவிக்க வேண்டும். இல்லா விட்டால் அதை அனுபவிக்க, நான் இன்னொரு முறை பிறவி எடுக்க வேண்டும். ஆகவே எனக்கு நீ சேவகம் செய்யும் வேலையை

மட்டும் கவனி," என்று சொன்னார் சதானந்த முனிவர்.

எனவே வசந்தன் சிவபெருமானிடம் செல்லவில்லை. இவை எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டிருந்த சிவபெருமான், எல்லா தேவர்களையும் அழைத்து வசந்தனின் குரு பக்தியை பற்றிச் சொல்லிச் சொல்லி வியந்தார்.

சில நாட்கள் சென்றன.

வசந்தன் வழக்கம்போல் பிச்சையாகப் பெற்ற உணவை எடுத்துக்கொண்டு, தனது குருவின் இருப்பிடம் நோக்கிச் சென்று கொண்டிருக்கையில், மகாவிஷ்ணு அவன் முன் தோன்றினார்.

"வசந்தா உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்," என்று கேட்டார்.

"எனக்கு உங்கள் வரம் எதுவும் வேண்டாம். எனக்கு என் குருதான் வேண்டும்," என்று சொல்லிவிட்டு மண்டபம் நோக்கி நடந்தான் வசந்தன்.

மண்டபத்திற்கு வந்து பார்த்தபொழுது, தனது குருவான சதானந்த முனிவர் முற்றிலும் தனது தொழுநோய் நீங்கிய நிலையில், மிகவும் ஆரோக்கியமான நிலையில் காணப்பட்டார்.

வசந்தன் திகைத்தான்.

"வா வசந்தா! உன் குருபக்தியைச் சோதிக்கவே நான் இவ்வளவு காலம் என் உடலில் தொழுநோயை ஏவிக்கொண்டேன். வரத்தை விடவும் குருபக்தியே மேலானது என்பதை, உணர்த்திய உனது குருபக்தியைக் கண்டு மெய்சிலிர்த்துப் போகிறேன்," என்று அன்பொழுக வசந்தனைக் கட்டிக்கொண்டார் சதானந்த முனிவர்.

"இதுதான் கதை," என்று கூறிமுடித்தாள் ஜானகி.

"தனது குருபக்தி என்ற இலட்சியப் பாதையில் சென்று கொண்டிருந்த வசந்தனுக்கு எத்தனை சோதனைகளும், இடர்களும் வந்தன. தனது திடமான இலட்சியத்தால் அவற்றை எல்லாம் வென்று, இறுதியில் எத்தனை நன்மை பயக்கும் செயலைப் பெற்றான் அந்த வசந்தன். அதுபோல்தான் நீயும், உன் வயதுக் குழந்தைகளாய் இருக்கின்ற அனைவரும் திகழ வேண்டும்" என்று சொல்லி முடித்தாள் ஜானகி.

"அப்படியே இருப்பேன் அம்மா," என்று கூறிய கமலா, ஜானகியைக் கட்டிக்கொண்டாள்.

சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 21.05.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 40
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்
கிருலப்பனை,
கொழும்பு-05.

வர்ணம் தீட்டும் போட்டி இல. 37

பரிசுக்குரியவர்
வி.கௌரிதாசன்
புனித சூசையப்பர் கல்லூரி
திருகோணமலை.

பாராட்டுக்குரியவர்கள்

நா.டிலீபன்
இந்து தமிழ் மகாவித்தியாலயம்-புத்தளம்.

எம்.எம்.ஸன்பர்
கிண்ணியா மத்திய மகாவித்தியாலயம்
கிண்ணியா-06.

எஸ்.ஜெனீஸா ஷர்மலி
விவேகானந்தா கல்லூரி
கொழும்பு-13.

சி.அசோக் ரஜீவ்குமார்
ஸ்ரீமுத்துமாரியம்மன் தமிழ் மகா வித்தியாலயம்-கம்பொல.

எம்.ஜே.எம்.றொஷான்
ஹெட்டிபொல.

சினாஸ் உவைஸ்-வறகாபொலை.

எஸ்.இஸ்திஹார்-ஏறாவூர்-02.

அ.முஹம்மத் அஸாம்
அஹதியா சன்மார்க்க போதனா பீடம்-புத்தளம்.

என்டனி டெக்ஸ்டர் பர்னாந்து
கொழும்பு-15.

ஐ.ஜேபர்-அனுராதபுரம்.

சீனாவின் துயரம்

1. சீனாவின் துயரம் என அழைக்கப்படுவது எது?
- சீனாவில் பாயும் 'ஹுவாங்-ஹி' அல்லது 'ஹுவாங்-ஹோ' எனப்படும் மஞ்சள் ஆறு.
2. அது ஏன் மஞ்சள் ஆறு எனப்படுகிறது?
- மலைகளிலிருந்து மென்மையான மஞ்சள் மணலை நிறைய அள்ளி வருவதால் மஞ்சள் ஆறு எனப்படுகிறது.
3. இது ஏன் சீனாவின் துயரம் என அழைக்கப்படுகிறது?
- இந்த ஆறு, நிறைய மண்ணை அடித்து வருவதால் ஆற்றின் முகத்துவாரத்தில் நிறைய மணல் சேர்ந்து ஆற்றின் ஆழம் குறைகிறது. அதனால் ஆறு வழிந்து வெள்ளம் கரையோர கிராமங்களுக்குள் புகுந்து விடும். இப்படி அடிக்கடி உயிர்ச்சேதம், பொருட்சேதம் உண்டாக்குவதால் இப்பெயர் ஏற்பட்டது.
4. இந்த வெள்ளம் எத்தனை முறை ஏற்படும்?
- கடந்த மூன்றாயிரம் ஆண்டுகளில் 1500 முறை இந்த

வெள்ளம் ஏற்பட்டுள்ளதாக சீன புவியியல் நிபுணர்கள் கணக்கிட்டுள்ளனர்.

5. இந்த ஆற்றின் நீளம் எவ்வளவு?
- நான்காயிரத்து அறுநூற்று எழுபத்திரண்டு கிலோ மீற்றர். வடக்கு சீனா முழுவதும் பாய்கிறது.

விடுகதைகளும் விடைகளும்

1. அண்ணன் தம்பி இரண்டு பேராம். அவர்களைச் சுற்றி பன்னிரெண்டு பேராம். அவர்கள் யார்?
2. ஆறுகால் நாலு இறக்கை, அடிக்கடி மேலே பாயும். ஈ என்று இளிச்சவனே இக்கதையை விளம்புவாயே.
3. இத்தினியோண்டு பையனுக்கு இத்தினியோண்டு முண்டாசு. அது என்ன?
4. அடித்தால் அழுவான், பிரித்தால் சிரிப்பான் யாரவன்?

விடைகள்

1. கடிகாரம் 2. ஈ
3. தீக்குச்சி 4. தேங்காய்

1. தன்னைக் கொன்றவனை புகை மூலம் கொல்லுவான். அவன் யார்?
2. கோலம் போட புள்ளி வைத்து கோடிழுக்க மறந்து விட்டாள். அவள் யார்?
3. வட்டத்தலை கொண்டிருக்கும். விட்டு விட்டு சுற்றி வரும். அது என்ன?
4. உயிரை காக்கும் தன்மை மறந்தவன். ஊரையெல்லாம் கொள்ளை அடித்து விட்டான்.அவன் யார்?
5. நிலத்தின்மீது பிறந்தவன், நீரைக் கிழித்துச் சென்று நிறைவுடன் திரும்புவான். அவன் யார்?

விடைகள்

1. சிகரெட் 2. வெண்ணிலா
3. பம்பரம் 4. புயல் 5. கப்பல்

அபூஹனீபா பாத்திமா நுஸ்ரத்
கல்/திகழி அரசினர் முஸ்லிம் வித்தியாலயம்-ஏத்தாலை.

அறிந்து கொள்ள ஐந்து

1. மிகவேகமாக வளரும் மரம் எது? **மூங்கில்.**
2. முதன் முதலில் நோபல் பரிசு பெற்ற நாடு எது? **சுவீடன்**
3. கோப்பியில் உள்ள நச்சுப் பதார்த்தம் எது? **கபீன்**
4. சுவாசப்பை இல்லாத பூச்சி இனம் எது? **தேனீ**
5. தாமரைப்பூ எந்த நாட்டுச சின்னம்? **எகிப்து**

நியாஸத் பறக்கத்துல்லா
மத்திய மகா வித்தியாலயம்-எருக்கலம்பிட்டி.

மூன்று வகை நண்பர்கள்

- தானாக முளைத்துத், தானாக தண்ணீர் குடித்து, தானாக வளரும் பனை மரத்தைப் போல நமக்கு வலிய வந்து உதவி செய்யும் நண்பர்கள்.
- எப்போதாவது தண்ணீர் விட்டால் போதும். வளர்ந்துவிடும் தென்னை மரத்தைப் போல் எப்போதாவது உதவி செய்தால் அதை நினைவில் வைத்துக் கொண்டு நமக்கு அடிக்கடி உதவும் நண்பர்கள்.
- தினமும் தண்ணீர் விட்டால் வளரும் வாழை மரம்போல், தினமும் உதவி செய்தால் மட்டும் நம்மைக் கவனிக்கும் நண்பர்கள்.

எச்.சர்மிலா ஹலீல்தீன்
ரிதீகம-குருநாகல.

புதைந்துள்ள புதிர்?

மார்ச்: 28
ஏப்ரல்: 21
ஜுன்: 14
ஜுலை: 12
டிசம்பர்: 7

இந் நாட்களுக்குள் பொதிந்து கிடக்கும் கணித புதிர் யாது?

$28 \times 3 = 84$
$21 \times 4 = 84$
$14 \times 6 = 84$
$12 \times 7 = 84$
$7 \times 12 = 84$

தொகுப்பு:
பௌசுல் ஹசன்-அக்குறணை.

அறிவோம்-மனதில் பதிவோம்



ரஷ்யாவில் 1762ல் மன்னர் ஆவதற்கு முன்பே ஜார் மூன்றாம் பீற்றர் கொலை செய்யப்பட்டார். 35 ஆண்டுகளுக்குப் பின் அவரது எலும்புக்கூடு தோண்டி எடுக்கப்பட்டு சிம்மாசனத்தில் வைக்கப்பட்டு முடிசூட்டப்பட்டது.

லிபியாவில் 1974ம் ஆண்டு ஒரு மனிதரைக் கடித்த நாய்க்கு ஒரு மாதம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அதற்கு அப்போது பாணும், நீரும் மட்டுமே உணவாகக் கொடுக்கப்பட்டது.



மொனேகா நாட்டில் ஆயிரம் பேருக்கு 825 தொலைபேசிகள் உள்ளன. பூடானில் 2 ஆயிரம் பேருக்கு ஒரு தொலைபேசிதான உண்டு. தொலைபேசி வசதி குறைவாக உள்ள நாடு பூடான்.

தேன் கிண்ணம்

முரசின்மீது பிரியம் கொண்டவர் கவியரசு வைரமுத்து. 50வது முரசுக்காக அவர் தந்த புதிய கவிதை இது. புத்துணர்ச்சியும் தருகிறது. கவியரசு வைரமுத்துவுக்கு முரசின் வாசகர்கள் சார்பில் இதய நன்றி!



கவியரசு வைரமுத்து

கிளிக்கு றெக்கை இருக்கும் வரைக்கும்
கிழக்கு வானம் தூரமில்லை
முளைக்கும் விதைகள் முளைக்கத் துடித்தால்
பூமி ஒன்றும் பாரமில்லை

பாய்ந்து பரவும் இளைய நதிகளே
பள்ளம் நிரப்ப வாருங்கள்
காய்ந்து கிடக்கும் கழனிகள் எங்கும்
கதிர்கள் சுமந்து தாருங்கள்

முன்னோர் சொன்ன முதுமொழி எல்லாம்
முதுகில் சுமந்தால் போதாது
சொன்னோர் கருத்தை வாழ்க்கைப் படுத்தத்
துணிந்தால் துன்பம் வாராது

காட்டும் பொறுமை அடக்கம் என்னும்
கட்டுப்பாட்டைக் கடவாதீர்
கூட்டுப் புழுதான் பட்டுப்பூச்சியாய்க்
கோலம் கொள்ளும் மறவாதீர்

அறிவை மறந்த உணர்ச்சி என்பது
திரியை மறந்த தீயாகும்
எரியும் தீயை இழந்த திரிதான்
உணர்ச்சி தொலைந்த அறிவாகும்

பழையவை எல்லாம் பழைமை அல்ல
பண்பும் அன்பும் பழையவைதாம்
இளையவர் கூட்டம் ஏந்தி நடக்க
இளமும் மொழியும் புதியவைதாம்

அறிவியல் என்னும் வாகனம் மீதில்
ஆளும் தமிழை நிறுத்துங்கள்
கரிகாலன்தன் பெருமை எல்லாம்
கணிப்பொறி யுள்ளே பொருத்துங்கள்

ஏவும் திசையில் அம்பைப்போல
இருந்த இனத்தை மாற்றுங்கள்
ஏவு கணையிலும் தமிழை எழுதி
எல்லா கோளிலும் ஏற்றுங்கள்.



நிழலுக்கும்.... நிஜத்திற்கும்...

இரவுக்கும்
பகலுக்கும்
வித்தியாசம்
இல்லாமல்
உயிர்கள்
விதைக்கப்படும்!

□□

இடிக்கும்
வெடிக்கும்
வேறுபாடு
புரியாமல்
ஆத்மா
அவஸ்தைப்படும்!

□□

வரவுக்கும்
செலவுக்கும்
எல்லை
புரியாமல்
உழைப்பு
முடங்கி நிற்கும்!

□□

அசலுக்கும்
நகலுக்கும்
புரிந்துணர்வு
இல்லாமல்
உணர்வுகள்
செத்து மடியும்!

□□

உறவுக்கும்
பகைக்கும்
உண்மை
தெரியாமல்
அமைதி
சிதைக்கப்படும்!

□□

நிழலுக்கும்.
நிஜத்திற்கும்
பேதம்
புரியாமல்
ஏதேதோ
நடக்கும்...!

□□

-கவியுவன்-
ஆரையம்பதி.

புன்னகை செய் புத்தாண்டே

எல்லா மக்களும்
உலகத்தாய்
பெற்ற குழந்தைகளே!
ஜாதி, பேத, நிறங்களை
பூசியது யாரோ....?

ஆயுதங்களை
அப்பால் ஏறியுங்கள்
அன்புக்கரங்களை
நீட்டுங்கள்....
அதோ...!
சமாதானப்பூச்செடி-நாளை
உலகமெங்கும்
மணம் பரப்பும்.

ப.தமிழ்ச்செல்வன்
கொழும்பு-11.



காதல் நாட்டில் கலவரம்

ஆயிரம் கிலோமீற்றர்களுக்கு
அப்பால்
உன் அன்பை
அடையாளப் படுத்தவா
இந்த
அவசர மடல்...?

••

இந்த
சமுதாய சந்தையில்
தேசத்தின்
சாயல் பற்றி
சரித்திரம் எழுதினால்
அது
தேச துரோகம்!
பிரியங்கள் பற்றி
பிடிவாதமாய் இருந்தால்
அவை
புறக்கணித்த
பூச்சியங்கள்...!

••

உன்னைத் தேடி வந்த
ராவுகளின்
தரிசனத்தில்
என்னை தழுவிக்கொள்ள
இரு கரங்கள்
இருந்தன...
என் சோகம் விசாரிக்க
இரு விழிகள்
இருந்தன...
இப்போதெல்லாம்
நீ-
இல்லாத இந்த
நிலாப் பொழுதுகளில்
நான் மட்டும்
மருட்டிய சோகத்தில்
மல்லாந்து படுக்கிறேன்.

••

இந்த இரவுகளின்
நீளத்தில்கூட...
நீ மட்டும்
வருவதாய் இருந்தால்
காத்துக்கிடப்பேன்...

••

வா...தேவி...
வந்து...

••

இவர்களின்
எல்லைகளை விட்டு
இந்த
தேசத்திற்கு வெளியே
எம்
தெருக்களைப்
புனரமைக்கலாம்.

-அநாமிகா (சுதா சேகர்)-பொத்துவில்-

வழி வாராதோ....!

மறவன் வழி மரபு வந்த
தமிழன் வீரம் ஓங்காதோ?
அன்பே சுதந்திரம் என்கின்ற
கோஷமது ஒலிக்காதோ?
எல்லையிலாத் துயர் நீங்கிக்
கொள்ளையின்பம் வாராதோ?
பிறந்த 'பவ' வருஷமேனும்
சிறப்புறவே வாழ்த்தாதோ...?

அழுகின்ற நம்மவரின்
அழு குரல்கள் ஓயாதோ?
விழிகளில் நீர் வீழ்ச்சி
விரைந்திங்கு நீங்காதோ?
வழிந்தோடும் இரத்தாறு
இவ்வாண்டில் வற்றாதோ?

அல்லல்படும் அன்னை பூமி
வண்ணமுற வாழ்த்தாதோ?
கன்னித் தமிழ்க் காவியங்கள்
கண்ணீர் சிந்தியது போதாதோ?

களிப்போடு நாம் சிலிர்க்க
பாலனொருவன் வாரானோ?
அழிவு நீங்கி ஆக்கம் வரவே
வழியொன்று வாராதோ...?

ஜெயந்தி-பம்பலப்பிட்டி.

இஷ்டமில்லாத பிரிவு

ஏனிந்தப் பிரிவு?
பிரிவுகள்
உறவின்
வலிமையை
வெளிப்படுத்தும் தான்.
ஆனாலும்
உன் பிரிவில்
எனக்கிஷ்டமில்லை!

இரவின்
தழுவலுக்கு
நில்வு
துணை வருகையில்
நான் மட்டும்
உன் நினைவுகளோடு
தனித்திருப்பதை
நீயும்
நினைத்துப்பார்.
என்
நிலை புரியும்!

உணர்வுகளைத்
தொலைத்து விட்டு
நான்
ஜடமாகிப் போவேன்!

ஒரு
சிறு விலகலையும்
ஜீரணிக்கும்
ஆற்றல்
இந்த
ஜீவனுக்கில்லையம்மா!

வேண்டாம்
நீ
பிரிவதில்
எனக்கிஷ்டமில்லை!

கே.கனகராஜா-நுவரெலியா.

சின்னப் பூக்கள்....

ஒரு நிலாவுக்கான
புதிய
வரவேற்பு
விழா
பூகோளமெங்கும்
'விடியல்'

••

வாடை வீச்சில்
காற்று கவலைப்பட்டுக்
கொண்டது
தானும் உயிர் அறுந்து
ஊமையாகி
விடுவேனா என்று
'பிணநாற்றம்'

••

நசுங்கியும்
நாளையாவது
நிமிரலாம் என்ற
ஒல
நப்பாசை
'நம்பிக்கை'

••

எரிந்து போனது
என்றாலும்
அதன் எச்சில்
இன்னும் கொஞ்சம்
இங்கே ஒட்டிக்கொண்டிருக்கிறது.
'எதிர்பார்ப்பு'

-கிண்ணியா சபறுள்ளா-

யார் காட்டுமிராண்டி?

'டுமீல், டுமீல்'
செத்து விழுந்தனர்
ஆதிவாசிகள்...
பறவைகள்
பறந்துபோக
காட்டு மரங்கள்
கண் பொத்திக்கொண்டன...

□□

ஆண்களாய்
பெண்களாய்
குழந்தைகளாய்
கிழடுகளாய்
மண்ணில் விழுந்தன
பிணங்கள்...

□□

துப்பாக்கியைத்
தொட்டே பார்க்காத
அந்த மனிதங்கள்
குண்டுகள் துளைத்து
தாலை சிதறி
தசைகள் தெறித்து—
கண்கள் வெறித்து——

□□

சுட்டவன்
வெறி தீராதவனாய்
பிணங்களோடு பேசினான்
"நான்
படித்தவன்......
நாகரிகமானவன்..
காட்டுமிராண்டி
எனக்கு கீழானவன்,
கீழ்படியாதவன்
நிலை இதுதான்."

□□

பிணங்களை
கால்களால் புரட்டி
காறி துப்பியவன்
துப்பாக்கியை
நெஞ்சோடு அணைத்து
நடக்கிறான்...

□□

அந்த காட்டுக்குப் புரியவில்லை.
"யார்
காட்டுமிராண்டி?"

செல்வி.சசிகலா சுப்பையா
மட்டக்களப்பு.

இந்த வாரம் உங்கள் பலன்

(15.05.94 முதல் 21.05.94 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

நவக்கிரக சஞ்சாரம்

இடபம்	- சூரியன், புதன், வெள்ளி
துலாம்	- வியாழன், இராகு
கும்பம்	- சனி
மேடம்	- செவ்வாய், கேது

சந்திரன்— மிதுனம், கர்க்கடகம், சிம்மம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்

16.5.94 இல் மிதுனச் சுக்கிரன்

மீனம்: சுப நேரம்

(புரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

ஞாயிறு-	பெரியோர் நட்பு, முன்னேற்றம்.	காலை 6 மணி
திங்கள்-	அரச சன்மானம், கௌரவம்.	பி.ப 1 மணி
செவ்வாய்-	துயர் நீங்கும், குடும்ப முன்னேற்றம்.	காலை 8 மணி
புதன்-	வரவு குறைவு, செலவு மிகுதி.	பகல் 12 மணி
வியாழன்-	கடன் படல், மனக் கலக்கம்.	காலை 9 மணி
வெள்ளி-	செய்தொழில் விருத்தி, உறவினர் பகை.	பி.ப 2 மணி
சனி-	தனலாபம், காரியானுகூலம்.	காலை 7 மணி

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 5

மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

ஞாயிறு-	காரியசித்தி, பணவரவு.	காலை 7 மணி
திங்கள்-	பெரியோர் சகவாசம், முயற்சி மேன்மை.	காலை 10 மணி
செவ்வாய்-	புதிய முயற்சி, மன மகிழ்ச்சி.	பகல் 12 மணி
புதன்-	உறவினர் தொல்லை, மனக் கலக்கம்.	காலை 8 மணி
வியாழன்-	பொருள் நஷ்டம், கடன் படல்.	பி.ப 1 மணி
வெள்ளி-	இடமாற்றம், தொழில் கஷ்டம்.	காலை 9 மணி
சனி-	வீண் கவலை, பிரயாண மிகுதி.	பி.ப 2 மணி

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 2

இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

ஞாயிறு-	பொருள் வரவு, காரிய நன்மை.	காலை 9 மணி
திங்கள்-	வீண் தடை நீங்கும், முயற்சிகளில் வெற்றி.	பி.ப 1 மணி
செவ்வாய்-	காரியக் கேடு, கவலையீனம்.	காலை 8 மணி
புதன்-	துயர் அதிகம், செலவு மிகுதி.	பகல் 12 மணி
வியாழன்-	தெய்வ நம்பிக்கை, முயற்சி வெற்றி.	காலை 7 மணி
வெள்ளி-	புதிய தொழில் கிடைத்தல், மன மகிழ்ச்சி.	பி.ப 2 மணி
சனி-	காரியானுகூலம், பணவரவு.	காலை 7 மணி

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 7

மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

ஞாயிறு-	செலவு மிகுதி, ஆடம்பரச் செலவு.	பி.ப 2 மணி
திங்கள்-	அந்நியரால் தொல்லை, மனக் கவலை.	காலை 8 மணி
செவ்வாய்-	பயனற்ற செயல், கௌரவம்.	பி.ப 1 மணி
புதன்-	உழைப்பு மிகுதி, பணவரவு.	காலை 8 மணி
வியாழன்-	மனமகிழ்ச்சி, காரிய சித்தி.	பகல் 12 மணி
வெள்ளி-	புதிய முயற்சி, கௌரவம்.	காலை 7 மணி
சனி-	வெளியிடப் பயணம், மனக் கஷ்டம்.	பி.ப 1 மணி

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், புரட்டாதி)

ஞாயிறு-	துயர் நீங்கும், குடும்ப மகிழ்ச்சி.	பி.ப 3 மணி
திங்கள்-	கௌரவம், தேகசுகம் விருத்தி.	காலை 9 மணி
செவ்வாய்-	மனப் பயம் நீங்கும், உயர்ந்த எண்ணம்.	பி.ப 1 மணி
புதன்-	வீண் கவலை நீங்கும், காரிய சித்தி.	காலை 10 மணி
வியாழன்-	தூர இடப் பயணம், குடும்பக் கவலை.	காலை 7 மணி
வெள்ளி-	அந்நியர் நட்பு, பொருள் பேறு.	பகல் 12 மணி
சனி-	காரிய சித்தி, புதிய தொழில் சேர்க்கை.	காலை 9 மணி

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 1

கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயில்யம்)

ஞாயிறு-	பொருட் செலவு, [illegible]	காலை 7 மணி
திங்கள-	உறவினரால் தொல்லை, பயணம்.	பகல் 11 மணி
செவ்வாய்-	வீண் மனஸ்தாபம், மனக் கலக்கம்.	காலை 6 மணி
புதன்-	துயர் நீங்கும், மனமகிழ்ச்சி.	பகல் 12 மணி
வியாழன்-	காரியசித்தி, உறவினர் பகை.	காலை 9 மணி
வெள்ளி-	தெய்வ நம்பிக்கை, முயற்சி மேன்மை.	காலை 7 மணி
சனி-	வாக்குக் கலகம், அரச விரோதம்.	பி.ப 1 மணி

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 6

மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டது முன்னரை)

ஞாயிறு-	புதிய முயற்சி, முன்னேற்றம்.	பி.ப 2 மணி
திங்கள்-	உறவினர் உதவி, பணச் சேர்க்கை.	காலை 7 மணி
செவ்வாய்-	பொருள் வரவு, காரிய சித்தி.	பி.ப 1 மணி
புதன்-	தெய்வ நம்பிக்கை, மன மகிழ்ச்சி.	காலை 8 மணி
வியாழன்-	பெரியோர் உதவி, பயண மிகுதி.	பகல் 12 மணி
வெள்ளி-	வீண் கலக்கம், மனப் பயம்.	காலை 9 மணி
சனி-	காரிய சித்தி, பொருள் வரவு.	பி.ப 3 மணி

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம் -3

சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

ஞாயிறு-	ஆடம்பரச் செலவு, குடும்ப சுகம்.	காலை 9 மணி
திங்கள்-	முயற்சி மேன்மை, கௌரவம்.	பி.ப 1 மணி
செவ்வாய்-	பணக் கஷ்டம், மனக் கவலை.	பி.ப 2 மணி
புதன்-	பிள்ளைகளால் தொல்லை, செலவு மிகுதி.	காலை 8 மணி
வியாழன்-	அந்நியர் நட்பு, மனக்கவலை குறையும்.	பகல் 12 மணி
வெள்ளி-	வீண் துயர், பொருள் நஷ்டம்.	காலை 6 மணி
சனி-	செய்தொழில் விருத்தி, குறைகேட்டல்.	பி.ப 2 மணி

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 9

தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

ஞாயிறு-	வெளியிட வாழ்க்கை, மனச் சந்தோஷம்.	பி.ப 2 மணி
திங்கள்-	காரிய சித்தி, பொருள் வரவு.	பி.ப 1 மணி
செவ்வாய்-	பெரியோர் நட்பு, முயற்சி மேன்மை.	காலை 7 மணி
புதன்-	செய்தொழில் விருத்தி, கடின உழைப்பு.	பகல் 12 மணி
வியாழன்-	வீண் மனஸ்தாபம், எதிர்பார்த்த கருமம் தடை.	காலை 8 மணி
வெள்ளி-	அந்நியரால் நன்மை, கௌரவம்.	காலை 10 மணி
சனி-	பொருள் வரவு, காரிய சித்தி.	காலை 8 மணி

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம் -7

விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

ஞாயிறு-	குடும்ப சுகம், பிள்ளைகளால் மகிழ்ச்சி.	காலை 8 மணி
திங்கள்-	செய்தொழில் விருத்தி, பணவரவு.	பகல் 12 மணி
செவ்வாய்-	வெளிநாட்டுப் பிரயாணம், முயற்சி மேன்மை.	காலை 6 மணி
புதன்-	பயனற்ற செயல், மனக் கவலை.	பி.ப 1 மணி
வியாழன்-	துயர் நீங்கும், காணி பூமி பேறு.	காலை 9 மணி
வெள்ளி-	உறவினர் உதவி, செலவுக் கஷ்டம்.	பகல் 11 மணி
சனி-	பணவரவு, மன மகிழ்ச்சி.	காலை 7 மணி

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-5

துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

ஞாயிறு-	பணவரவு, காரிய நன்மை.	பி.ப 2 மணி
திங்கள்-	உறவினர் கலகம், வீண் பகை.	பி.ப 1 மணி
செவ்வாய்-	பெரியோர் உதவி, தொழில் சிறப்பு.	காலை 10 மணி
புதன்-	மனப் போராட்டம், செலவு மிகுதி.	பகல் 12 மணி
வியாழன்-	செய்தொழில் விருத்தி, பணவரவு.	காலை 7 மணி
வெள்ளி-	நடைக் கஷ்டம், [illegible]	பகல் 12 மணி
சனி-	பயனற்ற செயல், மனக் கவலை.	காலை 8 மணி

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 8

கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

ஞாயிறு-	தனலாபம், காரியக் கேடு.	காலை 9 மணி
திங்கள்-	பெரியோர் சகவாசம், கௌரவம்.	பகல் 12 மணி
செவ்வாய்-	காரியானுகூலம், பொருள் வரவு.	காலை 8 மணி
புதன்-	அந்நியர் உதவி, செலவு மிகுதி.	காலை 10 மணி
வியாழன்-	மறைமுக எதிர்ப்பு, முன்னேற்றம்.	பி.ப 1 மணி
வெள்ளி-	மனமகிழ்ச்சி, காரிய சித்தி.	காலை 6 மணி
சனி-	வெளியிடப் பிரயாணம், உயர்ச்சி.	பி.ப 3 மணி

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 3

மருத்துவ ✚ விந்தைகள்

தங்கைக்காக கரு சுமந்தவள்!

மற்றுமொரு பிரசவ சாதனை!!

ஒரே கணவனுக்குரிய 3 குழந்தைகளை இரு தாய்மார் பெற்றெடுத்தனர். இம் மூன்று குழந்தைகளும் இப்போது ஒரே தாயிடமே வளர்கின்றன.

மாட்டினும் லிண்டாவும் திருமணமாகி 6 வருடங்களாகிய பின்னரும் இவர்களுக்குக் குழந்தைகள் பிறக்கவில்லை. இதனால் துயருற்றனர். இவர்களின் துயர் துடைக்க லின்டாவின் அக்காவான பார்பரா முன்வந்தார். தனது தங்கைக்காக அவள் வம்சவிளக்கினைத் தாங்க முன்வந்தாள். ஏற்கனவே ஒரு பெண் குழந்தைக்குத் தாயான பார்பரா தனது தங்கையின் சினை முட்டையையும் தங்கையின் கணவரது ஜீவணுவையும் சுமந்தாள்.

மிஸ்யூறி மாநிலத்தின் சென் லூயிஸ் நகரிலுள்ள சென் லூக்ஸ் மருத்துவமனையில் லிண்டாவும் பார்பராவும் மருத்துவர்களால் நன்கு பரிசோதிக்கப்பட்ட பின்னர் மாட்டின்-லிண்டா தம்பதியினரின் செயற்கை முறை கரு முட்டைகள் ஆறினை மூன்று மூன்றாக இரு சகோதரிகளுக்கும் வைத்தனர். லிண்டா குழந்தை பெறும் வாய்ப்பினைப் பெறவில்லை என்பதனாலேயே பார்பரா மூலம் வாரிசினைப் பெற ஏற்பாடு செய்யப்பட்டது. இருப்பினும் மருத்துவர்களிடம் லிண்டா வற்புறுத்தி வேண்டிக்கொண்டதன் பேரில் அவளுக்கும்-பரீட்சார்த்தமாக கருக்கள் வைக்கப்பட்டன.

மருத்துவ உலகே வியக்கும் நிலையில் லிண்டாவின் வயிற்றில் கரு வளரலாயிற்று.

அவள் இரட்டைக் குழந்தைகளை ஈன்றாள். அதே வேளை பார்பரா ஒரு குழந்தையை ஈன்றெடுத்தாள். அத்துடன் மட்டுமல்லாமல் அக்குழந்தையினை தானே பெற்றெடுத்த போதும் அ[illegible]க்கும் மாட்டினுக்குமே உரியது என்பதனால் அதனை லிண்டா-மாட்டின் தம்பதியிடம் மனப்பூர்வமாக ஒப்படைத்து விட்டாள்.

குழந்தை பெற முடியாதவள் என்று மருத்துவர்களால் கைவிடப்பட்டவள் இன்று மூன்று குழந்தைகளுக்குத் தாயாகிவிட்டாள்.

லிண்டாவின் குழந்தைகளான ஆன் (பெண்) ஜாக்சன்(ஆண்) ஆகிய இருவரும் எடையில் 6 இறாத்தலுக்கும் குறைவாகவே உள்ளபோது பார்பராவுக்குப் பிறந்த அலிசன் பத்தரை இறாத்தல் எடையுடன் பிறந்தான்.

வீட்டு வைத்தியம்

மருத்துவரின் உதவியின்றி நீங்களும் நோய் தீர்க்கலாம்

இதோ சில சுலப வழிகள்

சாதாரணமாக நமக்கேற்படும் சிறுசிறு நோய்களுக்கு மருத்துவரை நாடி ஓடாமல் வீட்டிலேயே மருத்துவம் செய்ய முடியும். தொண்டைக் கரகரப்பு, கழுத்துப் பிடிப்பு, தசைப்பிடிப்பு மற்றும் தூக்கமின்மை ஆகிய நோய்களைத் தீர்க்கும் சில எளிய மார்க்கங்களை மருத்துவ ஆராய்ச்சி நிபுணர்களே கூறுகின்றனர். நோய் வருமுன் காக்கும் மார்க்கங்களைத் தொகுத்தெழுதும் சஞ்சிகைகளின் ஆசிரியர்களே இம்முறைகளைத் தந்துள்ளனர்.

தொண்டைக் கரகரப்பு:

பூண்டு இதற்குச் சிறந்த மருந்து. நுண் கிருமிகளினால் ஏற்படும் தொற்றுக்களால் தான் பெரும்பாலும் தொண்டைக் கரகரப்பு ஏற்படுகிறது. நுண் கிருமிகளைக் கொல்லும் ஆற்றல் கொண்டது பூண்டு. பூஞ்சனத்தையும் உள்ளி எனப்படும் பூண்டு அழித்துவிடும். இதனை பெனிசில்வேனியா மாநில பல்கலைக்கழக பேராசிரியர் யூ யான் யெஷ் கூறுகிறார்.

தக்காளிப் பழச்சாற்றுடன் இரண்டு பூண்டு பற்களை நசித்துச் சேர்த்து பருகினால் கரகரப்புக் குறைந்துவிடும். உணவுடன் பூண்டைச் சேர்த்துக்கொள்வதும் பலனளிக்கும்.

ஒக்லஹாமா பல்கலைக்கழக மருத்துவப் பிரிவு தந்தரோகத்துறையின் தலைவரான டாக்டர் றிச்சாட் ரி.கிளாஸ், வாயில் ஏற்படும் தொற்று தொண்டையில் தொற்றிக்கொள்வதால் தொண்டை அரிப்பு ஏற்படுகிறது என்கிறார். வாயையும், குறிப்பாகப் பற்களையும் எப்போதும் சுத்தமாக வைத்திருப்பதன் அவசியத்தை வலியுறுத்தும் அவர் காலையில் கண் விழித்ததும் வாயைச் சுத்தம் செய்யாமல் எதனையும் பருகுவதோ உண்பதோ கூடாது என்கிறார்.

சிலவகை பல்தீட்டும் 'பிறஷ்'கள் சிலருக்குப் பொருந்துவதில்லை. பிரஷினால் தொண்டைக் கரகரப்பு ஏற்படுகிறது என்று கண்டால் பிரஷை உடனடியாக மாற்றிவிட வேண்டும். அதுமட்டுமல்லாமல், ஒரே பிரஷினை இரண்டு வாரங்களுக்கு மேல் பாவிக்கலாகாது என்றும் டாக்டர் றிச்சாட் கூறுகிறார்.

தசைப் பிடிப்பு:

இது பலதரப்பட்ட காரணங்களால் ஏற்படுவதுண்டு. இதற்குச் சிறந்த மருந்து அன்னாசிப்பழம். தேகத்தில் உள்ள சிராய்ப்புகள், அடிபட்டதனால் ஏற்படும் கட்டிகள், கன்றிப்போன இடங்கள் ஆகிய எல்லாவற்றையும் குணப்படுத்தக்கூடிய சக்தி அன்னாசிப்பழத்துக்குண்டு. 'ஸ்போர்ட்ஸ் அன்ட் எக்சர்சைஸ் இஞ்சரீஸ்' (விளையாட்டுக்கள் மற்றும் தேகப் பயிற்சியினால் ஏற்படும் காயங்கள்) என்ற நூலினை எழுதிய ஸ்ரீவன் சுபொட்னிக் என்பவர் இதனைத் தெரிவித் துள்ளார். 'போர்மலின்' எனப்படும் சத்து அன்னாசியிலிருப்பதனால் காயங்களைச் சீக்கிரம் அது குணப்படுத்த உதவுகிறது என்கிறார்.

சிலருக்கு அன்னாசி ஒத்துப் போவதில்லை. அன்னாசியை உண்டால் உடலில் அரிப்பினை உண்டாக்கும். ஆகவே இவர்கள் அன்னாசியை உட்கொள்வது நல்லதல்ல என்றும் டாக்டர் ஸ்ரீவன் கூறுகிறார்.

கழுத்து வாங்கல் (பிடிப்பு)

உடலின் ஒரு பக்கம் தாக்கத்தினைக் கொடுப்பதனாலேயே கழுத்து வாங்கல் அல்லது பிடிப்பு ஏற்படுகிறது. ஒரு துவாயினைச் சுருட்டி கழுத்துச் சுழுக்கு ஏற்பட்டிருக்கும் பகுதியில் அழுத்தமாக வைத்து வேறோர் துணியால் கழுத்தைச் சுற்றி ஒரு ஊசியின் மூலம் பிணைத்துக்கொள்ள வேண்டும். தலையைத் திடமாக வைத்திருக்கவும், தலையின் அசைவுகளைக் கட்டுப்படுத்தவும் இம்முறை உதவும்.

இதனைக் கூறும் ஸ்மித் கிளைன் பீச்சம், மருந்தக நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் கிறிஸ்ரா பார்ணன், வெந்நீரில் ஒரு துவாயைத் தோய்த்துப் பிளிந்து ஒத்தடம் கொடுக்கும் முறையினையும் கூறுகிறார். இது சாத்தியப் படாவிட்டால் சுடுநீர் நிரப்பிய புட்டியைக் கொண்டு வலியுள்ள இடத்தில் 30 நிமிடங்கள்வரை அழுத்தம் கொடுக்கலாம் என்கிறார்.

வெந்நீரில் குளிப்பதனாலும் கழுத்துச் சுழுக்கு நீங்கி விடும் என்று மற்றுமொரு மருத்துவ நிபுணரான றொண் பிளாமொண்டன் தெரிவித்துள்ளார்.

தூக்கமின்மை

உடலுக்கும் உள்ளத்துக்கும் உவப்பான சில நறுமணம் சிலருக்கு தூக்கத்தை விரைவில் வரவழைத்துவிடும். ஆனால் ஒருவருக்குப் பிடித்தமான மணம் மற்றொருவருக்கு தலை வலியினை ஏற்படுத்தி விடக்கூடும்.

ஒருவருடைய உள்ளத்துக்கு ஒய்வளிக்கக்கூடிய நறுமணம் எது என்பதனைக் கண்டு அதனை தூங்க முடியாமற் தவிப்பவர்கள்-சுவாசிக்க நேர்ந்தால் தூக்கம் உடனே வந்துவிடும் என்று கூறுகிறார், சிக்காகோவிலுள்ள மணம் மற்றும் சுவை ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் ஆலன் ஆர்.ஹிர்ஸ்ச் என்பவர்.

கடற்கரைக் காற்றும் சிலருக்கு தூக்கத்தினை வரவழைக்கும் மருந்தாகிறது.

ஆப்பிள் பழங்களுடன் சில வாசனைப் பொருட்களையும் சேர்த்து உண்பதன் மூலமும் தூக்கத்தை வரவழைக்க முடியும்.

சிந்திக்கலாம் இங்கே

சென்ற வாரம் அடுத்தவர்களுக்கு உதவுதல் பற்றி எழுதியிருந்தேன்.

உடனே கொழும்பில் இருந்து ஒரு வாசக நண்பர் கடிதம் எழுதியிருந்தார்.

"உதவி செய்வது உன்னதம் தான்; மறுக்கவில்லை. ஆனால் சிலருக்கு கைகொடுத்து தூக்கிவிட நினைத்தால், அவர்களோ கை கொடுப்பவனின் காலை வாரிவிட நினைக்கிறார்களே. என்ன சொல்கிறீர்கள்?" என்ற சாரப்பட கேட்டிருந்தார்.

அருமையான கேள்வி. கொஞ்சம் பொறுமையாக யோசித்துப் பார்த்தபோது எனக்கும் புரிந்ததை இங்கே சொல்கிறேன்.

"பாத்திரமறிந்து பிச்சையிடு" என்று நம் முன்னோர்கள் முன் அறிவித்திருக்கிறார்கள்.

அண்மையில் நடிகர் கமல்ஹாசன் ஒரு விழாவிலே "எவருக்குமே பிச்சையிடாதீர்கள்" என்று பேசியிருக்கிறார்.

கமலின் கருத்தோடு எனக்கு முழுவதுமாக ஒத்துப்போக முடியவில்லை.

ஆனால் "பாத்திரமறிந்து பிச்சையிடு" என்று முன்னோர்கள் கூறியதை முழு மனதோடு ஏற்றுக்கொள்ள இயல்கிறது.

உழைப்பதற்கு உடலிலே வலுவிருந்தும், ஊனமாய் நடித்துக்கொண்டு கையேந்தி நிற்பவனுக்கு காசு போடத் தேவையில்லை.

அவ்வாறு நடிப்பவன் நம்மையும் முட்டாளாக்கி விடுகிறான். தன்னையும் முட்டாளாக்கிக் கொள்கிறான்.

ஊனமாகி, உதவிகள் யாதுமின்றி ஒரு வேளைச் சோறுக்கே வழியுமின்றிக் கிடக்கும் ஒன்றுமில்லாதவர்கள் வந்து கையேந்தும் போது இயன்றதைக் கொடுப்பதில் குறையில்லை.

அவர்களைப் பார்த்து "உழைத்து சாப்பிடுவதற்கென்ன, வந்தது" என்று உபதேசம் நடத்திக்கொண்டிருக்கக் கூடாது.

பட்டைச் சாராயம் குடிக்க பிச்சை எடுப்பவர்களும் இருக்கிறார்கள்.

மது உள்ளே போகும்வரை பிச்சை கேட்பார்கள். உள்ளே போய் விட்டபின்னர் உன்னிடமே வந்து, மிரட்டிக் கப்பம் கேட்பார்கள். கத்தியையும் நீட்டுவார்கள்.

உதவி உபத்திரவத்தில் வந்து முடிவதற்கு உதாரணமானது இது.

அதனால்தான் பிச்சையிட முன்னர் பாத்திரமறியும்படி முன்னோர்கள் சொன்னார்கள்.

பிச்சையிடுவதற்கு பாத்திரமறிவது எவ்வளவு முக்கியமோ அதைவிட முக்கியம் ஒருவனை கைதூக்கிவிட முன்னர் அவன் குணமறிந்து கொள்வது!

ஆல மரத்திற்கு நீர் ஊற்றி வளர்த்துவிட்டால் நீயும் இளைப்பாறலாம். உன்னைப்போல் இன்னும் பலரும் வந்து இளைப்பாறிக் கொள்ளலாம்.

ஆனால் விஷ விருட்சத்துக்கு நீர்விட்டு வளர்த்தால் உன் சுவாசத்திற்கும் நாளை அபாயம் நேரலாம்.

எதனை நீர் ஊற்றி வளர்க்க வேண்டும், எதனை வேரோடு அகற்றி எறிய வேண்டும் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.

அல்லாது போனால் சுற்றாடல் அசுத்தமாகும். உன் சுற்றமும் நாசமாகும்.

மனிதர்களில் ஆல மர விருட்சம் போன்றவர்களும் இருக்கிறார்கள்.

ஆலகால விஷம் போன்றவர்களும் இருக்கிறார்கள்.

குணமறியாமல் கோபுரத்தில் ஏற்றி வைத்தால் அங்கிருந்தபடியே அசிங்கம் செய்வார்கள்.

கோபுரத்தில் ஏற்றிவிட்ட உன்னையும் குப்புறத் தள்ளிவிட எப்போதடா வாய்ப்பு வரும் என்றுதான் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

அவர்கள் தரையில் இருக்கும்போது தவறு செய்தால் நாலுபேர் எட்டிப் பிடித்து நாலு தட்டுத் தட்டி அடக்க முடியும்.

கோபுரத்தில் ஏறி நின்று கீழே உள்ளவர்கள்மீது எச்சில் துப்பி நாறவைத்துக் கொண்டிருந்தாலும் உடனே எட்டிப்பிடிக்க முடியாது.

கோபுரம் என்று நான் கூறுவதில் பணபலம், அதிகார பலம், ஆள்பலம், பதவிசுகம் என்பவையும் அடங்கும்.

எங்கே விபரீதமாகிவிடுமோ என்று பயந்து தம் உள்ளத்தில் இருக்கும் விஷத்தை வெளியே கக்குவதற்கு பயந்துகொண்டிருப்பவனுக்கு எவருக்கும் பயந்துவிடாத பலத்தை கொடுத்துவிடும்போது-

உன் தோளில் ஏறி இருந்தே தேளினும் கொடியவனான தன் தோற்றத்தை காட்டிவிடுவான்.

பணமும், அதனால் வரும் பலமும் கையில் கிடைக்கும்போதுதான் சிலரது பசுத்தோல் விலகும்.

நல்லவர்கள் சிலர்கூட பணம்வரும் போதும், பதவி சுகம் பெறும்போதும் தம் குணத்தைக் கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள்- கொள்கைகளை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

அப்படியிருக்க, குணக்கேடர்களுக்கு கையில் பலம் கிடைக்கும்போது எப்படி நடந்துகொள்வார்கள் என்று சொல்லத் தேவையில்லை.

உன்னால் உயர்ந்தவன் உன்னை மட்டும் கோபுரத்தில் இருந்து குப்புறத் தள்ளினால்கூட பொறுத்துக் கொள்ளலாம்.

தரமறியாமல் தகுதி கொடுத்ததற்கு தண்டனை கிடைத்ததாக எண்ணிக் கொள்ளலாம்.

ஆனால், குணக்கேடானவர்கள் உன்னை மட்டும் குப்புறத்தள்ளி விடுவதோடு நின்றுவிட மாட்டார்கள்.

அவர்கள் போடும் ஆட்டத்தில் பலர் வாடவேண்டியிருக்கும். ஆல விருட்சமான மனிதர்கள்கூட அந்த குணக்கேடர்கள் முன்னால் குனிந்து நிற்கவேண்டி இருக்கும்.

அதனைத் தடுக்க உன்னாலும் முடியாது. அவர்களோ உன் தலையிலும் குட்டிக்கொண்டிருப்பார்கள். குனிந்து துப்பிக் கொண்டிருப்பார்கள்.

சிலரை திருத்தவே முடியாது. அசுத்தம் உடலில் இருந்தால் குளிப்பாட்டிப் போக்கலாம். உள்ளத்தில் நிறைந்து கிடந்தால் எத்தனை முறை குளிப்பாட்டியும் என்ன பயன்?

தாங்கள் செய்த தவறுகளுக்கு வருந்தவே சந்தர்ப்பம் இல்லாமல் குணக்கேடர்களை கோபுரத்தில் ஏற்றுவதும், அவர்களை எப்போதுமே திருந்த முடியாமல் செய்துவிடுகிறது.

உன் நண்பனுக்கு துரோகம் செய்தவனை நீ அணைத்துக்கொண்டால், உன்னைப்போல் நாளை இன்னொருவன் தன்னை அணைப்பான் என்ற நம்பிக்கையில் உன் முதுகில் குத்தவும் அவன் பின்நிற்க மாட்டான்.

குரங்கின் கையில் பூமாலை கொடுக்கக்கூடாது. குணக்கேடர்களை கோபுரத்தில் ஏற்றிவிடக்கூடாது.

(மறுவாரமும் சிந்திக்கலாம்)

13 கொலை

"மனதுக்குள் கண்ணை வைத்துவிடு-அதில் மற்றவர் மனதைப் பார்த்துவிடு! அடையாளம் அதில் தெரிந்துவிடும்-நல்ல அன்புள்ள இடமும் புரிந்துவிடும்!"

-கவியரசு கண்ணதாசன்-

எழுதுவது ரசிகன்

மாடியிலிருந்து வேகமாய் இறங்கி வந்ததில் நிர்மலாவுக்கு மூச்சிரைத்தது.

தாமதிக்க நேரமில்லை. தன்னை ஒருமுறை பார்த்துக்கொண்டாள்.

கேசவன் அவசரப்பட்டதால் சட்டையின் மேல் பொத்தான் அறுந்து விழுந்திருக்க, மார்பின் விளிம்புகள் வரை சட்டை திறந்திருந்தது. அலட்சியம் செய்தாள்.

கேட் தாண்டி வீதிக்கு அவள் விரைய, பொலிசுக்கு ஃபோன் செய்துவிட்டு மாடித் தொடரையும், வீதியையும் மாறிமாறிப் பார்த்தபடி நின்று கொண்டிருந்த வாட்ச்மேன் நிர்மலாவின் பதட்டமான வேக விரைவை சந்தேகத்தோடு கவனித்தான்.

தொடர்மாடிக் கட்டிட வளாகத்தின் கேற்றின் இடது மூலையில் தனது சின்ன அறைக்குள் வாட்ச்மேன் நின்றுகொண்டிருக்க, நிர்மலா அவசரத்தில் அவனை கண்டு கொள்ளாமல் கேற் தள்ளித்திறந்து, தெருவில் இறங்கி ஓட்டோ அல்லது ராக்சி வருகிறதா என்று பின்னும் முன்னும் பார்த்தபடி செல்ல,

எதிரே பொலிஸ் ஜீப் ஒன்று வந்துகொண்டிருந்தது.

நெஞ்சுக்குள் திக்.திக்.திக். நடையில் வேகம் குறைந்து நிதானமாய் நடக்க முயன்று, எதிரே வரும் ஜீப்பை கவனியாதது போல் நடந்து போய், ஜீப்பின் பின்னால் ஒரு ஓட்டோ வருவது தெரிந்து கையால் சைகை செய்ய, தெருவில் அரை வட்டமடித்து திரும்பிய ஆட்டோ, நிர்மலாவை உள்வாங்கிக்கொண்டு விரைய,

பொலிஸ் ஜீப் தொடர்மாடி கட்டிடத்தின் வளாகத்திற்குள் உறுமிக்கொண்டு புகுந்தது.

ஓடி வந்த வாட்ச்மேன், ஜீப்பிலிருந்து இறங்கிய இன்ஸ்பெக்டர் சிறீதரனை பார்த்து மரியாதை கலந்த பயத்தோடு புன்னகைத்தான்.

காக்கி யூனிபோம் அவன்தான் வாட்ச்மேன் என்று அடையாளம் காட்டிவிட,

"நீதான் ஃபோன் பண்ணியதா?"

"யெஸ் சேர். நான்தான் சேர்..."

என்றவன் ஃபோன் பண்ணிய காரணம் சொல்லி, மேலே மாடி நோக்கி கை உயர்த்திக் காட்டினான்.

"அவன் வந்த கார் எங்கே?"

இன்ஸ்பெக்டர் சிறீதரன் கேட்க, பாக்கிங்கில் நின்ற கார் காட்டினான் வாட்ச்மேன். கொன்ஸ்டபிள் ஒருவரை அருகே அழைத்து, காருக்கு காவலாக நிற்கச் சொல்லி உத்தரவு போட்டுவிட்டு, மாடிப்படிகளை நோக்கி இன்ஸ்பெக்டர் சிறீதரன் விரைய, கொன்ஸ்டபிள்கள் பின் தொடர்ந்தனர்.

மேலே மூன்றாவது மாடியில் அவன் உசாரானான்.

வாட்ச்மேன் சந்தேகிப்பான். சந்தேகம் பொலிசை அழைக்கும் என்று யோசிக்காமல் விட்டது மாபெரும் மடத்தனம்.

'இப்போது என்ன செய்யலாம்?' சுற்று முற்றும் ஒருமுறை பார்த்துக்கொண்டான்.

மாடியின் வலது புற முனை நோக்கி ஓடிப்போனான். ப்ஹூம்... பாதையே கிடையாது.

மறுபடி திரும்பி இடது புற முனை நோக்கி ஓடினான்.

ஒரு குறுகலான நடைபாதை இருந்தது. யோசிக்கக்கூடாது. அதன் வழியே ஓடினான். மாடியின் முதுகுப் பக்கத்தில் கொண்டுவந்து நிறுத்தியது. கீழே எட்டிப்பார்த்தான்.

கீழே ஒரு கார் நிற்பது மட்டும் தெரிந்தது. இறங்கிப்போக எந்த மார்க்கமும் கிடையாது.

'என்ன செய்யலாம்?' யோசித்த நொடியில் பின்புறமாய் பூட்ஸ் சத்தம் கேட்டது. அடுத்து அதட்டலான குரலில் அந்த உத்தரவு கேட்டது.

"டோண்ட் மூவ். அப்படியே நில். திரும்பாதே!"

வந்துவிட்டார்கள். கண்டுவிட்டார்கள். கரணம் தப்பினால் மரணம் என்றதன் அர்த்தம் அவனுக்கு இப்போதுதான் புரிந்தது.

பூட்ஸ் சத்தம் கிட்டவர, கீழே எட்டிப் பார்த்தான்.

கார் நிற்பது தெரிய, காரை குறிவைத்து அப்படியே கரணமடித்தபடி கீழே குதித்தான்.

இன்ஸ்பெக்டர் சிறீதரன் எதிர்பார்க்க வில்லை. அவன் திரும்பித் தாக்கக்கூடும் என்றுதான் எதிர்பார்த்தார்.

ஓடிவந்து எட்டிப்பார்க்க அவன் காற்றில் கரணமடித்தபடி கீழே போய்க் கொண்டிருந்தான்.

'சுடுவதா வேண்டாமா?' யோசித்தார். 'விடாதே! சுடு!!' மூளை உத்தரவிட்டது.

ரிவோல்வரின் விசை அழுத்த ரவை சீறிப் பறந்தது.

அவன் இப்போது கீழே நின்றிருந்த காரின் கூரை மீது விழுந்தான்.

குறி தவறி ரவை காரின் முன்பக்க 'போனட்டில்' முத்தமிட்டது.

அவன் மிகவும் இலாவகமாக, சாகசங்கள் செய்ய பயிற்சி பெற்றவன் போல, காரின் கூரையில் விழுந்து மறு நொடியே கீழே குதித்தான்.

காரின் கதவை திறக்க முயல, அது 'லொக்' செய்யப்பட்டிருந்தது.

முஷ்டியை மடக்கி கண்ணாடியில் குத்தினான். கையை உள்ளே விட்டு 'லோக்' அகற்றினான்.

இன்ஸ்பெக்டர் சிறீதரன் இரண்டாவது தடவையாக சுட்டார்.

அவன் கதவு திறந்து காருக்குள் புகுந்து கொள்ள குறி மீண்டும் தவறியது.

சிறீதரன் திரும்பி தன் பின்னால் நின்ற கொன்ஸ்டபிளை பார்த்து, "கீழே ஓடி உடனே மடக்க முயலுங்கள் குயிக். சுடுவதற்கு தயங்க வேண்டாம்." கொன்ஸ்டபிள்கள் கீழே ஓடினார்கள்.

அவன் காரின் உள்ளே இருந்தபடி, தன் முதுகுப் பையில் கைவிட்டு ஒரு சாவிக் கொத்தை எடுத்தான்.

நீளமாய், சின்னதாய், பல்வேறு அளவுகளில் நிறைய சாவிகள் இருந்தன. இரண்டு சாவிகள் ஒத்துழைக்க மறுக்க, மூன்றாவது சாவி வித்தை காட்டியது.

இயக்கி, கியர் போட்டு பின்புறமாய் வேகமாய் எடுத்து, ஒரு வளைவாய் திரும்பி சீறிப் பறந்தது கார்.

கார் கிளம்பிச் செல்லவும், கொன்ஸ்டபிள்கள் அங்கு வந்து சேரவும் சரியாக இருந்தது. கொன்ஸ்டபிள்கள் மேலே பார்க்க, சிறீதரன் வெறுப்போடும், மடக்க முடியவில்லையே என்ற இயலாமையோடும் கீழே பார்த்துக்கொண்டிருந்தார்.

■

"பிரியா காரைத் திருப்பு."

என்றார் குலாம்ஷா. ஏன் என்பதாய் குலாம்ஷாவைத் திரும்பிப் பார்த்தாள் டிரைவிங் செய்துகொண்டிருந்த பிரியா.

"அதோ போகிறது பார் கார். ஏதோ வித்தியாசமாய் தெரிகிறது. டிரைவிங் செய்பவனின் பார்வையே சரியில்லை. திருப்பு! குயிக்."

திருப்பினாள். பின்னால் வந்த ஓட்டோக்காரன் பிரியா சடுதியாக திருப்பியதில் கோபப்பட்டு கெட்ட வார்த்தையால் திட்டினான்.

பிரியா 'ஆக்சிலேட்டரை' உச்ச வேகத்திற்கு உத்தரவிட்டு காலால் அழுத்தினாள்.

எதிரே தெரிந்த சிவப்பு சிக்னலை அலட்சியம் செய்து பறந்து கொண்டிருந்த பிரியாவின் காரின் இலக்கம் பார்த்து அவசரமாய் குறித்துக்கொண்டார் போக்குவரத்து பொலிஸ்காரர்.

குறித்துக்கொண்ட இலக்கத்தோடு ஓடி தன் மோட்டார் சைக்கிளில் இருந்து "வயர்லெஸ்ஸில்" தகவல் சொல்லிக் கொண்டிருந்தார்.

"குட்! விடாதே துரத்து."

என்றார் குலாம்ஷா. இப்போது அவனது காரை நெருங்கியாயிற்று. முந்தி விடலாம். பிரியா நம்பிக்கையோடு ஆக்சிலேட்டரை அழுத்திக்கொண்டிருக்க,

தெருவின் குறுக்கே போக்குவரத்து பொலிசார் நான்கு பேர் ஒரு சுவர் போல நின்று, காரை நிறுத்துமாறு சைகை செய்துகொண்டிருந்தனர்.

குலாம்ஷாவை திரும்பிப் பார்த்தாள் பிரியா.

■

நிர்மலாவின் இடது கையில் 'பெதடின்' ஊசியை செருகியபடியே, ஊசி வழியே போதை உள்ளே செல்ல, நிர்மலா விழிகள் செருக, உதடுகள் துடிக்க, தரையில் இருந்து எழுந்து அந்தரத்தில் மிதப்பதுபோல் உணர்ந்து கொண்டிருப்பதை இரசித்தபடி, பொத்தான் இல்லாமல் விலகிக் கிடந்த சட்டை வழியாக எட்டிப்பார்த்துக் கொண்டிருந்த அவள் மார்புகளை முறைத்தபடி தனக்குள் சிரித்துக்கொண்டான் ஜவாகர்.

ஜவாகர் திடகாத்திரமாய் தெரிந்தான். தினசரி காலையில் எத்தனை கிலோ பளு தூக்குவான் என்று தெரியவில்லை. மார்பு விரிந்து, தோள்கள் உயர்ந்து குத்துச்சண்டைக்கு தயாராகுபவன் போல இருந்தான்.

நிர்மலாவுக்கு 'பெதடின்' மீது பிரியம். ஜவாகருக்கு நிர்மலாவின் உடல்மீது மகா பிரியம்.

ஜவாகர் குடிப்பது கிடையாது. சமயத்தில் எப்போதாவது புகைப்பது உண்டு. போதை வியாபாரத்தின் நுட்பங்கள் அனைத்தும் அவன் விரல் நுனியில் இருந்தன. ஆனால் ஒரு முறை கூட போதையின் மீது பிரியப்பட்டது கிடையாது.

ஜவாகருக்கு பிடித்தமானது பெண்களைத் தொடுதல். மறு தரப்பின் விருப்பத்தோடு மட்டுமே தொடுதல் என்முறை பிடிக்காது.

இப்போது ஜவாகர் ஊசியை மேசை மீது வைத்துவிட்டு, நிர்மலாவின் இரு தோள்களிலும் தன் கரங்களை அழுத்தமாய் வைத்துக்கொண்டு, அவள் விழிகளுக்குள் பார்த்தான். தன் இடது தோளில் இருந்த அவன் வலது கரத்தை வைத்து அழுத்தியபடி நிர்மலா அவன் பரந்த மார்பையும், உயர்ந்த தோள்களையும் பார்த்துக்கொண்டு பெருமூச்சு ஒன்றை வெளியேற்றினாள்.

"ஜவா! உனக்கு என்ன வேண்டும்? என்னைத் தொட்டுமா? சொல் ஜவா! கேள் ஜவா?"

என்றாள். சொற்கள் தடுமாறி உடைந்து வந்தன.

ஜவாகர் பதில் சொல்லவில்லை. அவள் வலது தோளில் இருந்து கரம் இறங்கி, எட்டிப்பார்த்து மயக்கமூட்டிய மார்புகளின் விளிம்பில் விரல்களால் மெல்ல வருடினான். நிர்மலா அந்த விரல்களை தன் விரல்களால் பற்றி மார்பில் அழுத்திக்கொண்டாள்.

திடீரென்று ஜவாகர் கேட்டான்,

"நிம்மி உன் சமீப காதலன் கேசவன் எங்கே?"

திடுக்குற்று நிமிர்ந்த நிர்மலா ஜவாகர் முகம் நோக்கினாள்.

கேசவன் மார்பில் ரவை வாங்கி, இரத்தம் கொப்பளிக்க, அந்த இறுதி நேர துடித்தலில் விழிகள் தன்னையே பார்த்தது போல, "போகிறேன் நிம்மி" என்று அந்த விழிகள் துடித்து விடைபெற்றதுபோல...

'வேண்டாம் மற! கேசவன் குண்டுபட்டு செத்துப்போனது உனக்கு தெரியவே தெரியாது. சுத்தமாக மற!!

'யார் சுட்டார்கள்? ஏன் சுட்டார்கள்? என்று கேள்.

'என் கேசவ் எனக்கு வேண்டும். வருவாயா கேசவ்? வந்துண ஒரு முத்தம் தருவாயா கேசவ்? வா! வந்து தா! என்று அடுத்தவர்கள் உன்னை நம்பும் படி துடி! துடிப்பதுபோல நடி!!

'என்னிடமும் பொலிஸ் வருமா? வரும்! எப்படித் தெரியும்? பொலிஸ் மோப்பம் பிடிக்கும்! கேசவனின் நண்பர்களைத் துருவும்.

'ஒரு வாரக் காதல், ஒருவருக்கும் தெரியாதே? தவறு பெண்ணே தவறு! நீ எதிர்பார்க்காத கோணத்தில் இருந்து பொலிஸ் தடயம் அறியும். உன் காதலை கேசவன் தன் நண்பர்களோடு பேசியிருக்கலாம். பொன் முட்டையிடும் வாத்து ஒன்று வலையில் தானாகவே விழுந்த கதை சொல்லி மகிழ்ந்திருக்கலாம். அதை அவர்கள் பொலிசுக்கு சொல்லிவிடலாம்!'

'இப்போது நான் என்ன செய்யவேண்டும்? தைரியமாக இருக்கவேண்டும். எதற்கும் கொஞ்சம் விழிப்பாயிருக்கவேண்டும்!'

மனதை இரண்டாகப் பிரித்த எதிரும் புதிருமாக நிறுத்தி வைத்து விவாதம் நடத்த, ஜவாகர் அவன் கன்னத்தில் தன் உதடுகளால் வருடி உயர்ந்து, அவள் காதுக்குள் கேட்டான்,

"என்ன பலமான யோசனை நிம்மி? கேசவனுக்கும் 'குட் பை' சொல்லிவிட்டாயா? இந்த ஜவாகருக்கு மட்டும் உன்னால் 'குட்பை' தரவே முடியாது."

சொல்லிக் கொண்டே அவள் மூக்கின் நுனியில் விரல்களால் மெல்ல அழுத்த நிர்மலாவின் சிந்தனை அறுபட்டது. சமாளித்துக் கொண்டு வலிய ஒரு புன்னகை காட்டி, தன் இரு கரங்களும் உயர்த்தி ஜவாகரின் கழுத்தின் பின்புறமாய் கரங்களைக் கோர்த்து தன் இதழ்கள் நோக்கி இழுத்தாள்.

அறையை எற்று ஜவாகர் முகம் கவிழ்ந்த நொடியில்,

அவர்கள் இருந்த அறைக்கு வெளியே காலடிச் சத்தம் கேட்டது.

காலடிச் சத்தம் கதவருகே வந்து ஓய்ந்தது. மறு நொடி கதவு தட்டப்பட்டது.

நிர்மலா ஜவாகரைப் பார்த்தாள். பார்வைக்குள் பயம் இருந்தது.

ஜவாகர் முகத்தில் எவ்வித பதட்டமும் இல்லாமல், நிம்மியின் இதழ்களை அழுத்தமாய் கவ்விக்கொண்டு, அவள் விழிகளை பார்த்து கண் சிமிட்டினான்.

நிர்மலாவால் அவன் குறும்பை இரசிக்க முடியவில்லை. நெஞ்சில் கைவைத்து பின்புறமாய் அவனை தள்ளியபடி எழுந்து,

"யார் என்று பார் ஜவா!"

என்றாள் தாழ்ந்த குரலில்...... ஜவாகர் சென்று கதவு திறக்க,

நிர்மலாவின் இதயம் பயத்தில் அடங்கிக்கொள்ள,

"ஹாய் ஜவாகர்" என்றபடி உள்ளே வந்தவள் நிம்மியைப் பார்த்தவுடன் ஆச்சரியத்தில் விழிகள் விரிக்க,

நிர்மலா தன்னை மறந்து, உடல் முழுதும் பயத்தில் உறைய-

வரண்டுபோன இதழ்களை நாவால் ஈரப்படுத்திக்கொண்டு, திக்கித் திணறியபடி......

"நீ...நீ....யா.... கே.....ச......வ்... நீயா?"

என்றாள் அவனை வெறித்துப் பார்த்தபடி.

ஜவாகர் பெரிதாக சத்தம் போட்டு சிரிக்கத் தொடங்கினான்.

■

அவன் தன் தலைக்கு மேல் இருந்த கண்ணாடி வழியாக தான் தொடரப் படுவதை அறிந்து கொண்டான்.

அநேகமாக பொலிசாகத்தான் இருக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டு வேகம் அதிகப்படுத்தினான்.

அவன் காருக்கு வழிவிட்டு, பின்னால் தொடர்ந்து வந்த கரர் பொலிசால் தடுக்கப்பட்டபோது, தப்பிக்கொள்ள சந்தர்ப்பம் கிடைத்ததற்காக தன் அதிஷ்டத்தை வியந்துகொண்டான்.

வியந்து போனதில் வந்த உற்சாகத்தில் உதடு குவித்து விசில் அடித்தான்.

காரில் ரேப் ரெக்கோடர் பொருத்தப் பட்டிருந்தது.

ஒரு பாடல் கேட்கலாமே என்று ஆசை வர, பட்டன் தட்டினான்.

"பனி விழும் மலர் வனம், உன் பார்வை ஒரு வரம்..."

அடுத்த வரிகள் வருவதற்கு இடையில் அவசரமாய் நிறுத்தினான்.

'பார்வை வரம் என்று எந்த பைத்தியக்காரன் சொன்னது? பார்வை நெருப்பு. அழகான பெண்ணின் பார்வை நெருப்பு. மனதைப் பொசுக்கி, சோக மணம் வீசச் செய்து சாம்பலாக்கும் நெருப்பு.'

மனதுக்குள் சொல்லிக்கொண்டான். கோபமும், வெறுப்பும் கலந்து சங்கமித்து மனசுக்குள் கிளர்ந்தது. ஆக்சிலேட்டர் மீது இன்னும் பலமாய் பாதத்தை அழுத்தினான்.

'மலர் வனம்... நெ... நெ... முட் படுக்கை. முன்னிச் விழுந்த சேலையைக்கூட புத்தி உபயோகித்து கிழியாமல், சேதாரம் இல்லாமல் எடுத்தல் சாத்தியம்.

'பெண்ணில் விழுந்த மனதை மீள எடுத்தல் முடியாது. கிழிக் கிழித்து. இரத்தம் சிந்தி, காயம் மாறாமல்... சே..மலர் வனமாம்...மலர் வனம்...'

கோபத்தில் வலது கரம் மடித்து 'ஸ்டீயரிங்கில்' குத்தினான்.

'கோபம் புத்தியை மறைக்கும். நிதானம் பறிக்கும்.'

அவனுக்கும் மறைத்தது. பறித்தது.

அதனால் ஒரு விபரீதம் எதிரே அவனை எதிர்பார்த்து வந்து கொண்டிருந்தது.

(இன்னும் வரும்)

ரசிகனின் கதைகளின் தொடரில் சில பகுதிகளை தவறவிட்ட வாசகர்கள் தமக்கு குறித்த பிரதிகளை அனுப்புமாறு கேட்டிருக்கின்றார்கள்.

அவ்வாறு பிரதிகள் பெறவிரும்புவோர் பிரதி ஒன்றிற்கு ரூபா 10 பெறுமதியான முத்திரைகளை அனுப்பி வைக்கவும். தொகை அதிகமாயின் முத்திரைகளைப் பதிவுத் தபாலில் சேர்ப்பிப்பதோடு தங்களது முகவரியை தெளிவாகக் குறிப்பிட்டனுப்பத் தவற வேண்டாம்.

CIRCULATION MANAGER
THINA MURASU
88/14, SOMADEVI PLACE,
KIRILAPONE, COLOMBO-5

பேனா நண்பர் அரங்கம்

பெயர்: நவமணி தயாபு லெனின்
வயது: 18
முகவரி: கொண்டகலை டிவி, லபுக்கெல.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், பாடிப் பழகுதல், ஆக்கங்கள் எழுதுதல்.

பெயர்: எம்.ஐ.முகமட் பஸீல்
வயது: 21
முகவரி: 38 B, கண்டி வீதி, பண்டாலை.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல்.

பெயர்: [illegible]
வயது: [illegible]
முகவரி: [illegible] வீதி, [illegible]
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல்.

பெயர்: எஸ். ஹசன் பாத்திமா
வயது: 17
முகவரி: 632, கண்டி வீதி, தெலியாகொன்ன, குருநாகல்.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்.

பெயர்: [illegible]
வயது: [illegible]
முகவரி: AL-[illegible], P.O.BOX-380 AL-[illegible]-11942, K.S.A.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, சினிமா, முத்திரை சேகரித்தல்.

பெயர்: [illegible]
வயது: [illegible]
முகவரி: DALLAH EST. P.O.BOX-2594 ROOM NO-Z.5 HOLLY MAKKAH.
பொழுதுபோக்கு: [illegible] விளையாடுதல்.

பெயர்: ஏ.என். வர்மன்
முகவரி: 26-4, 37வது ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு-06.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், கதை, கவிதை வாசித்தல்.

பெயர்: எம்.சி. அன்சார்
வயது: 21
முகவரி: 193, மெயின் வீதி, மாளிகைமுனை-03.காத்தான்குடி.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல்.

பெயர்: என்.வி. ரவீந்திரன்
வயது: 23
முகவரி: வெலென்ன தோட்டம், புதுமலை டிவிஷன், பதுளை.
பொ.போ: வானொலி, பத்திரிகை, தொலைக்காட்சி, நண்பர்களுடன் அரட்டை.

பெயர்: எச்.சி.எம். ஹரிஸ்
வயது: 18
முகவரி: கொஹெதாண்ட, வெலிகாமம்.
பொ.போ: வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல், விளையாடுதல்.

பெயர்: ம. [illegible]
வயது: 17
முகவரி: 87, பிரதான வீதி, [illegible]
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், புத்தகம் வாசித்தல்.

பெயர்: ஏ.ஆர்.எம். [illegible]
வயது: 17
முகவரி: மெயின் வீதி, [illegible]
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, விளையாட்டு.

சிறுகதை

மரணத்தின் மடியில்..... ஒரு மனு!

-அம்தரவல்ல நிலாவாசன்-

"எக்ஸ்கியூஸ்மீ" என்று தன் முன்னால் வந்து நின்ற நர்சைப் பார்க்க புதிய லெட்ஜரில் மூழ்கியிருந்த காவ்யா தலையைத் தூக்கினாள். "யேஸ்.." டாக்டர் என்னும் கௌரவம் அவள் வார்த்தையில் அதிகாரம் வரைந்தது.

"உங்களைப் பார்க்க 'ஷில்பா'ன்னு ஒரு பொண்ணு வந்திருக்கா மேடம்."

"ஷில்பா..." காவ்யாவின் உதடுகள் ஒரு முறை உச்சரித்து பின்னர் முகமெல்லாம் புன்னகையாக "வரச் சொல்" என்றாள். அதோடு நிற்காமல் எழுந்து நின்று கொண்டாள்.

உடல் மெலிந்து போயிருந்ததை விளம்பரப் படுத்திக்கொள்வதைப்போல் ஒரு சம்பிரதாயப் புன்னகையுடன் வந்து நின்ற 'ஷில்பா'வை வியப்போடு பார்த்தாள் காவ்யா. அவள் விழிகள் கலங்க ஆரம்பித்தன.

"ஷில்பா, வா...வா உட்கார்." அவளையறியாமலேயே செயற்பட ஆரம்பித்தாள் காவ்யா.

தனது மென் பாதங்கள் 'வெல்வெட்' தரையை அழுத்தி விடக் கூடாது என்று பயப்படுவதைப் போல மெதுவாக நடந்து வந்து காவ்யா காட்டிய கதிரையில் அமர்ந்து மீண்டும் ஓர் இளம் சிரிப்பை வெளியிட்டாள் ஷில்பா.

காவ்யாவின் விழிகளில் நீர் படலமாய் மண்டியது. அதை ஷில்பா கவனித்து விடக்கூடாது என்று மறைத்த போதும் "ஏன் கண் கலங்குகிறாய்...?" என ஷில்பா கேள்வி நெய்தாள்.

"நோ..நோ...அது சும்மாதான்." காவ்யா சமாளித்தாள்.

"சும்மா கண்ணீர் வர நீ என்ன வெங்காயம் உரிக்கிற இடத்திலயா இருக்கிறே? காவ்யா என் 'ஃபேமிலி' காணப்போகிற இழப்ப நினைச்சு அழுறியா?"

"ஷில்பா நான் அழலேம்மா. உன் மனத் தைரியத்தக் கண்டு ஒரு ஆனந்தம்தான்."

"சந்தோஷம் தான் காவ்யா. என் சிதையிலும் எம் நட்பு பற்றி எரியாது."

திடீரென காவ்யா தன் விரல்களால் ஷில்பாவின் உதடுகளைச் சிறைப் படுத்தினாள். "அப்படியெல்லாம் பேசக்கூடாதும்மா, இப்போதுதான் நீ மனத்தைரியமா இருக்கணும்."

"உயிரே போகப் போகுது. உடலோடு இன்னும் உறவாடச் சொல்றியா? செய்றேன்மா செய்றேன். ஏன்னா மனம் தளர்ந்து சாகிறது ஒரு இன்ஜினியருக்கு இழுக்கு இல்லையா, ஆனா என் அஜய்...."

வார்த்தைகள் தடுக்க விக்கினாள் ஷில்பா. பின்னர் தன்னைச் சுதாகரித்துக்கொண்டு சொன்னாள். "என் அஜய் என்ன பாடுபடுவார் காவ்யா."

"பிரவீன் 'அக்ஸிடென்ட்'ல இறந்தப்போ நான் எவ்வளவு வேதனைப்பட்டேன் தெரியுமா? நானும் என் பிரவீனுடனே போயிருக்கணும்னு அடிக்கடி புலம்பிட்டிருந்தேன். ஆனா நான் இப்போ தைரியமாத்தானே இருக்கேன்.

"ஷில்பா, மரணம் வாழ்க்கையின் அங்கம்தான். நினைவுகளுக்கு அதனால எந்தப் பங்கமும் வந்திடாது.." என்று எதையோ சொல்ல வந்து முடிக்காமல் மனதுக்குள் பிரவீனின் நினைவுகள் நிறைய விசும்ப ஆரம்பித்தாள் காவ்யா.

"பார்த்தியா, நீ ஒரு டாக்டர். நீயே இப்படி உடைஞ்சு போனா இன்றைக்கோ நாளைக்கோ மரணத்த எதிர்பார்த்துக் கிட்டிருக்கிற எனக்கு...." பேச முடியாமல் கவலை அடக்க அது அழுகையாக வெடித்து விடுமோ என்னும் பயத்தில் மௌனமானாள் ஷில்பா.

கைப்பையில் இருந்த கைக்குட்டையால் கண்களை ஒற்றிக் கொண்ட காவ்யா, "நாங்க ரெண்டு பேருமே எங்கள ஏமாத்திக் கிறோம் ஷில்பா. என்னதான் பேசினாலும் எங்களால எதையும் தாங்க முடியிறதில்ல. ஆனா நான் என் பிரவீனின் நினைவுக்காக என் வாழ்க்கைய அர்ப்பணிச்சு அவர் இறந்தாலும் என்னோடு வாழ்ந்திட்டிருக்கிறதாத்தான் நான் நினைக்கிறேன். உன் நினைவுக்காக அஜய் தன் வாழ்க்கைய நிச்சயம் அர்ப்பணிப்பாரு....."

"அது முட்டாள்தனமான வாழ்க்க காவ்யா. இறந்தவங்க இறந்திடுறாங்க. அவங்க எழுந்து வரப் போறதில்ல. ஆனா வாழ்றவங்க வாழ்க்கய மோசமாக்கிக்க கூடாது."

"நீ என்ன பேசுற ஷில்பா?"

"இறந்த ஆத்மாக்களுக்கு விடிவு வேணும்னா அவங்க சார்ந்தவங்க சந்தோஷமா வாழணும் காவ்யா."

"ஷில்பா, ஏன் இப்படி மனசப் போட்டுக் குழப்புகிறாய். அஜய்க்கு திருமணம் செய்து வைக்கப் போகிறாயா?"

"என் அஜய்க்கு நான் எப்படிம்மா திருமணம் செய்து வைக்க முடியும்? நான் சாகிற வரைக்கும் பொட்டோடு வாழ்ந்திட்டிருக்கிற பத்தினி காவ்யா."

"அப்போ உன் பேச்சில என்ன அர்த்தம் ஷில்பா?"

"அர்த்தம் ஆயிரம் இருக்கு காவ்யா. அதெல்லாம் அனர்த்தமாயிடுமோன்னுதான் நான் கவலைப்படுகிறேன்."

"அர்த்தத்தையும் அனர்த்தத்தையும் பேச என்ன அவசியம் வந்தது? சும்மா மனசப் போட்டு சிதைச்சுக்காதே. உள்ளம் தெம்பா, சந்தோஷமா இருக்கணும். சரி, ஊசி போட்டுக்கொள்கிறாயா?"

"எனக்கு மரணம் நிச்சயிக்கப்பட்டாச்சு காவ்யா. புற்று நோயின் மடியில என் ஆயுசு முடியப் போகுது. அப்புறம் இந்த உலகத்தைச் சுற்றி ஒரு தேவதையா உலா வரப்போறேன். இந்த நிலையில ஊசிக்கு என்னம்மா அவசியம்?"

சொன்ன ஷில்பா தொண்டையில் சொர சொரவென நழுவிய இருமலை அடக்கிக் கொள்ள பெரிதும் சிரமப்பட்டாள். அந்தச் சிரமம் நோயின் அகோரத்தை விளம்பரப் படுத்த இருமும்போது சிதறிய இரத்தத் துளிகள் கைக்குட்டையெங்கும் சில்லரைத் தனமாய்ச் சிதறியது.

"ஷில்பா.. ஷில்பா..." என்று பதற்றத்தோடு அவளை அணைத்துக் கொண்ட காவ்யாவிடம் சொன்னாள் ஷில்பா,

"ஐ யாம் ஆல் ரைட் காவ்யா.. கொஞ்சம் குடிக்கத் தண்ணி தா. உன்னோடு நிறையக் கதைக்கணும். என் கடைசி ஆசைய சொல்லணும். உன் ரூமுக்குப் போய் பேசுவோமா...?"

"நீ எதையும் பேசலாம். ஆனா 'ரெஸ்ட்' உனக்கு அவசியம். வா என் ரூமுக்குப் போகலாம். கொஞ்சம் படுத்து ஆசுவாசப் படுத்திக்க. அப்புறம் சொல்லு."

சொன்ன காவ்யா, ஷில்பாவை கைத்தாங் கலாய்ப் பிடித்துக்கொண்டு தனது ரூமை நோக்கி நடந்தாள். ஷில்பா மூச்சிரைப்பதில் இருந்து அவளின் இறுதிக் கட்டம் நெருங்கி விட்டதோ.." என்று காவ்யாவுக்கு சந்தேகமாக இருந்தது. அஜய்க்கு 'ஃபோன்' பண்ணி விஷயத்தைச் சொல்லலாமா..? என மனதுக்குள் ஒரு கேள்வியை நுழைத்து பதிலைத் தேடினாள்.

ஷில்பாவைக் கட்டிலில் கிடத்திய காவ்யா காற்றாடியைச் சுழல விட்டாள். ஜன்னல்களின் திரையை விலக்கி சுத்தமான காற்றைச் சுவாசிக்கச் செய்தாள். ஷில்பாவின் முகத்தில் அரும்பியிருந்த வியர்வையை தனது கைக்குட்டையால் ஒற்றியெடுத்துக்கொண்டே சொன்னாள்,

"சொல்லு ஷில்பா, நீ மரணத்தை மதிப்போடு அணுகிக்கிட்டிருக்கிற பொண்ணு. சாவுகூட வாழ்க்கையின் அங்கம்னு நினைக்கிறியே அதுதான் மிகப் பெரிய தைரியம். நகர்கிற ஒவ்வொரு வினாடியும் நான் உன்ன விட்டு பிரிஞ்சுக்கிட்டே வர்ரேன். ரெண்டு பேரும் ஒருயிரா வளர்ந்தோம். ஒரே எண்ணத்தோட காதலிச்சோம். தோல்வியில்லாம கல்யாணம் பண்ணிக் கிட்டோம். ஆனா விதிக்குத்தான் அதிகமா வேலை இருந்திருக்கு.

"என் பிரவீன் அக்ஸிடென்ட் ரூபத்தில வந்த எமனோடு போய்விட்டார். உன்ன புற்று நோய் புதைச்சிடணும்னு நாள் கேட்குது. உன் உயிருக்கு உலை வைக்க புற்று நோயத்தான் இறைவன் பொருத்தமாக்கி இருக்கான். நான் என்னம்மா செய்வேன்? உன்னைக் காப்பாற்ற முடியாத நானெல்லாம் என்ன ஃபிரெண்ட்மா..? என்ன டாக்டர்மா?"

அணை கடந்த வெள்ளமாய் பெருக்கெடுத்து வந்த கண்ணீரை அடக்கத் தெரியாமல் விக்கி விக்கி அழ ஆரம்பித்தாள் காவ்யா.

அத்தனை வேதனைகளும் ஒன்று சேர்ந்து நெஞ்சறையில் வந்து நெருடியதைப் போல பெரிதாக ஒரு பெருமூச்சு விட்டாள் ஷில்பா. அவள் செழிப்பான முகம் அவள் உடல் மண்ணறை போக வேண்டிய அவசரத்தை உச்சரிக்குமாப்போல் வாடிக் கிடந்தது.

ஷில்பா ஒருமுறை காவ்யாவை விழி நிறைய நோக்கினாள். இருவரும் ஒன்றாக கல்லூரி போன காலங்கள், ஒன்றாக வாசிட்டி போன நினைவுகள், அங்கே விளையாட்டாகச் செய்து விபரீதமான எத்தனையோ சம்பவங்கள், அஜய்யும் பிரவீனும் இவர்களை வீழ்த்த வேண்டும் என்றே குழைந்த நாட்கள், அப்புறம் காதலர்களாய் பறந்து திரிந்த நாட்கள். எல்லாவற்றையும்விட குடும்பமோத லின்றி, எதிர்ப்புக்களின்றி ஷில்பா-அஜய் என்றும் காவ்யா-பிரவீன் என்றும் ஜோடி சேர்ந்த நாட்கள்...

"ஹூம்" என பெருமூச்சு விட்டாள் ஷில்பா. கண்களில் நிறைந்த கண்ணீரினூடே தெரிந்த காவ்யாவின் உருவம் தன் பிரியத்துக் குரிய பிரவீனின் இழப்பை நினைத்து கண்ணீரை அடக்க முடியாமல் கைக்குட்டை யால் அடிக்கடி ஒற்றிக்கொண்டே தன் தலையை வருடிக்கொண்டிருந்த காவ்யாவின் கையை எடுத்து தன் கைக்குள் சிறைப்படுத்திக் கொண்டே சொன்னாள் ஷில்பா,

"காவ்யா இனிமேல் உனக்கொரு துணை வேணும்மா?"

"என்ன, புரியாமத்தான் பேசுறியா? என்னை விட்டு பிரியப் போகிற இந்தக் காலத்தில இப்படி ஒரு பெரிய ஆசைய நிறைவேற்றணும்னு என்ன நீ கேட்டுக் கொள்ளவே கூடாது ஷில்பா?"

காவ்யாவின் கண்கள் ஊற்றை நிறுத்த மறுத்துக்கொண்டிருக்க அது பிரவீனின் மீதான தீராத காதல் என்பதை உணரவே செய்தாள் ஷில்பா.

தன் மனதுக்குள் தீர்மானித்திருந்த தீர்க்கமான முடிவோடு பேசினாள் ஷில்பா.

"வாழ்க்கைக்கு இப்படி அர்த்தம் கற்பிப்பது முட்டாள்தனம் காவ்யா. இறந்த வங்க முற்றாக எங்கள விட்டுப் பிரிஞ்சிடு றாங்க. அவங்க நினைவுகளுக்காக எங்க வாழ்க்கைய தியாகம் பண்றது என்ன நியாயம்? படிச்ச நாங்களே இப்படி முட்டாள்தனமா சித்திக்கலாமா காவ்யா?"

பயணப்பட ஆயத்தமாகும் மோட்டார் சைக்கிளில் ஆரம்ப இயக்கம் போல பேசிவிட்டு பெரிதாக மூச்சு வாங்கினாள் ஷில்பா. அவள் விழிகளில் தெரிகின்ற எதிர்பார்ப்பு காவ்யாவை சிந்திக்கத் தூண்டியது.

"பிரவீன் இறந்து மொத்தமா இரண்டு வருஷம் கழிஞ்சாச்சு. பிரிவும் வாழ்க்கையில ஒரு அங்கம்னு எனக்கிப்போ புரியுது ஷில்பா."

உப்பிப்போன ஷில்பாவின் முகத்தில் வியர்வை அதிகமாக ஊற்றெடுக்கத் தொடங்க...அவள் உடல் வெடவெடப் பதையும் மூச்சின் வேகம் அதிகரிப்ப தையும் உணர்ந்து கொண்ட காவ்யா, "ஷில்பா...ஷில்பா..." என பதற்றமடைய ஆரம்பித்தாள்.

"ஷில்பா.. ஷில்பா.. உனக்கு என்னம்மா செய்யுது..? அஜய்க்கு ஒரு ஃபோன் பண்ணவா?"

"எனக்கு எதுவுமே ஆயிடாது காவ்யா. நெஞ்சில லேசாப் பிடிக்குது. குரல்வள இறுகுகிற மாதிரி ஒரு பிரமை. வா..வாய்ல இருந்து வார்த்தயெல்லாம் எடுபட்டுப்போன மாதிரி ஒரு.....ஒரு....

"அத விடு காவ்யா, எனக்கு நீ செய்...யக்கூடிய சடங்குன்னு சொன்னேனே, செய்...வியா?"

திக்கலாய் திணறலாய் பேசிய ஷில்பாவின் விழிகளில் ஏதோ ஒரு ஆசை கேள்வியாய் நின்றது.

நிலைமையை உணர்ந்து கொண்ட காவ்யா ஷில்பாவின் இறுதிக் கட்டத்தை உணர்ந்தாள். அவள் என்ன சொல்லப் போகிறாள் எனும் எண்ணம் அவளை வியாபித்து அது தன்னால் செய்யக் கூடியதாக இருக்குமா என்று சிந்தித்து....

"சொல்லும்மா...நீ எதை வேண்டு மானாலும் சொல்லு, ஷில்பா. என் உயிரே வேணும்னாலும் தாறேன்." என தோழியின் பிரிவுக்கு காலம் நெருங்கி விட்டதை பொறுக்க முடியாமல் கதற ஆரம்பித்தாள் காவ்யா.

உடலின் வேதனையை அப்படியே இறுகப் பிடித்துக்கொண்டு வரும் ஒவ்வொரு சுவாசிப்பின் மூலமும் தன் வாழ்க்கையை மரணத்தின் பிடியில் அடகு வைத்துக் கொண்டிருந்த ஷில்பா, காவ்யாவின் பதிலால் ஈர்க்கவே செய்தாள். அந்த தீராத வேதனையிலும் அவளது மென் அதரங்கள் மெதுவாக விரிந்து புன்னகை சிந்த...

"காவ்யா..." என்றாள் இழுப்பினூடே....

"என்... என்னம்மா சொல். சொல்லு..." காவ்யாவின் கண்கள் உப்பு நீரை பிரிவு தோய்த்து ஊற்றிக் கொண்டிருந்தது.

ஷில்பா தனது கடைசி ஆசையை மிகவும் கஷ்டத்தோடு சொல்ல ஆரம்பித்தாள். "என்...என் அஜய்..."

"அவரைப் பற்றிக் கவலைப் படாதேம்மா. அவருக்கு நான் ஃபோன் பண்றேன்..." என்று எழுந்து போகப் போன காவ்யாவை தடுத்து நிறுத்தினாள் ஷில்பா. இறுதி வார்த்தைகள் அவள் உதட்டருகில் வந்து நின்றன.

"காவ்...யா என்...என் அஜய்க்கு நீ மனை...வியாகணும் நீங்க ரெண்டு பேரும் சந்தோஷமா.." சொல்லி முடிக்க முடியாமல் வாய் குளறிய ஷில்பாவைப் பார்த்து "நோ..." என்று கத்த முயன்று அவள் விழிகள் அசைவின்றி இருப்பதைப் பார்த்து "ஷில்பா..." என அலற ஆரம்பித்தாள் காவ்யா. உணர்வையும் உயிரையும் இழந்த ஷில்பாவின் விழிகளை மூடி விடும்போது இந்த உலகமே இடிந்து விடுவதுபோல் இருந்தது அவளுக்கு.

ஷில்பாவின் மரண ஊர்வலத்தில் இரு மனங்களின் மண ஊர்வலமும் சேர்ந்தே இருந்தது.

உன்னிடத்தில் கண்டேன்!

கல்குடா-க.பரமானந்தராஜா

"என் பக்கத்தில் வராத.. வராத... வந்தா.. இதால வீசிடுவன்..."

கோபத்தோடும் அழுகையோடும் பாத்திரம் ஒன்றை வீச ஆயத்தமாக இருக்கும் கிருத்திகாவை புன்னகை மாறாத முகத்துடன் பார்த்தபடியே முன்னேறினான் ராஜன்.

அவள் பின்னே பின்னே சென்று சுவரில் முட்டிக்கொண்டாள்.

அந்த விநாடியே கையிலிருந்த பாத்திரமும் ராஜனின் நெற்றியை பதம் பார்த்தது. அவன் நெற்றியில் இருந்து குருதி கொட்டிக் கொண்டி ருந்தது. அப்போதும் அதே புன்னகையுடன் அவளை நெருங்கினான் ராஜன். தன்னை நோக்கி வரும் அவனை இப்போது ஆச்சரியத்துடனும், சிந்தனையுடனும் தலையை மேலும் கீழுமாக ஆட்டி ஆட்டிப் பார்த்தாள் அவள்.

"என்ன..கிருத்திகா அப்படிப் பார்க்கிறாய்..? ஆ...எனக்கு உன்மேல கோபம் இல்ல...உன்னை நான் அடிக்க மாட்டன்..உன்னோட கொஞ்சம் கதைக்க வேணும். அதுதான் வந்தனான்...."

"ஏன் நீ என்னை அடிக்கல்ல...?உன்ர நெற்றியால இரத்தம் வருகுதே.." குழந்தையாய் கேட்கும் அவளை உற்றுப் பார்க்கிறான் அவன்.

"இரத்தம் வந்தால் அடிக்க வேணுமா...? இஞ்ச பாரு...நீ நல்ல பிள்ள...எனக்கு தெரியும்... நான் சொன்னால் நீ எல்லாம் கேட்பாய்...அதனால தான் நான் உனக்கு அடிக்கல்ல..:. ஒருகணம் விரலை கன்னத்தில் வைத்து கண்ணை மூடி சிந்தித்தாள்.

"ஆ...நீ பொய் சொல்ற... எனக்குத் தெரியும்...இப்படித்தான் சித்தி என்னோட கதைச்சி அடிக்கிறவ... அப்பாவும் அடிக்கிறவர்.. அவன் கோபு பொல்லாதவன்... சங்கிலியால பூட்டுற நேரம் இப்படித்தான் சொல்லுறவன்..." அவள் முகத்தில் மீண்டும் பயம்.

"இல்ல கிருத்திகா...சத்தியமா நான் உன்னை அடிக்கல்ல. உன்னை எங்கட வீட்டுக்கு அழைத்துப் போகப்போறன்..." அவன் இப்படிச் சொன்னதும். அவளது முகத்தில் மகிழ்ச்சி அலைகள் ஒன்றன் பின் ஒன்றாக வந்து போயின.

உண்மையாகவா..? ஆ....அப்படியெண்டால் வா... சித்தி வாறத்துக்கு முன்னாலேயே போயிடலாம்..சித்தி கண்டால் ரூம்ல போட்டு பூட்டிடுவா.."

அவன் மீண்டும் சிரித்தான்.

"இல்ல கிருத்திகா...உன்ர அப்பா சொல்லித்தான் உன்னை எங்கட வீட்டுக்கு அழைத்துப் போகப் போறன்..." அவன் இதைச் சொல்லிவிட்டு, அவளது தந்தை சொல்லியதை ஒரு கணம் நினைத்துப் பார்க்கிறான்.

"ராஜன்...!கிருத்திகா இப்படி ஆனதுக்கு முழுக்க முழுக்க நான்தான் காரணம்... அவளிட அம்மா செத்த பிறகு நான் இவள ரெண்டாந் தாரமாக கல்யாணம் பண்ணிக்கொண்டதுதான் எல்லாத்துக்குமே காரணம்... அவளிட அம்மா கிருத்திகாவில உயிரையே வைச்சிருந்தா... ஆனா..நான் ரெண்டாந்தாரமாக்கிக்கொண்ட விஜயா எந்த நேரமும் கிருத்திகாவ பைத்தியம்.. பைத்தியமெண்டு அடிப்பா...இதால.. என்ர மகள் இண்டைக்கு ஒரு மன நோயாளியாகவே ஆயிட்டாள்...நான் லட்சுமிக்கு.. அதுதான்... அவளிட அம்மாவுக்கு துரோகம் பண்ணிட்டன்... அவள் பெத்த பிள்ளைய பைத்தியம் ஆக்கிட்டன்..." குலுங்கி குலுங்கி அழும் அவரை தேற்ற சக்தியற்று சிலையாய் இருந்தான் ராஜன்.

"கவலைப்படாதீங்கள் அங்கிள்...நான் கிருத்திகாவ வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போறன்...புதுச் சூழல் அவள ஒரு வேளை மாற்றலாம்..."

"ராஜன்... அவள் யாருக்கும் அடங்க மாட்டாள்..உனக்கு வீண் சிரமம்.."

"இதில என்ன சிரமம் அங்கிள்...? எப்படியாவது கிருத்திகா மாறிடுவா என்று நம்புறன்..." சிந்தித்துக்கொண்டிருந்தவனை தட்டினாள் கிருத்திகா.

"என்ன நீ...என்னை உங்கட வீட்டுக்கு கொண்டு போறன் என்று சொல்லிப்போட்டு யோசிக்கிற...?"

"ச்சீ..நான் ஒண்டும் யோசிக்கல்ல...சரிசரி வெளிக்கிடு போவம்..."

வேலைக்காரியின் துணையுடன் பயணத்திற்கு தயாரானாள் கிருத்திகா. பயணப்பையுடன் அவன் முன்னால் நடக்க, இவள் தொடர்ந்தாள்.

ராஜனின் வீட்டில் அவளுக்கு எந்தக் குறையும் இருக்கவில்லை. அவளை வேறாக அடைத்து வைக்கவில்லை. வேறாக உணவு கொடுக்கவில்லை. சமமாகவே அவள் மதிக்கப்பட்டாள். நடத்தப்பட்டாள்.

ஆரம்பத்தில் பயம் அவளிடம் இருந்தாலும்; பின்பு புதுத்தெம்பு கொண்டாள். அவள் விரும்பியவை அவளுக்குக் கிடைத்தன. காலப் போக்கில் அவளது செயல்களில் மாற்றம் தென்படத் தொடங்கியது. தனியாக தன் கருமங்களைச் செய்யத் தொடங்கினாள் கிருத்திகா.

குழந்தைத்தனம் கொஞ்சம் கொஞ்சமாக மாற தன் நிலையை உணர ஆரம்பித்தாள். இப்போது ராஜனைக் கண்டால் பழைய மாதிரி கதைப்பதற்கு தயக்கமாக இருந்தது அவளுக்கு. தனது வாழ்க்கையில் வசந்தம் வழி விட்டதை அவள் புரிந்து கொண்டாள்.

கிருத்திகாவின் மாற்றம் கண்டு ராஜன் மகிழ்ச்சியடைந்தான். அவனது முயற்சியால் கிருத்திகா இருந்தளவிற்கு மாற்றம் பெற்றுள்ளதை நினைக்க நினைக்க அவனுக்கு பெருமையாக இருந்தது.

"கிருத்திகா...இனி நீங்க உங்கட வீட்டுக்குப் போகலாம்!..." ராஜன் அப்படிச் சொன்னதும், சிலையாகிப் போய் அவனையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தாள் அவள்.

"நேற்று உங்கட அப்பா டெலிஃபோன்ல விசாரித்தார்.... நீங்க சுகமாயிட்டத கேட்டு சந்தோஷப்பட்டார்.... உடனே உங்கள அழைத்துக் கொண்டு வரச்சொல்லிச் சொன்னார்...." அவன் சொல்லிக் கொண்டிருந்தான்.

"ராஜன் பிளீஸ்... என்னை.. என்னை... வீட்டுக்கு அனுப்பிடாதீங்க..நான்.. நான்.. அன்பக் கண்டதே உங்களிட்டதான்...என்மேல பாசம் காட்டுற ஒரேயொருவர் நீங்கதான்... பிளீஸ்... என்னை...என்னை....வாழ வையுங்க ராஜன்..."

அவன் காலில் அழுகையுடன் விழுந்த அவளை தூக்கி நிறுத்தினான் ராஜன்.

"கிருத்திகா...நிறைவேறாத எண்ணங்கள மனசில வளர்க்கக்கூடாதம்மா...நீ பணக்கார வீட்டுப் பிள்ள...நா..நான் சாதாரண ஓர் ஆசிரியர்..." ராஜன் குழம்பிப் போனான்.

"ஏன்...நான்..நான் பைத்தியம் என்றுதானே வெறுக்கிறீங்க...? நான் பைத்தியம் இல்ல... சத்தியமா இல்ல ராஜன்... சித்தி செய்த கொடுமைகளாலதான் நான் இந்த நிலைக்கு ஆளாகிப் போனன்...எனக்கு அந்த வீட்டில எந்தச் சந்தோஷமுமே கிடையாது...அம்மா செத்த பிறகு...உண்மையான அன்பை நான் இஞ்சதான் பார்க்கிறன்...என்னை ஒதுக்கிடாதீங்க ராஜன்..."

சிறு குழந்தையாய் கரங்களால் தன் முகத்தை மூடி அழுத அவளை ராஜன் தன் மார்போடு அணைத்துக்கொண்டான். இது தற்காலிக அணைப்பல்ல...நிரந்தர அரவணைப்பு.

சந்தோஷம் பூத்த வானம் கொத்தாய் முகில்களைத் திரட்டிக் கொண்டு சிரித்தது. "ஹேமா"

"என்ன சிவா?"

"இண்டைக்கு நீ என்னமாதிரி அழகாய் இருக்கிறாய்!"

"போங்கோ நீங்கள் பொய் சொல்லுகிறீங்கள்."

"இல்லை ஹேமா உண்மையிலேயே அப்படித்தான்."

இரண்டு துருவங்கள் இங்கே குதூகலித்துக்கொண்டன. நெருப்பும் நீரும் கைகுலுக்கிக் கொண்டன. சிவாவின் மடியில் ஹேமா தலை சரித்துப் படுத்திருந்தாள்.

எங்கும் மங்களம் பொங்குக

ஹரீரா அனஸ்

அவள் ஒரு பட்டதாரி ஆசிரியை. சிவா படிப்பிக்கும் பாடசாலைக்கு மாற்றலாகி வந்திருந்தாள். அந்தப் பாடசாலையில் எல்லோரையும்விட அவளுக்கு சிவாவைத்தான் அதிகமாகப் பிடித்திருந்தது. அவனது நேர்த்தியான குணமும் அதற்கேற்ப அவன் அணியும் ஆடைகளும் களங்கமில்லாத அந்தப் புன் சிரிப்பும் ஹேமாவின் உள்ளத்தில் ஆழமாய்ப் பதிந்துவிட்ட காரணிகள்.

காதல் என்பது கவர்ச்சிக்காய் வருவது.

காதல் என்பது உணர்வுகளுக்காய் வருவது.

காதல் என்பது அழகுக்காய் அல்லது ஏதோவொன்றுக்காய் வருவது.

சிவாவும் ஹேமாவும் வித்தியாச மானவர்கள். உள்ளங்கள் புரிந்து இணைந்து போன கொள்கைப் பிடிப்புள்ளவர்கள்.

▫▫▫

"சிவா?"

"என்ன ஹேமா?"

"சத்தியமா எங்கட அன்பைப்பற்றி என்ன நினைக்கிறாய்?"

"சிவா இதிலை நினைக்கிறதுக்கு என்னங்க இருக்கு?"

"இல்லை.வெளிப்படையா இண்டைவரை இதைப்பத்தி நான் எதுவுமே கேட்டதில்லை."

"என்ன சொல்லுறீங்கள் சிவா? எனக்கு ஒண்டுமே விளங்கேல்லையே?"

"இல்லை ஹேமா நாங்கள் இரண்டு பேரும் காதலிக்கிறம். ஆனா எங்கட காதல்-அல்லது கலியாணம் நிறைவேறுமா என்று நினைக்கேக்கத்தான் எனக்கென்னமோ கவலையாய் இருக்கு."

"இதுக்கேன் கவலைப்பட வேணும்? சமயோசிதமா யோசிச்சா எத்தனையோ நல்ல முடிவுகளை எடுக்க முடியுமே?"

"என்ன ஹேமா?"

"ஓம் சிவா. இப்ப நீங்க என்ன சொல்ல வாறீங்க என்ற விசயம் எனக்கு நல்லா விளங்குது. நான் சிங்களம்.... நீங்க தமிழ்... அதுவும் இரண்டும் இரண்டு பக்கம். எங்கடை குடும்பமும் ஊறிப்போன சிங்களம். உங்கடை குடும்பமும் ஊறிப்போன தமிழ் அப்பிடித்தானே?"

▫▫▫

சிவபிரகாசத்தார் மகன் சிவாவின் கடிதத்தைக் கண்டு வெகுண்டெழுந்தார். "அடி பாக்கியம் இங்கை கொஞ்சம் வாவன். உன்ரை மோன் எழுதியிருக்கிற கடிதத்தைக் கொஞ்சம் பார். உவனைப் படிப்பிக்க அனுப்பினதோ இல்லாட்டி கலியாணத்துக்கு பொண் பார்க்க அனுப்பினதோ...? யாரோ ஹேமாவோ கூமாவோவாம். இரண்டு பேருமே விரும்பிட்டினமாம். அவளும் சிங்களத்திலை உயர்ந்த சாதியாம். எங்கடை சாதிக்கு கொஞ்சமும் குறைவில்லையாம். விவரத்தைப் பார். நேரலே வந்து கதைக்கிறானாம். அடிசக்கை எண்டானாம். அதுதான் யானைக்கு முன்னாலை மணி ஓசையாம் கடிதம் போட்டிருக்கிறார் பொடிப்புள்ளை. இனி என்ன உனக்கு கிரிபத்தும், பயறுபோட்டு பணியாரம் செய்யவும் மருமகன் வாறவெண்டு சொல்லு."

சிவப்பிரகாசத்தார் சொன்ன பேச்சைக் கேட்ட பாக்கியத்திற்கு தான் நிண்டு கொண்டிருக்கும் நிலமே சற்றுவதாய் உணர்ந்தாள்.

"இண்டைக்கு நாடு இருக்கிற நிலமைக் குள்ளை உவன் செய்துகொண்ட வேலையை என்னவெண்டு நான் சொல்லுவன்..." என்று சொல்லிக்கொண்டு சேலைத் தலைப்பால் வாயைப் பொத்தியபடி அழுது வடித்தாள் பாக்கியம்.

"பாக்கியம் இப்ப என்ன செத்த வீடே நடந்து போயிட்டுதெண்டு அழுது வடிக்கிறாய்... எல்லாத்துக்கும் அவன் பொடியன் சிவா இப்ப லீவிலை வருவான் தானே! வந்தாப் பிறகு விசயத்தை முதலிலை விளங்கிக்கொள்ளுவமே. அவனும் படிச்சவன். அதோடை பட்டதாரி."

"என்னதான் பட்டதாரி எண்டாலும் அவனை உப்பிடி எல்லாம் யோசிக்கவே விடக்கூடாதப்பா. பிறகு உவன்கள் இப்பிடி எண்டு ஒரு வார்த்தை கேள்விப்பட்டாப் போதும். இந்த யாழ்ப்பாணத்திலை எங்கடை குடும்பம் இருந்ததெண்டு கூட அடையாளம் தெரியாமல் ஆக்கிப் போடுவான்கள்."

"பாக்கியம் நீ பயப்படுறதும் சரிதான். ஆனா எல்லாத்தையும் கொஞ்சம் ஆற அமைதியாய்ப் பொறுத்துத்தான் பாப்பமே?"

▫▫▫

பென்னம்பெரிய மலை வேம்பு தனது வேர்களைப் பரத்தியபடி ஆசுவாசமாய் நிமிர்ந்து நின்றது. எங்கள் தேசத்தின் வற்றாத செழுமை நதி மகாவலி வளைந்து நெளிந்து ஓடும் அந்த குளுமையான ஆற்றோரம். தூரத்தே ஒரு பட்டுப்போன மங்குஸ் மரம். இரண்டு கிளைகளோடு சோர்ந்து போய் நிற்க அதன் ஒரு கிளையில் எங்கிருந்தோ பறந்து வந்த மணிப்புறா சோடி ஒன்று அமர்ந்து கொண்டு மூக்கோடு மூக்குரசி அன்புப் பரிமாற்றம் செய்து கொண்டன.

ஆற்றை நோக்கிப் பாய்ந்த மலை வேம்பின் வேரில் சிவா அமர்ந்திருக்க அவனின் மடியில் பாசமாய் ஹேமா.

"ஹேமா?"

"ம்....."

"எவ்வளவு பசுமையான சூழல்."

"........"

"என்ன ஹேமா மௌனமாயிருக்கிறாய்... சொல்லு. வீட்டில் ஏதாவது சொன்னார்களா?"

"இல்லை சிவா, எங்கடை வீட்டிலை எங்கடை இரண்டு பேரின்டை விசயமா நீண்ட நேரம் விளங்கப்படுத்தி பல வாக்குவாதங்கள் செய்த பின்னர்தான் முதலிலை கொள்கையளவிலை ஏற்றுக் கொண்டாங்களே தவிர செயல்படுத்த வெல்லாம் முன்னுக்கு வரவில்லை. அதுக்குப்

பிறகும் நான் அப்பா-அம்மாவை வைச்சு பலமுறையிலை பேசிப் பார்த்தன். அவை சொன்ன முதலாவது விஷயம் நாட்டுப் பிரச்சனை. இப்படி நாட்டிலை எங்கள் இரண்டு இனத்திற்கும் சண்டை நடக்கும் போது எப்பிடி ஒரு யாழ்ப்பாணத்தாரையும்-தெவுந்துறையாரையும் ஒண்டு சேர்க்கிறது? இதுதான் பெரிய பிரச்சனை. அப்பிடி உங்கடை வீட்டிலையும் சம்மதிக்க வைக்க வேணும். எங்கட வீட்டிலையும் பரிபூரணமா சம்மதிக்க வைக்க வேணும். அதுக்குப் பிறகு கலியாணத்தை எல்லோருக்கும் முன்மாதிரியா நடத்த வேணும். அப்பத்தான் மற்ற மக்களுக்கும் ஒரு முன் மாதிரியாயும், ஒரு படிப்பினையாயும் அமையும். இனக்குரோதம் என்ற வேண்டாத செயலுக்கு நாங்க ஒரு முன்மாதிரி காட்டுவமே சிவா?"

அந்தப் புறாக்கள் இரண்டும் குதூகலமாய் பறந்து போயின. ஆற்றில் நீரை எதிர்த்துக்கொண்டு ஒரு தண்ணீர்ப் பாம்பு வளைந்து நெளிந்து போய் கொண்டிருந்தது. ஹேமா பயந்து போனாள்.

"ஏய் என்ன..ஹேமா உனக்கு தண்ணீர்ப் பாம்புக்கு பயமா? ச்சீ... அது ஒண்டும் செய்யாது..." சிவாவின் இறுக்கமான பிடியில் ஹேமா தன்னை மறந்து போனாள். அவனின் தலை தடவி ஆசையாய் ஒரு முத்தம் கொடுத்தாள். இனிமை...இனிமை...

▫▫▫

அந்த விஷ்ணு ஆலயம் அன்றைக்கென்று புதுப் பொலிவாய் பொலிந்து கொண்டிருந்தது. மாவிலைத் தோரணங்களும், வாழைக் குலையுடனான வரவேற்புக் கால்களும், "வணக்கமும்-ஆசிர்வாதமும்" என்பதாய் நிறைவுடன் காணப்பட்டது. இரண்டு சமூகங்களும் இணைந்து போய் விட்டதான பூரிப்பு. மனதுக்கு எல்லோருக்கும் மகிழ்வு. "ஆ... இங்காலை வாங்கோ..." சிவப்பிரகாசத்தாரும்-விஜயதுங்காவும், பாக்கியமும்-ரேணுகாவதியும் சம்பந்திமார்கள் இணைந்து நின்று வரவேற்றார்கள். அவர்களின் கண்கள் நிறைய ஆனந்தக் கண்ணீர். இரண்டு குடும்பங்களுமே படிச்ச குடும்பம். பல விடயங்களையும் மனதில் போட்டு அலசி-இரண்டு குடும்பத்தாருமே அடிக்கடி சந்தித்துப் பேசி முடிவெடுத்த முடிவு. அந்தப் பட்டதாரிக் காதலர்கள் தங்களது இலட்சியத்தைப் பூர்த்தி செய்த மகிழ்வோடு மணவறையில் அமர்ந்திருக்கிறார்கள்.

புரோகிதர்களும்-ஹாமத்துறுமார்களும் இணைந்தே 'பண'யும் வேதமும் ஓதினார்கள். பூறால் போட்ட வெற்றுடலும், மஞ்சள் சீருவை சுற்றிய உடல்களும் பார்க்கும்போது என்னவாய் மனது புளகாங்கிதம் அடைந்து போனது.

பொட்டு வைத்த முகங்களும், விபூதி பூச்சுடனான நெற்றிகளும் மனதுக்கு இதமளித்தன.

இந்தப் புரிந்துணர்வைத்தானே எல்லோரும் எதிர்பார்ப்பது? இந்த நேசத்தைத் தானே பகிர்ந்து கொள்ளச் செய்வது?

"இனங்கள் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாம்" ஒன்றுபட்டால்.....

அதோ...மணமகன் சிவா-மணமகள் கழுத்தில் தாலி கட்டிக்கொள்கிறான். கெட்டி மேளம் இன்னும் முழங்குகின்றது. அதோ மங்கள பேரிகை. அது ஒரு இணைவுப் பாலம். எங்கள் தேசம் பூராகவும் அது முழங்கட்டும். நாம் அனைவரும் குதூகலிப்பதற்காக.......

இனி என்ன தினமுரசு சார்பாய் மணமக்களை கொத்துமலர் தூவி வாழ்த்துவோமே. எங்கும் மங்களம் பொங்குக....!

(சுபம்)

வானம் மிக அருகில்...

அஸ்வதி

கலியாணத்துக்கு இன்னும் இரண்டு வாரங்கள் தான் இருந்தது. காரியங்கள் யாவும் தடல்புடலாக நடந்துகொண்டிருந்தன. விடுபட்டுப்போன நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் அபிராமி அழைப்பு எழுதிக்கொண்டிருந்தாள்.

ஏற்கனவே அழகாயிருந்த அபிராமியின் குழி விழும் கன்னத்தில் கலியாணக் களை மேலும் அழகை அப்பியிருந்தது. நெற்றியில் முடி அடிக்கடி விழுந்து கொண்டிருந்தது. மொத்தத்தில், அவள் எப்போதும் போல் இல்லை. ஏதோ ஒரு இனம் புரியாத மாற்றம்.

"அண்ணா உன்ரை 'பிரண்ட்ஸ்' எல்லாருக்கும் குடுத்தியோ? யோசிச்சுப் பார் ஆரும் விடுபட்டிருப்பினம்" அபி கதைக்கும் விதத்திலகூட சிறிது காலமாக ஒரு மாற்றம். கடைசிச் சொற்கள் கொஞ்சம் இழுபடும். அழகாகத்தான் இருந்தது.

"ம்ம்..எல்லாருக்கும் குடுத்தாச்சு."

"சரியா யோசிச்சுப்பார் அண்ணா."

"பீயோன் தொடக்கம் டிரெக்டர் வரைக்கும் எல்லாருக்கும் குடுத்தாச்சு. அம்மாவும் அப்பாவும் எப்ப வாறதாகக் கடிதம் போட்டிருக்கினம்?"

தயாவின் கேள்விக்குப் பதில் சொல்ல விடாது தொலைபேசி அவளைக் கூப்பிட்டது.

"ஹலோ."

....

"ஆர் அக்காவே? எப்ப வாறியள்?"

....

"அத்தான் வரமாட்டாரே.... ஏன் லீவில்லையே?"

....

"அப்ப சுதனும் தாட்ஷாவும் உன்னோடை வருவினமே?"

....

"அது போதும். அத்தான் வரா விட்டாலும் பரவாயில்லை."

வீட்டில் வெட்டுப்போர் குத்துப்போர் நடத்தும் அக்காவும் தங்கையும் அன்பாக நீண்ட நேரம் பேசினார்கள்.

"அண்ணா, அக்காவும் பிள்ளைகளும் மட்டுந்தான் கலியாணத்துக்கு வருவினமாம். அத்தானுக்கு லீவில்லையாம். அவர் வரமாட்டாராம். ஊரிலை எண்டால் கலியாண தடபுடல் ஒரு மாதத்துக்கு முன்னமே தொடங்கிவிடும். இது கொழும்பிலை எல்லாம் இயந்திரம் மாதிரி. கலியாணம் கூட இரண்டு 'ரோபோ'க்களுக்கு கிடையிலை நடக்கிற மாதிரி. பந்தல் போடுறதுக்கும் விதம் விதமா மணவறை போடுறதுக்கும் எங்கடை துரை, யோகு, செல்லம் எல்லாம் முன்னுக்கு நிப்பினம். கலியாணம் முடிய சாப்பிட்டு விட்டு பந்தலுக்குள்ளை இருந்து வெத்திலை போடுற மாதிரி வருமே...?"

"சரி,சரி கிழவியள் கதைக்கிறமாதிரிக் கதையாதை. காலத்துக்கேற்ற மாதிரித்தான் எல்லாம் செய்ய வேணும். எங்கடை கலாசாரமும் பழக்க வழக்கங்களும் சீரழிஞ்சு எண்டது ஓரளவு உண்மைதான். இங்கையிருந்தே தாலியைக் கட்டிக்கொண்டு போற பொம்பிளையும்... ஒன்றாக இருந்துவிட்டு வசதியான நாளிலை கலியாணத்தை சும்மா ஒரு சம்பிர தாயத்திற்காக வைத்துக்கொள்ளுறதும்... இப்ப வெளி நாடுகளிலை நடக்கிற புதிய சம்பிரதாயந்தானே. ஆனால் உனக்கு... கொழும்பிலை உத்தியோகம் பார்க்கிற சொந்த மச்சான்... ஊரிலை வைக்க வசதியில்லை எண்டபடியால் கொழும்பிலை வைக்கிறம்..... சிரமங்கள் குறைவு..."

"இருந்தாலும் அண்ணா..."

தொலைபேசி அவளை அழைத்தது.

"ஹலோ."

....

"பெரியண்ணாவே?"

....

"சீக்..." அவர் ஏதோ கிண்டல் செய்திருக்க வேண்டும். அவளுடைய முகம் வெட்கத்தில் சிவந்துகொண்டது. "என்னது பதினாறாந் திகதி கலியாணம். நீங்கள் பதினைந்தாந் திகதி இரவுதான் வருவியளோ? அதுக்கென்ன பரவாயில்லை. இங்கை தயா அண்ணா ஒடித்திரிஞ்சு எல்லா அலுவலும் பார்க்கிறார். வந்து எத்தினை நாள் நிப்பியள்?"

....

"அண்ணியைக் கூப்பிடுங்கோ."

....

"அண்ணி இன்னும் வேலையாலை வரவில்லையோ? அப்ப பிறகு எடுத்துக் கதைக்கச் சொல்லுங்கோ."

தயா அபிராமியின் அருகில் வந்தான்.

"ஆ....தயா அண்ணாவோடை கதையுங்கோ."

தயாவுடன் கதை தொடர்ந்தது.

"ஓம் அண்ணை, ஐயாவையும் அம்மாவையும் கப்பலிலை கூட்டிவாற ஏற்பாடுகளைச் சித்தப்பா செய்து கொண்டிருக்கிறார். இண்டைக்கென்ன முதலாந்திகதிதானே கலியாணத்துக்கு இன்னும் இரண்டு கிழமையிருக்கு. இங்கையிருக்கிற உங்கடை கூட்டாளியள் ஆருக்கும் 'இன்விடேஷன்' குடுக்க வேணுமோ?"

....

"சரி நான் குடுக்கிறன்."

நிறையப் பேசிக்கொண்டார்கள்.

"அபி, உன்ரை சினேகிதியள் உமாவும் லலிதாவும் லண்டனிலையிருந்து அண்ணாவுக்கு கலிபோர்னியாவுக்கு 'கோல்' எடுத்தவையாம். தாங்களும் கட்டாயம் கலியாணத்துக்கு வருவினமாம்."

"அப்படியே? எவ்வளவு சந்தோசமாயிருக்கு. அவளவை ரண்டு பேரையும் கண்டு எத்தினை வருஷமாச்சு...?"

தயா உள்ளே போனான்.

'ஐயாவும் அம்மாவும் எனக்குப் பக்கத்திலை... அண்ணாமார் ரண்டு பேரும் வாசலிலை... பட்டுச் சேலை சரசரக்க அண்ணியவை ஓடியோடி அலுவல்... என்ரை இனிய சினேகிதிகள் ரண்டு பேரும் என்னோடை.... எனக்குப் பக்கத்திலை நெருக்கமாக... மிகநெருக்கமாக... அவர்... அவரெண்டால்.... அவர்தான்...' அபிராமி கற்பனைகளில் மூழ்கியிருந்தாள்.

நாட்கள் நகர்ந்தன.

விடிந்தால் திருமணம். தயா பட்டியல் போட்டு வேலை செய்து கொண்டிருந்தான். கலிபோர்னியாவிலிருந்து அண்ணா குடும்பமும் பொட்ஸ்வானாவிலிருந்து அக்காவும் பிள்ளைகளும் இலண்டனிலிருந்து உமாவும் லலிதாவும் உரிய காலத்தில் வந்திருந்தனர். கலகலப்பில் வீடு இரண்டு பட்டுக் கொண்டிருந்தது.

மாப்பிள்ளை இடையிடையே தொலைபேசியில் சிணுங்கினார். தோக்கடித்தார். அபி வெட்கத்தில் கவருடன் பேசினாள். நண்பிகள் சீண்டினார்கள்.

"டிங்டொங்."

வாசல் கதவு அழைத்தது.

தயா ஓடிச்சென்று கதவைத் திறந்தான்.

'சித்தப்பா.'

வீட்டினுள் நுழைந்த சித்தப்பா கதிரையில் சாய்ந்தார். இரண்டு நாட்கள் சரியாகச் சாப்பிடாத, குளிக்காத' வாட்டம் முகத்தில் தெரிந்தது.

"...வைக்கிறன் பிறகு கதைப்பம்." அபி போனை வைத்தாள்.

"சித்தப்பா, ஐயாவும் அம்மாவும் எங்கை?" அபி.

"கடைசி நிமிஷத்திலை கப்பல் ஓடேல்லை. அதாலை அவையாலை வரமுடியேல்லை அபி. நான் எவ்வளவோ கஷ்டப்பட்டு ஆறு, குளம், சேறு, சகதி எல்லாம் தாண்டி ஒரு மாதிரி வந்து சேந்திட்டன். நான் வந்த பாதையிலை அதுகளைக் கொண்டுவர ஏலாது. பாவம் செத்துப் போங்கள்."

அபி அறைக்குள் ஓடினாள்.

விடிந்தது.

ஐந்து நட்சத்திர ஹோட்டலில் திருமணம் நடந்தது. ஓம குண்டப் புகையால் 'ஹோல்' நிறைந்தது. எல்லோர் முகத்திலும் நிறைவும் பொலிவும். இயற்கையில் அழகாயிருந்த அபி அளவுக்கதிகமான ஒப்பனையால் சிறிது அசிங்கமாக்கப்பட்டிருந்தாள். குனிந்த தலை நிமிரவில்லை.

"பொம்பிளையின்ரை தாய் தகப்பன வாருங்கோ." பெரியண்ணாவும் அண்ணியும் கன்னிகாதானம் செய்ய அவளின் பக்கத்தில் வந்து நின்றார்கள்.

ஏதோ ஒரு நப்பாசையில் அவள் நிமிர்ந்து பார்த்தாள். அவளுடைய சொல்லிக் கொள்ளாமலே கண்ணீர் அவளை விட்டுப் பிரிந்தது.

ஒரு [illegible] வியாபித்தது. [illegible] கணத்தில் [illegible] கிராமமொன்றின் [illegible] கிழவனும் கிழவியும் [illegible] அல்லது அழிந்து [illegible].

யாழின் இனிய ஒலி தென்றலில் கலந்து தவழ்ந்து, முத்தாலே செய்யப்பட்ட சாளரங்கள் வழியே வந்து அச்சுதனின் செவியில் நுழைந்தது.

சாளரம் வழியே உள்ளே புகுந்து மாணிக்க விளக்கின் சுடரை அணைக்கத் துடித்தது தென்றல். விளக்கின் சுடரோ அணைய மறுத்து அந்த அறைக்குள் இருள் அரக்கன் எட்டிப்பார்க்காமல் விரட்டிக் கொண்டிருந்தது.

இன்பத்தில்-ஒரு துன்பம்

இலக்கிய நயம்

மதயானைகள் பலவற்றை வேட்டையாடி அவற்றின் தந்தங்களை கொண்டு வந்து செய்யப்பட்ட கட்டிலின் மீது கிடந்த அச்சுதனின் விழிகளும் அந்த மாணிக்க விளக்கின் சுடர்போல தூக்கத்தோடு போராடிக்கொண்டிருந்தன.

நித்திராதேவி நெருங்கிவிடாமல் விழிகள் விரட்டிக்கொண்டிருந்தன.

வயல்களை வேலியாக கொண்டது போல் செழிப்புற்று திகழும் சோனாட்டின் குறுநில மன்னன் அச்சுதனின் மனம் குழம்பிக்கிடந்தது.

பச்சை வயலை படு நாசம் செய்யும் யானைகள் போல, அச்சுதனின் மனதை பிரிவுத் துயரம் பிய்த்துப் போட்டுக் கொண்டிருந்தது.

பகை நாட்டுப் படைகளிடம் வீழ்ந்து விட்ட கோட்டைபோல அச்சுதனின் உள்ளத்தை பிரிவுத்துயர் யானைப் படையாக மாறி, மோதி உடைத்துக் கொண்டிருந்தது.

அவன் உள்ளத்தின் துயர் அறிந்தது போல உதடுகள் அந்தப் பெயரை உச்சரித்தன.

"மஞ்சுளா...மஞ்சுளா தேவி.."

■

"வேண்டாம் மஞ்சுளா தேவி! தாங்கள் சக்கரவர்த்தியின் புத்திரி. நானோ ஒரு குறுநில மன்னன். குறுக்கே இருக்கின்றன கடக்க முடியாத தடைகள்!"

சோனாட்டின் தீமிதித் திருவிழாவுக்கு வந்திருந்த சக்கரவர்த்தியின் ஏக புத்திரி மஞ்சுளாதேவி அச்சுதன் மேல் மையல் கொண்டாள்.

இதய மன்னவனாக அவனையே மனதில் இருத்திக்கொண்டு தன் விருப்பம் சொன்னாள்.

தீ மிதித் திருவிழா காண வந்தவள், அரண்மனை நந்தவனத்தில் தன் விருப்பம் சொன்னபோது அச்சுதன் தீ மிதித்தது போல திகைத்துப் போனான்.

"ஏன் மறுக்கிறீர்கள் மன்னவரே? தங்கள் அன்பினைப் பெறும் தகுதி இல்லையா எனக்கு?"

அவசரமாய் குறுக்கிட்டு மறுத்தான் அச்சுதன்.

"தாங்கள் தவறாக விளங்கிக் கொண்டீர்கள். தங்களுக்கு மாலையிடும் தகுதி இந்த எளியவனுக்கு இல்லை என்கிறேன் நான்."

"உழவும், தொழிலும், வீரமும், காதலும், விவேகமும், வேகமும் கலந்திருக்கும் மண்ணின் மைந்தன் தாங்கள்! தாங்களே மண்ணின் பெருமையை மறந்தும், அந்த மண்ணின் மக்களுடைய தலைவர் என்ற தகுதியை குறைத்தும் பேசலாமோ?"

"மலையும் மடுவும் சமமாக முடியும் என்று சொல்ல வருகிறீர்கள்?"

"மனமுண்டானால் இடமுண்டு என்றுதான் சொல்கிறேன். உதறி எறிய உதாரணம் தேடுகிறீர்கள் நீங்கள்! உங்களை அடைய நீங்கள் கூறும் காரணங்கள் என்னை தடுக்காது என்கிறேன் நான்!"

மஞ்சுளா தேவி உறுதியோடு பேசினாள். அவள் உறுதியும், தெளிவும் அச்சுதனின் மறுப்புக்களை தகர்த்துப் போட்டன.

மஞ்சுளாதேவி அவனையே வைத்த விழி வாங்காமல் நோக்கிக்கொண்டிருந்தாள்.

படைத்தவன் வஞ்சகம் செய்யாமல் தன் வள்ளல் தனத்தையெல்லாம் அவள் மேனிக்கு கொடுத்திருந்தான்.

நந்தவனக் காற்றும் குறும்பு செய்தது. மஞ்சுளாதேவியின் மேலாடையை தொட்டு மெல்ல விலக்கிவிட்டு மறைந்தது.

மேலாடை சற்று விலக, போருக்குத் தயார் என்று அறைந்து சொல்லும் முரசங்கள் போன்று தெரிந்த மார்புகளின் திரட்சியை அச்சுதனின் விழிகள் வியப்போடு இரசித்தன.

படைத்தவன் வஞ்சகம் செய்யவில்லை. அதனால் செம்பொன்னால் செய்யப்பட்டது போல இருக்கும் இந்த வஞ்சியின் மேனி என் உள்ளத்தையல்லவோ வஞ்சகர்போல இரக்கமின்றி வதைக்கிறது.

சக்கரவர்த்தியின் புத்திரி என்ற இவள் தகுதிதான், இவளை என் மனம் மிக விரும்பினாலும், உதடு வேண்டாம் என்று பொய் சொல்லி மறுக்க காரணமானது.

இள மானுடன் இவளை நிறுத்திப் பார்த்தால் எது நிஜமான் என்று சந்தேகம் வந்துவிடுமளவுக்கு இவள் விழிகள் ஜாலம் காட்டுகின்றனவே.

ஜாலம் காட்டும் விழிகள் என் உள்ளத்தில் இன்ப கோலங்கள் வரையும் மாயம் என்ன?

தன் கூந்தலில் மட்டும் இவள் தாழை மலர்களை சூடியிருக்காவிட்டால் மழைக்கால மேகம் கீழே இறங்கி வந்துவிட்டதோ என்று சந்தேகம் வந்துவிடுமன்றோ?

திண்மையும், மென்மையும் கலந்து மேலே பருத்தும், கீழே சிறுத்தும், செழித்தும் தெரியும் கால்களால் இவள் நடந்துவரும் போது சந்தனமரமும் நடக்குமோ என்ற வினாவல்லவோ இதயத்தில் விளைந்து விடுகிறது!

முழு நிலவு தோற்றுவிடும் இவள் முக எழிலின் கீழே இருக்கும் மூங்கில் போன்ற தோள்களில் தங்கி நிற்க முடியாமல்தான் மேலாடை மெல்ல சரிகிறதோ?

அச்சுதனின் உள்ளத்தில் எதிர் நின்ற எழில் உருவம் வினாக்கள் விதைத்தது. அவன் விழிகளோ அசைவற்றுப்போய், மோகன மேனியில் ஆணியடித்தது போல் நிலைத்து நின்றன.

அவன் விழிகள் தன் மேனியில் வெள்ளோட்டம் நடத்துவதையும், அதனால் அவன் உள்ளத்தில் மோக உணர்வுகள் கார்மேகம் கண்ட கலாபமயில்கள் போல் சிறகுகள் விரித்து களித்தாடுவதையும் மஞ்சுளாதேவி புரிந்து கொண்டாள்.

'இவர் வலிய கரங்களைவிட மோசமானவையோ விழிகள்? அந்த விழிகள் படும் இடமெங்கும் கரங்களால் அழுத்திப் பிடித்தது போல சிவந்து போகின்றனவே. மேனி சிலிர்த்துப் போகிறதே.'

என்று தனக்குள் நினைத்தவளாக மெல்ல தன் உடல் அசைத்தாள் மஞ்சுளா தேவி.

அவன் விழி ஆராய்ச்சிக்கு முற்றுப்புள்ளி போடுவது போல,

அவன் மனம் போராட்டத்தையும், தன் எழில்கள் அவனுக்குள் விரித்துவிட்ட மோகவலையையும்,

அந்த மோக வலையில் விரும்பியே விழுந்துவிட்ட அவன் உணர்ச்சிகளையும் புரிந்தும், புரியாதது போல,

"இன்னும் என்ன உதாரணங்கள் சொல்ல முடியும் என்று யோசனையா மன்னவரே? நிலவில் பொழியும் ஒளியையும் நிலவையும் பிரிக்கமுடியுமா சொல்லுங்கள்."

தன் விழி ஆராய்ச்சிகளையும், தன் உள்ளத்தின் கிளர்ச்சிகளையும் அவள் விளங்கிக்கொள்ளவில்லை என்ற திருப்தியோடு அச்சுதன் அவள் கேள்விக்கு விடை சொன்னான்.

"அதெப்படி முடியும் இளவரசி? முடியாது!"

"செந்தமிழையும், அந்த செந்தமிழை உச்சரிக்கும்போது தோன்றும் இனிமையையும் இரு வேறாய் பிரிக்க முடியுமா மன்னவரே?"

"நிச்சயமாக முடியாது!"

"உச்சி வானத்தில் உலாவந்து நின்று சுட்டெரிக்கும் சூரியனிடம் இருந்து அதன்

கதிர்களை பிரிக்க முடியுமா பிரியமானவரே?"

"ஒரு போதும் நடக்காது."

"திரை கடலிடம் இருந்து அதன் அலைகளை அபகரிக்க முடியுமா அன்பரே?"

"அதுவும் முடியாத காரியம்தான்."

"இப்போது புரிகிறதா?"

"எது?"

"என் இதயத்தில் விதையாக விழுந்து விருட்சமாக வளர்ந்துவிட்ட உங்கள் மீதான காதலை உங்கள் உதட்டு மறுப்புக்கள் ஒன்றும் செய்துவிட முடியாது என்பது!"

அச்சுதன் இனி மறுத்தும் பயனில்லை என்று புரிந்தான்.

அவன் புரிந்துகொண்டதின் அடையாளமாக உதடுகளில் புன்னகை மலர்ந்தது.

அவன் புன்னகை அலட்சியத்தின் பிரதிபலிப்போ என்று நினைத்த மஞ்சுளாதேவி இதுவரை காட்டிய உறுதி துறந்து, தன் பட்டுக் கரங்களால் தன் ஒளி சிந்தும் முகம் மூடியபடி குலுங்கி அழத் தொடங்கிவிட்டாள்.

அவள் சுட்டு விழிகளில் இருந்து

தருவது ரசிகன்

கண்ணீர் கொட்டியது கண்ட அச்சுதன் இரண்டடி எடுத்துவைத்து நெருங்கி அவள் தோள்களில் ஆதரவாய் தன் கரம் எடுத்து வைத்தான்.

கொம்பில் சாய்ந்த கொடிபோல அச்சுதன் தோள்களில் முகம் சரித்து விழி நீரால் அவன் தோள் நனைத்தாள் மஞ்சுளா தேவி.

அவள் முதுகை தன் இடக்கரத்தால் வருடிக்கொடுத்தபடி,

"மஞ்சுளா நான் தோற்றுவிட்டேன். தோல்விகளை விரும்பியதில்லை நான். இப்போது விரும்பியே தோற்றுவிட்டேன்."

என்று சொல்லியபடி, அவள் தோள் தொட்டு நிமிர்த்தி, முகம் பார்த்து புன்னகைத்தான். அவன் விழிகளுக்குள் தன் விழிகள் அனுப்பி அவன் பொறுமையை உடைத்தாள் மஞ்சுளா தேவி.

பொறுமை உடைய, பூவையை தன் மேனியோடு மேனியாக பொருத்திக் கொண்டான் அச்சுதன்.

அவன் கன்னத்தில் இதழ் பொருத்தி, காதருகில் சொன்னாள் மஞ்சுளா தேவி,

"நாளை நான் செல்ல வேண்டும்."

ஈயம் உருக்கி செவியில் ஊற்றியது போல இருந்தது அச்சுதனுக்கு.

"வேண்டாம். போக வேண்டாம்."

"ஆசைதான். நீங்கள் அங்கு வாருங்கள். என் தந்தையை கண்டு எம் காதல் சொல்லுங்கள். பிறகு பிரிவுக்கு என்ன வேலை?"

என்றாள் மஞ்சுளா தேவி. அவன் விழிகள் கலங்க, பிரிவின் வாட்டம் போக்கும் வாஞ்சையோடு அச்சுதன் கழுத்தில் இதழ் பொருத்தி, அந்த மென் இதழ்களால் கோலம் போட்டாள்.

உள்ளே மனம் சிலிர்த்துக்கொண்டது. உவகையோ அணைபோட முடியாத ஆற்று வெள்ளமாய் புரண்டுவந்தது. அதே நேரத்தில் நாளை பிரியப்போவது நினைக்க மனம், மாலுமி இல்லாத கப்பல் போல துயரக் கடலில் கவிழவும் செய்தது. இன்றுமட்டும்தானே இந்த இன்பம். நாளை இது இல்லையே என்று துடிப்பு எழுந்தது.

■

தூக்கம் மறந்திருந்த அச்சுதன் பிரிவதற்கு முன் தன் மனம் இருந்த நிலை எண்ணிக்கொண்டான். அதனால் தனக்குள் சொல்லிக்கொண்டான்.

"இன்பத்திலும் ஒரு துன்பம் என்பது பிரிவுக்கு முன்னர் கூடியிருக்கும் காதலர்களுக்கு எத்தனை பொருத்தம்?"

அச்சுதன் நினைப்பு சரிதான் என்று சொல்கிறது திருவள்ளுவர் வாக்கு.

ஊடலின் உண்டாங்கோர் துன்பம் புணர்வது
நீடுவ தன்று கொல் என்று

குறள் 1307–அதிகாரம் 131

குறுக்கெழுத்துப் போட்டி இல–49

1						■
	■	2	■	3		
	4					■
5					■	6
■			■		7	
8		■	9			
	■	10				

இடமிருந்து வலம்

1. முடியாது என்ற சொல் என் அகராதியிலே கிடையாது என்று சொன்னவர் இவர்தான்.
3. இதுவும் ஓட்டிற்குள் உடலை ஒளித்துக்கொள்ளும்.
4. அலைபாயும் மனதிற்கு இது வேண்டும் என்பார்கள்.
5. அரசன் – கொடையாளன் இருவருக்கும் பொதுவான ஒரு சொல்.
9. அரிதாரம் பூசிக்கொண்டு ஆடுகின்றவர்களை இப்படி அழைக்கலாம்.
10. அரண்மனைகளில் இதுவும் இருக்கும்.

மேலிருந்து கீழ்

1. பஞ்சைத் தின்றுவிடும்.
2. இதில் கேள்விகளும் இருக்கும்.
3. தமயந்தியின் கணவன்.
4. சமையலறைக்கு அவசியம்.
6. அநேகமாகச் சிரிக்க வைத்து விடும். (குழம்பியுள்ளது)
7. கஞ்சனுக்கு இவர் கடும் எதிரி.
8. இதை மஞ்சள் கயிற்றிலும் கோர்த்துக் கொள்வதுண்டு.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 21.05.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல–49
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு -05.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

குறுக்கெழுத்துப் போட்டி இல-47க்கான சரியான விடைகள்:

1 கை	2 ரே	கை	■	3 க	டு	4 கு
5 க	வ	ரி	6 மா	ன்	■	த்
ல	தி	■	ரு	னி	■	து
ப்	■	7 ந	தி	■	8 க	வி
பு	■	ர	■	9 வெ	ள்	ள
■	10 செ	ம்	ம	ண்	■	க்
11 சீ	ப்	பு	■	12 பா	க்	கு

குறுக்கெழுத்துப் போட்டி இல.47இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. செல்வன் எஸ். ருசாந்தன் நுவரெலியா.
2. எஸ்.எம். ஜமால் முகமட் புத்தளம்.
3. ரி. கிருஷ்ணா திருகோணமலை.
4. என். நிசாம்டீன் கொழும்பு-06.
5. பி. தவக்குமார் ஹட்டன்.
6. பி. உவைஸ் நீர்கொழும்பு.
7. ரி. விஜயானந்தன் காரைதீவு-01.
8. இ. சம்சுதீன் புதிய காத்தான்குடி.
9. அ. பிறேமளா வவுனியா.
10. ஆர். சசிகுமார் கொழும்பு-12.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

சிந்தியா பதில்கள்

தென்னாபிரிக்காவில் ஏற்பட்டது போன்ற ஒரு நிலமை இங்கும் வரும் என்று நம்புகிறீர்களா?

கோ.வேணுதாஸ்-திருகோணமலை.

தற்போதைக்கு நம்பத் தயாராக இல்லை. இங்கு நெல்சன் மண்டேலாவும் இல்லை. டிகிளார்க்கும் இல்லை. அதனால் மாற்றம் உடனே சாத்தியம் இல்லை.

□□

தென்னாபிரிக்காவாக மாறுமா இலங்கை?

என்.செல்வநாதன்-கொழும்பு-11.

மாறுமா என்ன மாறுமா? மாறிவிட்டது! இனப்பிரச்சனைக்கு உதாரணம் சொல்ல இனி தென்னாபிரிக்காவை இழுக்க முடியாதல்லவா? அதனால் தென்னாபிரிக்காவுக்கு பதிலாக நம் நாட்டை சுட்டிக்காட்டிக்கொண்டிருக்கலாம் அல்லவா?

□□

அமரர் பிரேமதாசாவுக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் பற்றி என்ன சொல்கிறீர்கள்?

எஸ்.சந்துரு-கொழும்பு-06.

காலம் தாழ்த்தியே கௌரவம் செய்யப்படுவதால் தேர்தலை மனதில் வைத்தே செய்யப் படுவதாக எண்ண வைத்துவிட்டார்கள்.

□□

டியர் சிந்தியா! துப்பாக்கி முனையால் சாதிக்க முடியாததை பேனா முனையால் சாதிக்க முடியுமா?

ஐ.எம்.ஹனீபா-முள்ளிப்பொத்தானை.

முடியும், என்று சொன்னால் எழுதுவோர் மகிழ்வர். முடியாது, என்று சொன்னால் சுடுவோர் மகிழ்வார்.

□□

டியர் சிந்தியா! பிரசாந்தை கனவில் கண்டால் என்ன செய்வீர்கள்?

கே.எல்.ரஸீனா-புதிய காத்தான்குடி-01.

ஹலோ சொல்லுவேன்.

□□

நெல்சன் மண்டேலாவின் கனவுகள் பலிக்குமா?

ம.மு.ரஞ்சன் துரைசிங்கம்-நோட்டன் பிரிட்ஜ்.

அவர் எதிரே நிறைய சவால்கள் இருக்கின்றன. முகம் கொடுத்து வெல்லும் ஆற்றல் அவரிடம் இருப்பதாகவே தெரிகிறது. வெள்ளையர் ஆதிக்கம் விலகியதுடன் அவரின் இலட்சியக் கனவு கைபட்டுவிட்டது. இனி கை பட்டதை கட்டிக்காத்து உறுதிப்படுத்துவதே அவரின் பணியாக இருக்கும்.

□□

தற்போதைய அரசியல் ஸ்டைல் எது?

ஆர்.உதயசந்திரன்-அவிசாவளை.

எதிர் தரப்பில் பழி போட்டு தப்பிக்கொள்வது. தாங்கள் மட்டும் தவறுகளை திருத்தாமல் இருந்து கொள்வது. தாங்கள் விமர்சித்த தவறுகளை தாங்களும் செய்து கொண்டிருப்பது.

□□

'தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா' என்று சொன்னது யார்? தற்போது இக்கூற்று பொருந்துமா?

அ.பர்மா-கொழும்பு-10.

அது நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை கூறியது. தமிழனுக்கு தமிழனே எதிரியாகிவிட்ட இலக்காலத்தில் ஒரு தமிழன் தலை உயர்ந்தாலும் இன்னொரு தமிழனே அந்த தலை குனியவைக்கும் காரியத்தை கச்சிதமாகச் செய்துவிடுவான்.

□□

டியர் சிந்தியா! அன்புக்கும், பணத்திற்கும் இடையில் உள்ள வித்தியாசம் என்ன?

க.முரசொலி மாறன்-அக்கரைப்பற்று-03.

அன்பு நிலையானது.-தொலையாதது. பணம் நிலையற்றது-தொலைந்துவிடும்.

□□

கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை. உதாரணம் சொல்லுங்களேன்?

எம்.பௌஷாட் கான்-குருத்தலாவை.

பகிரங்க கூட்டத்தில் அரசாங்கத்தை கிழிப்பது. நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் வந்தால் நைசாக நழுவி அரசாங்கத்தோடு இரகசியமாக பேசி நம்பிக்கையை பெறுவது. தருவதை வாங்குவது.

□□

பத்திரிகையாளர்கள் எப்படி இருக்கக் கூடாது?

எஸ்.சோதிலிங்கம்-கண்டி.

பிற பத்திரிகைகளில் வரும் நல்ல விசயங்களை திரட்டித்தரலாம். ஆனால், திரு.கிங்ஸ்லி செல்லையா மாதிரி பிற பத்திரிகைகளில் வரும் பேட்டிகளையும், படங்களையும் தனக்கு பிரத்தியேகமாக தரப்பட்ட பேட்டி என்றும் படம் என்றும் சொல்லி பெயர் தேடும் ஆசை கூடாது.

□□

புத்தாண்டில் திரைக்கு வந்த படங்களில் வசூலில் முன்னணியில் உள்ள படம் எது?

அ.சற்சொரூபன்-நீர்கொழும்பு.

சொன்னால் நம்பமாட்டீர்கள். பெரிய ஹீரோக்களின் படங்கள் ஒரு வாரத்தின் பின் வசூலில் சுருண்டுவிட, 'வரவு எட்டணா செலவு பத்தணா' தான் கிளப்புகிறது.

மகாபாரதம் அங்கம் 29

இவ்வாரம் (15.05.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

காலத்தின் குரல்: அரசியலில் ஈடுபடுபவர்கள் மக்கள் மனதைக் கவர்வதற்கு இரு வழிகளைக் கடைப்பிடிக்கின்றனர். பணத்தையும் பொருளையும் வாரி இறைத்து மக்களின் அபிமானத்தைப் பெற முயலுவோருமுண்டு. உண்மை, நேர்மை, நற்பண்பு போன்ற தர்ம நெறிகளைக் கொண்டு மக்களிடம் செல்வாக்குப் பெறுவோரும் உள்ளனர். அஸ்தினாபுரத்தின் திறைசேரியிலுள்ள திரண்ட செல்வத்தை தன் விருப்பம்போல் இறைத்து மக்களைக் கவர துரியோதனன் முயன்று வரும் அதே வேளையில் யுதிஷ்டிரனோ தர்மத்துக்குக் கட்டுப்பட்டு நேர்மையான முறையினைத் தனது வழியாக்கிவிட்டான்.

இம் மகாகாவியம் இத்தகைய முரண்பாடுகளையும் விரித்து இறுதியில் எது நிலை பெறும் என்பதை எடுத்துக்கூறுகிறது. இதே காலகட்டத்தில் மகாராணி காந்தாரி எத்தகைய கருத்தைக் கொண்டுள்ளார் என்பதைப் பார்ப்போம்.

-காட்சி தொடக்கம்-

குந்தியும் யுதிஷ்டிரனும் காந்தாரியின் அந்தப்புரம் வருகின்றனர்.

குந்தி: அக்கா!

யுதிஷ்: வணக்கம் பெரியம்மா!

காந்தா: வாருங்கள்! அஸ்தினாபுரத்தின் எதிர்கால பெருமைக்குரிய மகன், இன்றுதான் என்னை நினைத்துக் கொண்டான் போலும்? நீடூழி வாழ்க! மக்களிடத்தில் மகோன்னத மதிப்பைப் பெற்று வருகிறாய் மகனே! மக்களின் ஆதரவு சிறந்ததோர் ஆயுதம் மட்டுமல்ல அதுவே ஒரு மன்னனுக்குரிய சிறந்த கேடயமுமாகும்.

யுதிஷ்: தங்கள் ஆசிர்வாதமே எனக்கு சிறந்த பாதுகாப்பினை அளிக்கவல்லது தாயே!

காந்தா: உனது பெரியப்பாவுக்கு என்றும் மதிப்பும் பணிவும் கொண்டவனாக நீ வாழ நான் பிரார்த்திக்கிறேன்.

யுதிஷ்: இவ்வாறு தாங்கள் கூறலாகாது பெரியம்மா! பெரியப்பாவுக்குக் கீழ் படிந்து நடப்பேன் என்பதில் தாங்கள் சிறிதளவும் ஐயம்கொள்ளலாகாது தாயே!

காந்தா: இத்தகைய மகனைப் பெற்ற நீ பாக்கியசாலிதான் குந்தி!

குந்தி: உண்மையில் மகாராஜாவின் பெருந் தன்மைக்கும் இத்தகைய மக்களைப் பெற்றமைக்கும் நான் பாக்கியசாலிதான். மகாராஜாவுக்கும் தங்களுக்கும் என்றும் நான் நன்றி பாராட்டக் கடமைப்பட்டவள்.

காந்தா: காலம் எவ்வாறு அமையப் போகிறது என்பதை கடவுள்தான் அறிவான்.

-காட்சி மாற்றம்-

துரியோதனன் அரண்மனை- புருவஞ்சனர் வருகிறார்.

சகுனி: வணக்கம்! வாருங்கள் புருவஞ்சனரே!

புருவ: இந்த எளியவனை வரவேற்க காந்தார நாட்டு அதிபதி தயவு செய்து எழுந்திருக்க வேண்டாம்.

சகுனி: தாங்கள் வயதில் என்னைவிடவும் முதியவர்கள். அத்துடன் அற்புதமான கட்டிடக்கலைஞர். அண்டத்தையே உருவாக்கும் ஆற்றல் படைத்தவரல்லவா தாங்கள்? துரியோதனா! வாரணாவதியில் அரக்கு மாளிகையை நிர்மாணிக்கும் பணியிலீடுபட்டுள்ள புருவஞ்சனரிடம் வாழ்த்துப் பெறுவாய்.... வா....!

துரியோ: வணக்கம்! வாருங்கள். அமருங்கள்!

சகுனி: காந்தார நாட்டின் திராட்சை ரசத்தின் இனிமையினைச் சற்றுச் சுவைத்துப் பாருங்கள்.

தோழியை அழைத்து மதுவினைப் பெற்று புருவஞ்சனருக்கு அளித்து சகுனி தானும் அருந்துகிறான்.

சகுனி: அரக்கு மாளிகை நிர்மாணப் பணி எவ்வாறு உள்ளது?

புருவ: பணி முற்றுப்பெற்று விட்டதனை அறிவிக்கவே இங்கு வந்தேன்!

சகுனி: மகிழ்ச்சி! சிறிதளவு தீ பட்டாலும்....!

புருவ: சந்தேகம் வேண்டாம். ஒரு சிறு துளி தீப்பொறி பட்டாலும் மாளிகை முழுவதும் சில நொடிகளில் சாம்பாராகிவிடும்.

சகுனி: அந்த மாளிகையைப் போன்று புருவஞ்சனரின் பெயரும் வரலாற்று ஏடுகளில் நிச்சயம் பொறிக்கப்படும்.

துரியோ: மாமாவின் திட்டப்படி மாளிகை அமைந்திருந்தால் தங்கள் மூன்று பரம் பரைக்கும் நிலை பெறும் திரவியம் தங்களுக்கு அளிக்கப்படும்.

சகுனி: பயணத்தினால் களைப்படைந் திருப்பீர்கள். சற்று ஓய்வெடுங்கள்.

□□□

கர்ண: மாமா! இத்தகைய சூழ்ச்சித் திட்டங்களில் ஈடுபடுவது கோழைத்தனம் என்றே எனக்குப்படுகிறது. போர்க் களத்தில் வீரம் காட்டி வெற்றி பெறுவதை விடுத்து சூதால் காரியம் பார்ப்பது அழகல்ல.

சகுனி: ஆமாம்! *(கிண்டலாக)* துருபதனிடம் போரிட்டு வென்றதனைப் போலவா....?

கர்ண: வென்றாலும் தோற்றாலும் அது கோழைத்தனமல்லவே!

சகுனி: துரியோதனா! உனது ஆப்த நண்பன் நமது முதலாவது சதித் திட்டத்துக்கே உடன்பட மாட்டார் போல் தெரிகிறதே! அங்க தேச அரசர் என்ன சொல்கிறார்?

கர்ண: அரசியலை ஒரு சூதாட்டக் களமாக மாற்றுவதில் எனக்கு உடன் பாடில்லை மாமா! ஒரு வீரனுக்கு அவனுடைய அம்புகளே ஆயுதம். அங்க தேசத்து மன்னனாக நான் ஆக்கப்பட்டமையினால் மட்டும் நான் துரியோதனனின் நண்பனல்ல. அவனுக்கு என்றும் பணிவாகவே நடப்பேன்.

துரியோ: கர்ணா! மாமா அவ்வாறு கூறிய தனால் ஆத்திரப்பட வேண்டாம். அங்க தேசத்துக்கு ஏற்ற மன்னவன் நீதான் என்பதில் சந்தேகமேயில்லை.

சகுனி: கர்ணா ஆத்திரப்படாதே! பாண்டவர்கள் தங்கள் திக் விஜயத்தை முடித்துக் கொண்டு திரும்புகிறார்கள். முதலில் அவர்களை வரவேற்கலாம் வாருங்கள்.

-காட்சி மாற்றம்-

துவாரகை–கிருஷ்ணனின் மாளிகை.

ருக்மணி: வாசுதா என்ன மூச்சிரைக்க ஓடி வருகிறாய்?

கிருஷ்: பயந்து ஓடுவது நல்லதல்ல வாசுதா!

வாசுதா: பலராமர் கோபமாகக் காணப் படுகிறார். அதுதான் ஓடி வந்தேன்.

கிருஷ்: அப்படியா! அண்ணனின் கோபத்தைத் தணிக்க ருக்மணியால் தான் முடியும். வாசுதா! நீ போகலாம்.

ருக்ம: தங்கள் அண்ணாவின் கோபத்துக்குக் காரணம் என்னவாக இருக்கலாம்?

கிருஷ்: வேண்டாத விருந்தாளிகள் எவராவது அண்ணன் பலராமனுக்குத் தொந்தரவு கொடுத்திருக்கலாம்.

பலராமன் கிருஷ்ணனை அழைக்கும் ஓசை கேட்கிறது.

கிருஷ்: அண்ணா! தங்களை யார் கோபத்துக்குள்ளாக்கினார்கள்?

ருக்ம: தங்கள் கோபத்துக்கு நாங்கள் காரணமாகி விட்டோமா?

பலரா: இல்லை அண்ணி! பாண்டவர்கள் எங்களுக்கு உறவானவர்களா இல்லையா என்பதை நான் முதலில் அறிந்தாக வேண்டும்.

கிருஷ்: அன்புக்குரிய குந்திதேவியார் எமக்கு அத்தை என்பதால் அன்னாருடைய புதல்வர்கள் எமக்கு மிக நெருங்கிய உறவினரல்லவா?

பலரா: அவ்வளவு நெருங்கிய உறவினர்கள் துவாரகைக்கு வராமல் அஸ்தினாபுரம் செல்வது எனக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தமாட்டாதா?

கிருஷ்: ஏன் பீமன் வந்திருந்தானே!

பலரா: ஆமாம்! கதாயுத யுத்த முறையின் நுணுக்கங்களைக் கற்கவே பீமன் வந்திருந் தான். ஏனையோர் வரவில்லையே?

ருக்ம: அவர்கள் உல்லாசப் பயணம் மேற்கொண்டு வரவில்லையே! ஆகவே துவாரகைக்கு வரமுடியவில்லை.

கிருஷ்: அவர்கள் பிறிதோர் பணிக்காகப் பயணம் செய்தனர். அவர்கள் கடமையில் வெற்றிபெற வாழ்த்துங்கள் அண்ணா! சினங்கொண்ட முகத்துடன் வாழ்த்துவது அழகல்ல. கோபத்தை விட்டுவிட்டு வாழ்த்துங்கள்.

பலரா: *(சிரித்தவண்ணம்)* சரி அவர்கள் வெற்றியீட்ட ஆண்டவனைப் பிரார்த்திக் கிறேன்.

-காட்சி மாற்றம்-

அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் இரதத்தில் செல்லும்போது அவர்களுடன் பீமனும் தனி இரதத்தில் சென்று இணைகிறான். நால்வரும் அஸ்தினாபுரம் நோக்கிச் செல்கின்றனர்.

பீமன்: உங்கள் பயணம் எவ்வாறிருந்தது?

அர்ச்: நீங்களாகவே பார்த்து அறிந்து கொள்ளலாமே! அதிருக்கட்டும் துவாரகை யிலுள்ளவர்கள் எப்படியுள்ளனர்?

பீமன்: ஆண்டவன் அநுக்கிரகத்தால் அனைவரும் சுகம். எனக்கு நல்ல சாப்பாடு போட்டார்கள்.

நகுல: ஓஹோ அது உங்களைப் பார்த்தாலே தெரிகிறதே!

சகாதே: அப்போ அம்மா உங்களை நன்றாகக் கவனிப்பதில்லையோ.....?

பீமன்: உட்கருத்துக்கொண்ட வசனம் பேச உனக்கு எவரும் ஈடில்லை. அம்மாவிடம் இதனைச் சொல்லி விடாதே!

சகாதே: சொல்லமாட்டேன். ஆனால் நீங்கள் இல்லாவிட்டால் அம்மா எங்களை உணவு விடயத்தில் சரிவரக் கவனிப்ப தில்லை.

பீமன்: சரி சாப்பாட்டுப் பிரச்சனையை விடுங்கள். துரியோதனன் மிகவும் செல்வாக்குப்பெற்று வருவதாக துவாரகையில் கேள்விப்பட்டேனே!

அர்ச்: ஆமாம்! மிகப் பரந்த மனதுடன் நடந்து கொள்கிறான்.

பீமன்: அந்தப் பரந்த இதயத்தில் நமக்கும் இடம் தந்தால் போதுமானதே!

-காட்சி மாற்றம்-

துரியோதனன் மாளிகை - கர்ணன் பிரவேசிக்கிறான்.

கர்ண: அன்பு நண்பா! துரியோதனா!

துரியோ: வாரும் நண்பரே! அங்க தேசத்தின் அதிபதியே எப்போது வந்தாய்? மகிழ்ச்சியாகக் காணப்படுகிறாய்.

கர்ண: நேற்று வந்தேன். மகிழ்ச்சியான செய்தியுமுண்டு நண்பரே! அரசியலில் விரோதத்தைத் தீர்க்க போர் முனைதான் சிறந்த இடம். மனச் சாட்சிக்கு மாறான காரியத்திலீடுபட்டு பின்னர் வருந்துவதில் பயனில்லை. அஸ்தினாபுரத்தின் அரசுரிமை யாருக்குச் சேர வேண்டும் என்ற தீர்ப்பினை அரசகுமாரர்களின் இரத்தம் பெருக்கெடுக்கும் போர் முனை வழங்கட்டுமே! மாமா சகுனியின் சூழ்ச்சித் திட்டங்கள் எனக்குப் பிடிக்கவேயில்லை. குலம், கோத்திரம் பார்க்காமல் என்னை நண்பனாக ஏற்ற உன்னை எச்சரிப்பது எனது கடமை.

துரியோ: எனக்கு ஒரே சாதி மட்டுமே தெரியும். வீரம்! வீரர்கள் அனைவரும் ஒரே குலத்தவர்!

கர்ண: பாண்டவர்களும் வீரர்கள் தானே! போர்முனையில் மோதிப்பார்க்கலாமே!

துரியோ: அப்போ அரக்கு மாளிகைத் திட்டம் உனக்கு உடன்பாடற்றதா?

கர்ண: உண்மைதான். மற்றொரு நற்செய்தி! யுத்தம் மூழுமானால் மகத நாடு நம் அணியில் சேரும். சிசுபாலனும் நமக்கு துணை புரிவான். விதர்ப நாட்டு இளவரசன் ருக்மி, தங்கை ருக்மணியை கிருஷ்ணன் கடத்தியமையினால் கடும் கோபமுற்றிருக்கிறான்.

சகுனி: வாழ்த்துக்கள் கர்ணா! நானும் சில நற்செய்திகளை வைத்திருக்கிறேன். அஸ்வத்தாமனின் ஆதரவை துரியோ தனன் பெற்றுவிட்டான். அவனுடைய தகப்பன் துரோணாச்சாரியாரோ மாமா கிருபாச்சாரியாரோ அஸ்வத்தாமனுக்கு விரோதமாகப் போக மாட்டார்கள். அடுத்து பீஷ்மர். அவர் தமது தம்பியான திருதராட்டினரை பாதுகாக்க பின் நிற்கப் போவதில்லை.

துரியோ: மாவீரர்களான பீஷ்மர், துரோணர், கிருபர், அஸ்வத்தாமன், ஜராசந்தன், சிசுபாலன் போன்ற இணையற்ற வீரர்கள் எம்முடன் இணையும் போது அரக்கு மாளிகை விவகாரம் எதுக்கு மாமா?

சகுனி: எனது திட்டத்தின் உட்பொருளை உணர்ந்து கொள்ள வேண்டும் துரியோதனா! போர் முனையில் எதிரிகள் மட்டும் கொல்லப்படுவதில்லையே! ஆகவேதான் சில காரியங்கள் போர் முனைக்கு வெளியேயும் தீர்க்கப்பட வேண்டியிருக்கிறது.

-காட்சி மாற்றம்-

திருதராட்டிரன் அரண்மனை- விதுரர் வருகிறார்.

விதுரர்: வணக்கம் மகாராஜா!

திருத: வாரும் விதுரரே! அமரும். அரசர் என்ற நிலையிலில்லாமல் அன்பு சகோதரன் என்ற நிலையில் உமது ஆலோசனையைப் பெற விரும்புகிறேன். பாண்டு, நீர், மற்றும் நான். ஆக மூவரும் சகோதரர்களல்லவா?

விதுர: என்னை தங்கள் சகோதரர் என்ற நிலையில் வைக்க வேண்டாம் மகாராஜா! நான் ஒரு தாதியின் மகன் என்பதை தாங்கள் அறிவீர்கள்.

திருத: கங்கையின் நீர் குடத்துள் இருந்தாலும் புனிதம் கெடுவதில்லையே! விதுரா! எவ்வாறிருந்தாலும் உமது தனித்து வத்துக்கு நான் என்றும் மதிப்பளிப்பவன். பாண்டவர்கள் பற்றிய செய்திகள் ஏதாவது உண்டா?

விதுர்: ஆமாம்! பீமசேனர் பலராமரிடம் கதாயுதப் பயிற்சி பெற்றபின் ஏனைய சகோதரர்களுடன் சேர்ந்து கொண்டாராம். அவர்கள் அஸ்தினாபுரம் நோக்கி வந்து கொண்டிருக்கின்றனர்.

திருத: அவர்கள் வந்ததும் யுதிஷ்டிரனுக்கு முடியினை சூட்டிவிடலாமா? துரியோ தனன், பாண்டவர்கள்தான் ஆட்சி புரியத் தகுதியானவர்கள் என்ற உண்மையினை ஏற்க மறுக்கிறான். அவனுடைய போக்கு எனக்கு கவலையை அளிப்பதால் ஆட்சி பீடத்திலிருந்து அகன்றுவிடலாம் என்று கருதுகிறேன்.

விதுர: இதில் முடிவெடுக்க வேண்டியவர் தாங்களே! இம்முறை நடைபெறவிருக்கும் சிவமகோற்சவத்தில் தங்கள் பிரதி நிதியாக யுதிஷ்டிரனை அனுப்பவிருப்ப தாக அறிந்தேன். நகரம் முழுவதுமே இக்கதை பரவியுள்ளது.

திருத: எனது இம் முடிவினை நீரும் ஏற்றுக்கொள்ளுகிறீரா?

விதுர: ஆமாம்! காந்தார மன்னர் பல காரணங்களின் அடிப்படையில்தான் இந்தத் தீர்மானத்தை எடுத்திருப்பார் என எனக்குப்படுகிறது.

திருத: விழாவில் நாட்டு மக்கள் அனைவரும் கூடுவார்கள். தங்கள் வருங்கால மன்னரை அவர்கள் அறிந்துகொள்ள வாய்ப்புக்கிட்டுமல்லவா?

விதுர்: இருப்பினும் யுதிஷ்டிரன் தனியாக அங்கு செல்வது சரியில்லை என்று எனக்குப் படுகிறது. அவரை தனிமையில் காணும் மக்கள், அரச குடும்பத்தில் ஒற்றுமையில்லை என்று கருத வாய்ப்புண்டு. துரியோதனன், துச்சா தனன் ஆகியோரும் செல்லட்டும். ஏன்! தாங்களே விழாவில் யுதிஷ்டிரனை அறிமுகப்படுத்தினால் சிறப்பாக இருக்கும் அல்லவா? தாங்களாகவே எதிர்கால மன்னரைத் தேர்ந்தெடுத்தாக மக்கள் கருதுவார்கள்.

திருத: நீர் கூறுவது சரியே! விரைவில் எனது முடிவைக் கூறுகிறேன்.

-காட்சி மாற்றம்-

விதுரரின் மாளிகை-

விதுரர் மனைவி: தாங்கள் மிகவும் கவலையுடன் காணப்படுகிறீர்களே!

விதுர: ஒரு நாட்டின் பிரதம அமைச்சருக்கு பிரச்சனைகளுக்குக் குறைவுண்டா?

விது.ம: இன்று உங்கள் கவலைக்கு சாதாரண மான சம்பவம் காரணமாக இருக்காது என நினைக்கிறேன். மகாராஜா ஏதாவது கூறினாரா?

விதுர: எப்படித் தெரிந்தது?

விது.ம: இது எனக்குத் தெரியாதா? அரண்மனையிலிருந்து திரும்பிய பின்னர் தான் உங்கள் முகத்தில் பெரும் மாற்றத்தை அவதானித்தேன்.

விதுர: உண்மைதான். வாரணாவதிக்கு யுதிஷ்டிரனை தனியாக அனுப்பவதற்கு சகுனி திட்டமிட்டதில் ஏதோ சூழ்ச்சி இருக்கலாமோ என்று எனக்குப் படுகிறது. அவன் பாண்டவர் மீது வன்மம் சாதிக்கும் எண்ணம் கொண்டவனாயிற்றே!

-காட்சி மாற்றம்-

திருதராட்டினர் அரண்மனை.

திருத: மகனே துரியோதனா! அஸ்தினா புரத்துக்கு உரித்துடைய பாண்டவர்களின் பிரதிநிதி என்ற நிலையில் அவர்களைக் காப்பது என் கடமை. பீஷ்மர்! துரோணர், கிருபாச்சாரியார், விதுரர் ஆகியோரின் ஆலோசனைகளை நான் உதாசீனம் செய்யலாகாது. சகுனியுடன் சேர்ந்து உனது காரியங்களைச் செயற்படுத்து. ஆனால் சிவமகோற்சவத்துக்கு நான் அல்லது நீயும் துச்சாதனனும் செல்ல வேண்டும் என்று விதுரர் கருதுகிறார்.

துரியோ: அது சாத்தியமில்லை. யுதிஷ்டிரன் மட்டும் அங்கு செல்ல அனுமதியுங்கள்.

திருத: உன் மாமாவும் நீயும் இவ்வாறு ஏன் கோருகிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லையே!

துரியோ: நான் அஸ்தினாபுரியின் அரியணை ஏறுவதற்கு அதுதான் ஒரே வழி.

திருத: சரி பிதாமகர் பீஷ்மரின் அபிப்பிரா யத்தையும் அறியலாம்.

xxx

பீஷ்மர் ஓலை ஒன்றைப் படிக்கிறார். காவலன் வந்து திருதராட்டினர் வருவதாகக் கூறுகிறார்.

காவல: மகாராஜா தனிமையில்தான் தங்களை நாடி வருகிறார்.

பீஷ்ம: அவர் ஏன் வரவேண்டும்? அவசர மானால் தகவல் அனுப்பியிருந்தால் நானே போயிருக்கலாமே!

திருதராட்டினர் வந்து வணக்கம் செலுத்துகிறார்.

பீஷ்ம: மகாராஜா! தாங்கள் இறைவனைத் தவிர வேறு எவருக்குமே சிரம் தாழ்த்த வேண்டியதில்லை.

திருத: தங்களைப் பொறுத்தவரையில் நான் அன்று தங்களால் நடை பழக்கப்பட்ட சிறுவனே! மன்னவனானதனால் அந்த அன்பினை இழந்துவிட்டேனா?

பீஷ்ம: அப்படியெல்லாம் எதுவுமில்லை. வாருங்கள். அமருங்கள்.

துரியோ: யுதிஷ்டிரனை மன்னனாக்குவதை நான் விரும்பவில்லை என்று பலர் கருதுகின்றனர். எனது மகன் மீது எனக்கு அதிக பாசம் உண்டென்பது உண்மையே! இம்முறை வாரணாவதியில் இடம் பெறும் சிவமகோற்சவத்துக்கு யுதிஷ்டிரனை அனுப்பி, வருங்கால மன்னன் என்ற நிலையில் மக்கள் அபிமானத்தை அவன் பெறுவதற்கு வகை செய்யலாம் என்று கருதுகிறேன்.

பீஷ்ம: அந்த நினைப்பில் தங்கள் நடவடிக்கை சிறந்ததே.

திருத: யுதிஷ்டிரன் தனிமையில் செல்லாமல் துரியோதனனுடனும் துச்சாதனனுடனும் சென்றால் அவர்களுக்கிடையில் காழ்ப்புணர்வுகள் இல்லை என்று மக்கள் கருதுவார்கள்.

பீஷ்ம: இருப்பினும் மன்னர் தனது கடமைகளை நிறைவேற்றும் போது மக்கள் என்ன கருதுவார்களோ என்று அச்சங்கொள்ளலாகாது. துரியோதனனோ துச்சாதனனோ யுதிஷ்டிரனுடன் செல்ல வேண்டிய அவசியமில்லை. பாண்ட வர்கள் பயணத்திலிருந்து திரும்பியதும் அவர்களை வாரணாவதிக்குச் செல்லும்படி கூறுங்கள்.

-காட்சி மாற்றம்-

பாண்டவர்கள் அஸ்தினாபுரம் திரும்புகின்றனர். அமைச்சர்கள், மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய அரசவைக்கு அவர்கள் வருகின்றனர்.

விதுர: மகாராஜா! பாண்டவர்கள் தங்களுக்கு வணக்கம் செலுத்துகிறார்கள். ஏராளமான செல்வத்தைக் கொண்டு வந்துள்ளார்கள் மகாராஜா!

திருத: இறையருள் கிட்டுவதாக....

ஏராளமான ஆபரணங்கள், முடிகள் ஆகியவற்றை திருதராட்டினர் முன் குவிக்கின்றனர்.

துரியோ: *(சகுனியிடம்)* நாம் சீரழித்து வந்த செல்வத்தை விட மேலும் அதிகமான பொருட்களை இவர்கள் கொண்டு வந்து விட்டார்களே! இவர்களின் செல்வாக்கைச் சிதைக்க நாம் கொண்ட செயல்கள் பலனளிக்கவில்லையே மாமா.

சகுனி: யுதிஷ்டிரனின் தாராளத்தைப் பற்றி உனக்குத் தெரியாதா? பொறுத்திருந்து பார்.

மக்கள் வாழ்த்தொலி.

திருத: பாண்டவர்களின் சாதனை என்னை மகிழ்ச்சியில் திளைக்க வைக்கிறது. அவர் களுக்கு உலகளாவிய புகழ் கிடைக்க ஆண்டவனை வேண்டுகிறேன். பாண்டவர் களின் வெற்றிக்காக சிறையிலுள்ள கைதிகளை விடுதலை செய்யுங்கள். இந்த வெற்றியைக் கொண்டாடும் பொருட்டு அந்தணர்களுக்கு தானம் வழங்குங்கள்.

யுதிஷ்: தங்கள் காலடியில் குவிக்கப்பட்டுள்ள அத்தனை திரவியங்களும் அஸ்தினாபுர மக்களின் உடமை பெரியப்பா!

திருத: மகனே! உனது பெருந்தன்மையை மெச்சுகிறேன். இருப்பினும் அத்தனையும் உனக்குரிய சொத்தல்லவா?

யுதிஷ்: இவற்றை வைத்து நான் என்ன செய்யப் போகிறேன்? தங்கள் வாழ்த்து ஒன்றே எனக்கு பெரும் பொக்கிஷம் பெரியப்பா!

திருத: அஸ்தினாபுரிக்கு ஏற்ற அரசன் நீயே மகனே! இம்முறை வாரணாவதியில் நடைபெறும் சிவமகோற்சவத்தில், வருங்கால மன்னன் என்ற ரீதியில் நீயே சென்று வா. அரசகுமாரர்கள் இந்த விழாவில் கலந்துகொண்டு வெகு காலமாகிவிட்டது. பொது மக்களைப் பார்த்து அவர்களுடன் பழகும் வாய்ப்பு உனக்கு அப்போது ஏற்படும்.

விதுர: மகாராஜாவும் இளவரசருடன் செல்வது நலமென எனக்குப்படுகிறது.

பீஷ்ம: அது அவசியமாகப் படவில்லை எனக்கு.

திருத: துரியோதனனையும் அங்கு அனுப்பி வைக்கலாம் என்று விரும்பினேன். ஆனால் நமது திரைசேரி காலியாகிக் கிடக்கிறது. பாதுகாப்பின் பொருட்டு அவன் இங்கு நிற்பதுதான் நல்லது.

துரியோ: எனது அருமைச் சகோதரர்கள் தங்குவதற்கு ஏற்ற சிறப்பான மாளிகையை உருவாக்கும் பொறுப்பை புருவஞ்சனரிடம் ஒப்படைத்திருக்கிறேன். அந்த அழகான அமைப்பினை அவரை யன்றி வேறு எவரும் நிர்மாணிக்க முடியாது.

யுதிஷ்: அவ்வாறானால் நிச்சயமாக அங்கு சென்று என் அருமைத் தம்பியின் நல்லெண்ணத்துக்கு மதிப்பளிக்கத் தவறமாட்டேன்.

பின்னணிப்பாடல்:

அறியாமை பேரவாவினை வளர்த்திடும்
வெறியாய் மாறி வெம்பகை சேர்த்திடும்
கொடியவர் எண்ணம் கொழுந்து விட்டெரிந்தே
குவலய மதனை பிடிசாம்பராக்கிடும்.

(இன்னும் வரும்)

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.

அருள் ஜுவலர்ஸ்
இல. 3, செட்டியார் தெரு,
கொழும்பு—11.
தொ.பேசி: 436331

தருவது லியோ-டெ

காடு-மலை எதுவானாலும்... கடும் விரைவில் செல்வதற்கு!

அடர்ந்த காடு, சகதி நிறைந்த சதுப்பு நிலம், செதிலான பனிப்படலம் ஆகிய கஷ்டமான பாதைகளில் தங்குதடையின்றி லாவகமாகச் செல்லக்கூடிய இந்த மோட்டார் சைக்கிள்கள் இப்பொழுது அமெரிக்காவில் சில மாநிலங்களில் பவனி வருகின்றன. 2 சிலிண்டர் கொண்டதும் அருகிணைப்புக் கொண்டதுமான ← இந்த வாகனம் 649 CC அளவுடையது.

இரண்டாவது உலகப் போரின்போது சோவியத் ← யூனியனால் 1944ல் அறிமுகம் செய்யப்பட்ட 'யூரல்' மோட்டார் சைக்கிளின் தன்மையில் தற்போது சந்தைக்கு வந்திருக்கும் நவீன 1994 மொடல் வண்டியின் விலை 6,000 அமெரிக்க டொலராகும்.

Kala
JEWELLERY
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
61 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
433686

வருகிறதா பொம்பர்?

தினமுரசு வாரமலர்

அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கையில் ஊசலாட்டமான ஒரு நிலைப்பாடு இருந்து வருகிறது. உள்நாட்டு விவகாரங்களில் ஜனாதிபதி பில் கிளின்ரன் அதிக கவனம் செலுத்த வேண்டிய நிர்ப்பந்தம் இருப்பதனாலேயே இந்த மாற்றம் இருப்பதாக அவதானிகள் கருதுகின்றனர்.

பொஸ்னியாவில் தொடரும் மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்த அமெரிக்கா தீர்க்கமான நடவடிக்கை எடுக்கலாம் என்று ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவ்வாறு எதுவும் நடந்து விடவில்லை.

ஏப்ரல் இறுதி வாரத்தில், பொஸ்னிய முஸ்லிம்களுக்கான பாதுகாப்புக் குறித்து அமெரிக்க நிர்வாகம் குரல் கொடுத்திருக்கிறது. மூன்று வாரங்களாக சேர்பியர்களின் பீரங்கித் தாக்குதல்களுக்கு இலக்காகித் துன்பப்பட்டுக் கொண்டிருந்த கொரான்டே பிரதேச முஸ்லிம்களுக்கு அபயகரம் நீட்டப்பட்டுள்ளது.

அந்தப் பிரதேசத்திலிருந்து சேர்பியப் படைகள் 3 கிலோமீட்டர் விலகுவதுடன் உடனடியாக பீரங்கித் தாக்குதல்களையும் நிறுத்திவிட வேண்டும். ஐ.நா. அமைதிப்படையினர் அந்த நகரத்தில் மனிதாபிமான சேவைகளைத் தொடங்குவதற்கு இடையூறு எதுவும் இருக்கலாகாதென அமெரிக்கா எச்சரிக்கை செய்தது. இதனை மீறினால் 'நேட்டோ' (வட அத்திலாந்திக் உடன்பாட்டு அமைப்பு) விமானங்கள் சேர்பியர்களின் அரண்களை குண்டு வீசித் தாக்கும் என்பதுதான் அமெரிக்காவின் எச்சரிக்கையின் மற்றுமொரு பிரதான அம்சமாகும்.

அமெரிக்காவின் அறைகூவலுக்கு ஓரளவு பலன் கிடைத்திருப்பதாகத் தெரிகிறது. சேர்பியப் படைகள் கொரான்டே நகரப் பிராந்தியத்திலிருந்து பின்வாங்குவதாக ஐ.நா. பார்வையாளர்கள் அறிவித்துள்ளனர்.

நீலத்திரைக் கடல் மீதினிலே...

நீரிலும் தரையிலும் வாழும் பிராணிகளுள் மிகப்பெரியதாகக் கணிக்கப்படுவது திமிங்கிலம் எனப்படும் கடல் பிராணியாகும்.

இவை மீன் இனமாகக் கருதப்பட்டாலும் குட்டி ஈன்று பால் கொடுப்பவை. நீலம் மற்றும் கருமைக் கொத்த மஞ்சள் வர்ணமுடைய திமிங்கிலங்கள் 'பலியனோப் டெரா மஸ்கியுலஸ்' என்ற பெயரால் அழைக்கப்படுகின்றன. இவை 190 தொன் எடை கொண்டவை. 27.6 மீட்டர் (90 1/2 அடி) நீளம்வரை இவை வளரும்.

கலிபோர்னியா 'சீ வேர்ல்ட்' (கடல் உலகம்) எனும் இடத்தில் காணப்படும் இந்த ஆட்கொல்லித் திமிங்கிலம் சமுத்திரத்தில் 55.5 கிலோமீட்டர் (34.5 மைல்) வேகத்தில் செல்லக்கூடியது.

இது ரொம்ப வசதி

கல்லு ஒன்று மாங்காய் இரண்டு

பிரயாணமும் ஒரு பிரச்சனையா? அதனால் ஆடைகளைக்கூட துவைத்துப் போட நேரமில்லையா?

துவைத்தபடி நடக்கலாம்

இறைச்சி-மிளகுப் பொரியல்

தேவையானவை:
ஆட்டிறைச்சி-1 இறாத்தல்
உருளைக்கிழங்கு- 3
பம்பாய் வெங்காயம்- 2
தக்காளி சுவைக்கூட்டு-2 மே.கரண்டி (சோஸ்)
மிளகு- 2 தே.கரண்டி
பூண்டு-1 முளை
எண்ணை- (பொரிப்பதற்கு- 4மே.கரண்டி)
உப்பு- தேவைக்கேற்ப.

செய்முறை:

இறைச்சியை ஒரு அங்குல நீளம் 1/8 அங்குல அகலம் கொண்டதாக வெட்டிக் கொள்ளவும். மிளகையும் பூண்டையும் தட்டி நசித்து இறைச்சியுடன் கலந்து 15 நிமிடம் வரை தனியாக வைத்திருக்கவும். உருளைக் கிழங்கைத் தோலுரித்து அரை வேக்காட்டுடன் எடுத்து நீள துண்டுகளாக்கிக் கொள்ளுங்கள்.

அடுப்பில் ஒரு பாத்திரத்தை ஏற்றி 2 மே.கரண்டி எண்ணையை விட்டு கொதிக்கும் போது இறைச்சிக் கலவையுடன் உருளைக்கிழங்கையும் போட்டு வதக்கவும். 2 நிமிடங்கள் கொதி நிலையிலிருந்த பின் அடுப்பின் சூட்டை அரை வீதம் தணித்து, தேவைப்படுமானால் எண்ணையும் விட்டு நன்றாகப் புரட்டவும். வெங்காயத்தையும் நீள வடிவில் அரிந்து இறைச்சியுடன் பாத்திரத்தில் போடவும். கிளறிக்கொண்டே தக்காளி சுவைக்கூட்டினையும் கலவையில் சேர்க்கவும். மிளகுத் தூளையும் சேர்த்தும் கொள்ளவும். இறைச்சி நன்றாக வெந்ததும் உருசிக்கேற்ப உப்பிட்டுக்கொண்டு இறக்கவும்.

சோறுடன் சேர்த்து உண்ணலாம். இது 6 பேருக்குப் பரிமாறப் போதுமானது.

பண்டைய காலங்களில் உலகில் காணப்பட்ட பல உயிரினங்கள் காலத்தின் கோலத்தினால் அழிந்து போய்விட்டன. இயற்கையினால் மட்டுமல்லாமல் மனிதர்களின் கொடிய செயல்களினாலும் அரிய பல உயிரினங்கள் விருத்தியடைய முடியாமல் அழிந்தொழிந்து போகின்றன.

வரிக்குதிரைகளில் ஒரு தனிவகை - 'குவாஜா' இனம். இந்த இனம் 100 ஆண்டுகளுக்கு முன்னர் அழிந்து போய்விட்டது. இந்த இனம் அழிந்த போதிலும் அவற்றின் மரபுக் கூறுகள் அழிந்து விடவில்லை என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். ஏனைய வரிக்குதிரைகளின் சில அணுக்களில் அவை கலந்து பரந்து, விட்டிருக்கலாம் என்று அவர்கள் கருதுகின்றனர்.

மறுபடியும் பிறக்கவைத்தல்

அழிந்து போன அதே இனத்தைப் போன்று புதிய பிராணிகளை ஆய்வுகூடத்தில் உற்பத்தி செய்ய முடியும் என்ற முடிவுக்கு விஞ்ஞானிகள் இப்பொழுது வந்துள்ளனர். இன விருத்தியற்றுப் போன 'குவாஜா' வரிக்குதிரைக்கு ஒப்பான ஓர் இனத்தை உற்பத்தி செய்வதில், தென் ஆபிரிக்காவில் ஓர் ஆய்வுக்குழு வெற்றி கண்டிருக்கிறது. அந்த ஆய்வுக்குழுவினரால் உற்பத்தி செய்யப்பட்ட வரிக்குதிரையை அதன் கன்றுடன் இங்கே காணலாம்.